சுவடி : 31
ஏடு : 7
மார்ச்சு 2009

*ஆசிரியர்*
வே. ஆனைமுத்து

*ஆசிரியர் குழு*
து. தில்லைவனம்
க. முகிலன்
தமிழேந்தி
சங்கமித்ரா
வையவன்
சா. குப்பன்
சி. நடராசன்
மங்கலம் அரசன்
வாலாசா வல்லவன்
ஆ. முத்தமிழ்ச்செல்வன்

*அனைத்துத் தொடர்புகளுக்கும்:*
'சிந்தனையாளன்'
19. முருகப்பாதெரு
சேப்பாக்கம்
சென்னை – 05.
தொலைபேசி :
2852 2862

*அலுவலகப் பொறுப்பு*
ப. வடிவேலு

**ஆசிரிய உரை**

# ஈழத்தில் இலங்கை அதிபர் நடத்திடும் தமிழினப் படுகொலைக் குற்றத்துக்கு எதிராக

# அனைத்து நாடுகள் குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) முறையீடு செய்வோம்!

சிந்தனையாளன் 2009 பிப்பிரவரி இதழில், ஈழ விடுதலை தொடர்பாக விரிவான ஆசிரிய உரை எழுதப்பட்டிருந்தது.

அதில் ஈழத்தமிழ் மக்கள்பேரில் வான்படை, கடற்படை, தரைப்படை ஆகிய முப்படைகளை ஏவி, தன் நாட்டுக் குடிமக்களான ஈழத் தமிழ் மக்களையும், தமிழீழ விடுதலைப் புலி வீரர்களையும் 2005 நவம்பர் முதல் இலங்கை அதிபர் இராசபக்சா கொன்றுகுவிப்பதைக் கண்டனம் செய்ததுடன், உடனடியாக உலக மானிட உரிமைக்காப்பு அமைப்புக்கு முறையீடு செய்து அதைத் தடுத்து நிறுத்திடத் தமிழீழ விடுதலையில் அக்கறை கொண்டோர் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம்,

இந்த ஏற்பாட்டை உடனடியாகச் செய்தல் வேண்டும் என வற்புறுத்துகிறோம்,

அத்துடன் கடந்த ஆறு ஆண்டுகளாக உலகஅளவில் இயங்கும் **அனைத்து நாடுகள் குற்றவியல் நீதிமன்றத்திலும்** (International Criminal Court - ICC) ஈழத் தமிழரைப் படுகொலை செய்யும் 1, இலங்கை அதிபர் மகிந்த இராசபக்சா, 2. அதிபருடைய தலைமை அரசியல் ஆலோசகர் பாசில் இராசபக்சா, 3. இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபயா இராசபக்சா, 4. போர்ப்படைத் தலைவர் சரத் பொன்சேகா ஆகியோர் பேரில்.தம் நாட்டுச் சொந்தக் குடிமக்களைப் படுகொலை செய்ததையும் தொடர்ந்து படுகொலை செய்வதையும் குற்றவியல் தண்டனைக்குரிய குற்றங்களாகச் சுமத்தி உடனேயே குற்றவியல் வழக்குத் தொடர முடியும் - அப்படி செய்யவேண்டும் என நாம் கருதுகிறோம்.

ஏற்கெனவே உள்ள அனைத்து நாடுகள் நீதிமன்றம் (ICJ) இரண்டு சுதந்தர நாடுகளுக்கிடையே எழும் வழக்குகளை மட்டுமே விசாரணை செய்து தீர்ப்பு வழங்கமுடியும்.

ஆனால் அனைத்து நாடுகளின் குற்றவியல் நீதிமன்றம் (ICC) தனிப்பட்டவர்களைக் கொல்லுகிற, அரசு இயந்திரத்தை இயக்குகிறவர்களை (ஆட்சியாளர்களை) அவர்கள் செய்த கொலைகளுக்காக விசாரணை நடத்தி தண்டனை வழங்கும் அதிகாரத்தைப் பெற்று இருக்கிறது என நாம் கருதுகிறோம்.

எனவே தமிழினத்தைப் படுகொலை செய்யும் குற்றத்தை இழைத்துள்ள மேற்கண்ட இலங்கை அதிபர், அதிபரின் தலைமை அதிபர், படைத்துறை அமைச்சர், படைத் தலைவர் ஆகிய நான்கு பேரும் 1. 2005 நவம்பர் முதற்கொண்டு தமிழீழ மண்ணில் தமிழர்களைக் கொன்று குவிக்கிறார்கள். 2. தற்போது 2009 சனவரிமுதல் இலங்கை அரசுப் பாதுகாப்பு அரணில் பாதுகாப்புக்காக வந்த தமிழர்களில் 2000 பேரைக் கொன்ற குற்றத்தை இழைத்திருக்கிறார்கள்; 3. இப்போது இலங்கையின் குடிமக்களாக உள்ள தமிழின மக்களை இலங்கை அரசே கொல்லுவது மனித இனப் படுகொலைக் குற்றமாகும் என்று எடுத்துக் காட்டி, உடனடியாக அனைத்து நாடுகள் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் (Criminal Case) தொடுத்து, இவர்கள் அனைவரும் மனிதக் கொலைக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, இவர்களுக்குக் குற்றவியல் தண்டனை அளிக்கப்பட ஆவன செய்திட உலகத் தமிழர்கள் முன்வரவேண்டும் என வேண்டுகின்றோம்.

1. 3. 2009

**- வே. ஆனைமுத்து**

# ஈழ விடுதலைச் சிக்கல் பற்றிய மா.பெ.பொ.க.வின் நிலைப்பாட்டை எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள்!

"தமிழீழம் தனிச் சுதந்தர நாடாக அமைக்கப் படுவதுதான் ஈழத் தமிழர் படும் அல்லலுக்கு ஒரே தீர்வாகும்" என்பது இலங்கை வட்டுக்கோட்டை மாநாட்டின் தீர்மானம் ஆகும்.

இதில் நம்பிக்கை உள்ள எல்லோரும் தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி (TULF) என்ற பேரால் 1977 இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர், அத் தேர்தலில் வெற்றிபெற்ற மேற்படி முன்னணியின் உறுப்பினர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு உண்மையானவர்களாக விளங்கவில்லை, அதற்கு மாறாக இலங்கை அரசினர் முன்மொழிந்த மாவட்டப் பேரவைகள் (District Councils) என்கிற உள்ளாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்ள முடிவெடுத்தனர்.

கல்வியைத் தரப்படுத்துதல் என்கிற பாரபட்சம் நிறைந்த 1972ஆம் ஆண்டைய இலங்கைச் சட்டத்தின் கொடுமைக்கு ஆளான தமிழீழ மாணவர்களும் இளைஞர்களும் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் உண்மையான பேராளர்களாக விளங்கிப் பல்வேறு பகுதிகளில், தனித்தனிக் குழுக்களை ஏற்படுத்திக்கொண்டு, தனித்தனித் தலைமையில் இயங்கினர். தொடக்க நிலையில் இது தவிர்க்க முடியாததுதான்.

இதற்கிடையில் இலங்கை அரசினர் அவசர கால ஆட்சியை (Emergency) அமல்படுத்தி தமிழின இளைஞர்களையும், தலைவர்களையும் கைது செய்வதும் சிறைப்படுத்துவதும், கொடுமைப்படுத்துவதும்; தமிழ்ப் பெண்களை மானபங்கப் படுத்துவதும் அதிகரித்தன, இந்தக் கொடுமையைத் தாங்க முடியாமல் ஆயிரக் கணக்கான இளைஞர்களும், வசதி படைத்த தமிழர்களும், கல்வித் தகுதி பெற்றவர்களும் இலங்கையை விட்டு, 1981இல் வெளியேறினர். பலர் தமிழ்நாட்டுக்கு வந்து, தமிழினத் தலைவர்களைச் சந்தித்து, இந்திய அரசின்மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் தந்து தங்களுக்கு நேரிட்டுள்ள துன்பத்துக்குப் பரிகாரம் கோரினர்,

1981க்கு முன்னரே, 1972இல் தந்தை செல்வநாயகம் அவர்களும் அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களும் தமிழகத்திற்கு வந்து தந்தை பெரியார் அவர்களையும் மற்றுமுள்ள தமிழினத் தலைவர்களையும் நேரில் கண்டு பேசி, அப்போது தங்களுக்கு நேர்ந்த அநீதியை இந்திய அரசுமூலம் களைந்திட, இந்திய அரசினர் இலங்கை அரசினர்க்கு அழுத்தம் தரத் தமிழ்நாட்டினர் ஆவன செய்யவேண்டும் எனக் கோரினர், தந்தை பெரியார் அவர்கள், "தமிழ்நாட்டைச் சேர்ந்த நாங்கள் இந்திய அரசின் அடிமைகள்; இப்படிப்பட்ட நாங்கள் இலங்கைவாழ் தமிழர்களுக்கு என்ன உதவி செய்யமுடியும்?" என செல்வநாயகம் அவர்களிடமே தெரிவித்தார்,

1972க்குப் பிறகு அதே போன்ற உதவியை நாடித்தான் ஈழத் தமிழ்த் தலைவர்கள் தமிழிகத் தலைவர்களை 1981இல் அணுகி ஆதரவு கோரினர்,

இந்தச் சூழலில், சென்னையில், பெரியார் திடலில், "உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்" தொடங்குகிற மாநாட்டினை, அறிஞர் பெருஞ்சித்திரனார் ஏற்பாடு செய்திருந்தார். 8.11.1981இல் அம் மாநாட்டைத் தொடங்கி வைக்கும் பணியை வே, ஆனைமுத்து ஆகிய எனக்கு அவர்அளித்திருந்தார். அன்று மாநாட்டு மேடையில் அ. அமிர்தலிங்கம், இலங்கைப் பேராசிரியர் க.பொ. இரத்தினம் , பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை மற்றும் பலர் வீற்றிருந்தனர். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தினைத் தொடங்கி வைத்துப் பேசிய நான்,

"அமிர்தலிங்கம் அவர்களே! இலங்கைத் தமிழர் களுக்கு உதவும்படிக் கோரி, தமிழகத் தலைவர்களிடம் கோரிக்கை வைப்பதற்காக ஏன் இங்கே வந்தீர்கள்? தமிழகத் தலைவர்களில் ஒருவர் காலையில் இந்திராகாந்தியின் காலடியில் விழுகிறார்; அவர் எழுந்தவுடன் இன்னொரு தலைவர் அதே இந்திராகாந்தியின் காலடியில் மாலையில் விழுகிறார்; இப்படிப்பட்ட அடிமைத் தலைவர்களை நம்பி ஏன் இங்கு வந்தீர்கள்? இலங்கைக்குத் திரும்பிப் போங்கள்; அங்கே உள்ள ஈழத் தமிழர்களை முதலில் ஒன்று சேருங்கள், இலங்கைக்கு தோட்டத் தொழிலாளர்களாக வந்த தமிழ் நாட்டுத் தமிழர்கள் இலட்சக்கணக்கில் அங்கு உள்ளனர். அவர்கள் பள்ளர், பறையர், தேவர், வன்னியர், நாடார், வண்ணார், மருத்துவர் எனப் பல உள்சாதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களைப் பார்த்து நீங்களெல்லாம் கள்ளத் தோணி, சின்னச்சாதி, பனங்கொட்டை என்றெல்லாம் இழிவாகப் பேசிக் கொடுமைப் படுத்தினீர்கள், இப்போது அவர்களையும் சேர்த்துக்கொண்டு இலங்கை அரசை எதிர்த்து அங்கே போய்ப் போராடுங்கள்"

என, ஆத்திரத்தோடு குறிப்பிட்டேன். மாநாட்டுத் தலைவர் பெருஞ்சித்திரனார் என் கருத்தை வழிமொழிந்தார். என் பேச்சு முழுவதும் தமிழர்களின் ஒற்றுமைக் குறைவைச் சுட்டிக் காட்டுவதாகவே அமைந்திருந்தது.

அன்றைய மாநாட்டுக்குப் பார்வையாளராக வந்திருந்த தமிழகச் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினர் செஞ்சி ந. இராமச்சந்திரன் மேடைக்கு வந்து இதுபற்றி என்னிடம் வினா எழுப்பினார். ''எங்களையும் சேர்த்துக் காலை வாருகிறீர்களே!'' என்று சினத்தோடு அவர் கேட்டார். அடுத்தநாள் அவருடைய அறைக்குச் சென்று விரிவாக இதுபற்றிப் பேசினோம். என் கருத்து தவறானது என்று அவரால் உறுதிப்படுத்த முடியவில்லை.

**1981இல் ஈழத்து இளைஞர்களால் ஆயுதப் போராட்டம் தொடங்கப்படவில்லை என்பதையும், 1983 ஜூலையில்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது என்பதையும் நாம் அறிவோம்.**

1983இல் விடுதலைப் புலிகள், பிளாட் அமைப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பினர் ஆகியோர் தமிழகத்தின் பல இடங்களில் தங்கியிருந்தனர். 1983இல் ஆகஸ்டில் மா.பெ.பொ.க. கட்சிப்பணி தொடர்பாக வே. ஆனைமுத்து, சீர்காழி மா. முத்துச்சாமி, முனைவர் து. மூர்த்தி ஆகியோர் குடந்தையில் தங்கியிருந்தோம். எதிர்பாராத தன்மையில் சுரேஷ் என்கிற ஈழத்து இளைஞர் (முழுப்பெயர், சுரேஷ் பிரேமச்சந்திரன், இப்போது இவர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்; புலிகளின் ஆதரவாளர்) எங்கள் அறைக்குள் நுழைந்தார். அவர், ''ஈழத்தைச் சார்ந்த போராளிக் குழுவினர் பலர் தமிழகத்தின் பல இடங்களில் தங்கியிருக்கிறோம்; எங்களில் பலரும் ஆயுதம் வைத்திருக்கிறோம்; ஒவ்வொருவரும் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறோம்; எங்களுக்குள் வருத்தம் இருக்கிறது; எங்களுக்குள் ஒற்றுமை வராவிட்டால் நாங்கள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டு அழிந்துவிடுவோம். உங்கள் கட்சியினர் முயற்சித்து எங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். நான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பைச் சார்ந்தவன்'' என்று கூறினார்.

"நீங்கள் சொல்லுவது எங்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது, எங்கள் அமைப்பின் சார்பில் நாங்கள் மூவர் மட்டுமே முடிவு சொல்ல இயலாது, நாளை மறுநாள் விழுப்புரத்தில் எங்கள் கட்சியின் பொதுக்குழு நடைபெறுகிறது. நீங்களும் அங்கே வாருங்கள். தேவைப் பட்டால் நீங்களும் அங்கே பேசலாம்" என்று அன்போடு தெரிவித்தோம்.

1983 ஆகஸ்டு 20, 21 நாள்களில் விழுப்புரத்தில் நடைபெற்ற மா.பெ.பொ.க. பொதுக்குழுவில் இரண்டாம் நாள் தோழர் சுரேஷ் பேச வேண்டும் என எங்கள் கட்சித் தோழர்கள் விரும்பினார்கள். அவரும் பேசினார்; தோழர்கள் விடுத்த வினாக்களுக்கு விடை பகர்ந்தார், எங்கள் இயக்கத்தின் மூத்த தலைவர் சேலம் அ, சித்தய்யன், மதுரை நடராசன் முதலானோர், ''ஈழப் போராளிகளை ஒற்றுமைப்படுத்த நம்மால் ஆனதைச் செய்யவேண்டும்'' எனத் தீவிரமாக முன்மொழிந்தனர்.

எங்கள் பொதுக்குழு அங்கே நடைபெறுகிற விவரம் தெரிந்த செஞ்சி ந. இராமச்சந்திரன் அன்று மாலை அங்கே வந்து, பொதுக்குழுவின் முடிவுகளை என் மூலம் கேட்டறிந்து கொண்டு, அடுத்த நாளே தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் விவரமாகக் கூறியுள்ளார். கலைஞர் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று, ஈழத்திற்கு ஆதரவாக, முதன் முதலாக சென்னை அண்ணா மேம்பாலத்தில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு மாபெரும் பேரணி நடத்தினர்.

ஈழப் போராளிகள் குழுத் தலைவர்கள் எல்லோர்க்கும் தனித்தனியாக அழைப்பு மடல் எழுதி எங்கள் அச்சகத்தின் மேலாளர் - அப்போதைய வேலூர் நகரச் செயலாளர் மு. சுகுமார் மூலம் இரண்டு தடவைகள் விடுத்து வைத்தோம். ஈ.பி.ஆர்.எல்.எப் உள்பட எந்தக் குழுவினரும் எங்களுக்கு மறுமொழி தரவுமில்லை; எங்ளைப் பொருட்படுத்தவு மில்லை.

ஈழ விடுதலையில் அக்கறை உள்ள தமிழகத் தமிழர்கள் உண்மையான அக்கறை உள்ளவர்கள் என்பதில் எங்களுக்கு எப்போதும் அய்யமில்லை. ஆனால் ஒவ்வொரு கட்சியினரும் அல்லது குழுவினரும் ஏதாவது ஓர் ஈழக் குழுவினரை முதன்மைப்படுத்தி அவர்களை மட்டுமே ஆதரிக்கவேண்டும்; தூக்கிப் பிடிக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு எப்போதும் உடன்பாடில்லை. நாங்கள் எந்த அமைப்பையும் தூக்கிப் பிடிக்கவுமில்லை, நிற்க.

எங்கள் கட்சியின் முதன்மையான கோரிக்கையாக 1978 முதல் வகுப்புவாரி இடஒதுக்கீட்டுக் கோட்பாட்டை வைத்து இந்தியா முழுவதிலும் சென்று செயல்படுகிறோம் என்பது பலருக்கும் தெரிந்த செய்தியாகும். எடுத்த எடுப்பிலேயே, 1978 ஏப்பிரலில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளில் வகுப்புரிமை பற்றிய அறிக்கைகளை அச்சிட்டுக்கொண்டுதான் நாங்கள் வடநாட்டுப் பயணத்தை மேற்கொண்டோம்.

ஏனெனில், இந்தியா முழுவதிலும் உள்ள ஒடுக்கப் பட்டோருக்கான பொதுவான கோரிக்கையை, பல மொழிகளைப் பேசும் எல்லா மக்களுக்கும் தெரிவிக்காமல் - இந்தியா முழுவதிலும் ஆதரவு திரட்ட முடியாது என்பது எங்களின் திடமான நம்பிக்கை.

இதை உணர்ந்த நாங்கள் 1986 முதல் தமிழ், ஆங்கிலம், இந்தி, உருது, கன்னடம் முதலான மொழிகளில் வகுப்புரிமை பற்றிய அறிக்கைகளை அச்சிட்டுக்கொண்டு எல்லா மொழி பேசுகின்ற மக்களிடமும், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அவற்றைப் பரப்பினோம்.

1985 - 1987இல், எங்களுக்கு வாய்ப்பு நேரும் போதெல்லாம் தில்லியில் North Avenue M.P.s, Club என்கிற விடுதியின் மாடியில் ஈழ விடுதலை ஆதரவுக் கூட்டங்களை நடத்தினோம். தமிழரல்லாத பிற மொழிக் காரர்கள் சிலர்

அங்கு வந்தாலும் அவர்களுக்கு ஈழச் சிக்கல் பற்றிப் புரிய வைப்பதற்கு நாங்கள் எந்த அறிக்கையையும் வழங்க வில்லை.

ஈழத் தமிழர் சிக்கல் பற்றி வடமாநிலங்களில் உள்ளவர்கள் பொதுவாகப் பெரிய அளவில் அறியாமையில் தான் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டோம். எப்படி? "தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குப் பிழைக்கப் போன தமிழர்களுக்குத் தனி நாடு ஒரு கேடா" என்றுதான் அவர்களில் பெரும்பாலோர் நினைக்கிறார்கள். வடநாட்டுப் பொதுமக்கள் மட்டுமின்றி, அங்குள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், இளைய தலைமுறையைச் சார்ந்த பத்திரிகை யாளர்கள், இளைய தலைமுறையைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அப்படியே கருதுகிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். எனவே, ஈழ விடுதலையில் அக்கறை உள்ள தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஈழ விடுதலை பற்றிப் பல மொழிகளிலும் அறிக்கைகளை அச்சிட்டுக் கொண்டு எல்லா மாநிலங்களுக்கும் சென்று ஆதரவு திரட்டிட வேண்டுமென வற்புறுத்தி, 1988 பிப்பிரவரியில் "சிந்தனையாளன்" இதழில் விரிவான கட்டுரையை வெளியிட்டோம். இதற்கு எந்தவிதமான எதிர்வினையும் தமிழ்நாட்டில் இல்லை. இவை இராசிவ் காந்தி படுகொலைக்கு முந்தியவை. ஜார்ஜ் பெர்னான்டஸ் முதலானோர் முன்னின்று ஈழ விடுதலை பற்றித் தில்லியில் கூட்டிய ஒரு நிகழ்ச்சிக்கு மா.பெ.பொ.க. வினர் உள்படப் பலர் சென்றார்கள் என்பதைத் தவிர, வேறு தொடர் நடவடிக்கை எதுவும் தமிழகத் தமிழர்களால் வடநாட்டிலோ, தில்லியிலோ மேற்கொள்ளப்பட வில்லை.

அடுத்து 1991 அக்டோபர் 17, 18, 19இல் தில்லியில் மவுலங்கர் மன்றத்தில் 6 மாநாடுகளை மா.பெ.பொ.க.வினர் நடத்தினோம்.

19.10.1991 அன்றைய மாநாட்டில் பா.ம.க.வினர் 400 பேர் பங்கேற்றனர். 20.10.1991இல் மா.பெ.பொ.க. - பா.ம.க. சார்பில் தில்லி போர்ட்கிளப் திடலில் வகுப்புரிமைப் பேரணியை நடத்தினோம். அதே நேரத்தில் உத்தராஞ்சல் மாநிலப் பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்தவர்கள் தங்கள் கோரிக்கையை விளக்கிப் பல இந்திய மொழிகளில் அச்சிட்ட அறிக்கைகளை எல்லோருக்கும் (தமிழில் இல்லை) வழங்கினர். இது பல மொழிகளில் அறிக்கை வெளியிட வேண்டும் என்கிற எங்கள் எண்ணத்திற்கு மேலும் வலுச் சேர்த்தது.

அதே சம காலத்தில், கருநாடகத்துக்கும், தமிழகத்துக்கும் இடையேயான காவிரிச் சிக்கல் தமிழரைத் தத்தளிக்க வைத்துக் கொண்டிருந்தது. கருநாடக அரசினர் காவிரிச் சிக்கலில் தங்களுக்குரிய நியாயத்தை விளக்குகிற தன்மை யில் பல இந்திய மொழிகளில் அச்சிடப்பட்ட அறிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், கட்சித் தலைவர் களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வழங்கிக் கொண்டிருப் பதை அறிந்தோம். தமிழ்நாட்டு அரசினரும் தலைவர்களும் அவ்வாறு செய்யவேண்டும் என்று நாங்கள் கருத்துத் தெரிவித்தோம்.

ஈழச் சிக்கலுக்கும் இதுபோல் செயல்பட வேண்டு மென்று 1991 நவம்பரில் முயற்சித்தோம்.

1990 முதல் எங்களுக்கு அறிமுகமான ஈழத்துக் காந்திய சிந்தயையாளர் ச.அ. டேவிட் அவர்களை அழைத்து, "நீங்கள் போதிய நிதி வசதி ஏற்பாடு செய்ய முடியுமானால் உங்கள் சார்பில் இருவரும், மா.பெ.பொ.க. சார்பில் இருவரும் - ஆறு மாத காலத்திற்கு அசாம், வங்காளம், பீகார், பஞ்சாப், தில்லி, கருநாடகம் முதலான இடங்களில் - 1978 முதற்கொண்டும், 1986 முதற்கொண்டும் எங்களுக்கு உள்ள அறிமுகத்தை வைத்துக்கொண்டு ஆங்காங்கே உள்ள கட்சித் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரியையாளர்ளுக்கும், பொது மக்களுக்கும் ஈழத் தமிழர் யார்? இலங்கைத் தோட்டத் தொழிலாளத் தமிழர் யார்? ஈழவிடுதலையின் நியாயம் என்ன? இதற்கு இந்திய அரசு எப்படி முட்டுக்கட்டை போடுகிறது? இந்திய அரசு இதில் அக்கறையுடன் செயல்பட வைப்பதற்குப் பல இந்திய மொழிக் காரர்களும், பல மாநிலத்தவரும் நாடாளுமன்றத்தில் ஏன் குரல் எழுப்ப வேண்டும்? என்பதை எல்லாம் விளக்க வேண்டும்" என்று கூறி அவருடைய ஒத்துழைப்பைக் கேட்டேன். அவரால் பொருள் வசதி செய்ய முடியவில்லை என மூன்று மாதங்கள் கழித்துக் கூறினார். இவை எல்லாம் பழங்கதைகள்தாம்.

இவற்றையே பேசிக் கொண்டிராமல் 1994 முதல், ச.அ.டேவிட்அவர்களும், நாங்களும் இணைந்து நடத்தும் "பெரியார் ஈரா" ஆங்கில மாத ஏட்டின்மூலம் மூன்று கோரிக்கைகளை விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலையில் அக்கறை உள்ளவர்களுக்கும் முன் வைத்தோம். அவற்றுள் ஒரு கோரிக்கை தமிழீழ வங்கி தொடங்கப்பட்டுப் பெரிய அளவில் நிதி திரட்டப்படவேண்டும் என்பது. இதை ஓரளவில் விடுதலைப் புலிகள் செயல்படுத்தி உள்ளனர். இரண்டாவது கோரிக்கையாக, அரசியல் மேதைத்தன்மை (Statesmanship) கொண்ட சிலரை ஓர் அரசியல் உயர்மட்டக் குழுவினராக அமர்த்தி அவர்கள் உலகில் பல நாடுகளுக்கும் சென்று அந்தந்த நாடுகளில் உள்ள நாடாளுமன்ற அரசியல் கட்சிகளிடமும், பத்திரிகை யாளர்களிடமும், ஆதரவைத் திரட்டவேண்டும் என்பது. இது உரிய வண்ணம் இன்றுவரையில் செய்யப்படவில்லை. விடுதலைப் புலிகள் உருவாக்கியுள்ள அரசியல் யாப்புக்குழு விவரம் 2005 சூனில் எனக்குக் கிடைத்தது. இக்குழு இதைச் செய்வதற்கான அருகதை உள்ளது என்று நாம் எண்ணவில்லை.

**இன்றைய நிலை**

இந்த இக்கட்டான சூழலில் 2005 நவம்பர் தொடங்கி இந்திய அரசின் கமுக்கமான ஒத்துழைப்புடன் ஈழ விடுதலைப் புலிகளின் பேரிலும், தமிழீழ மக்களின் பேரிலும் முப்படைத் தாக்குதலைத் தொடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல மாவட்டங்களையும் கைப்பற்றிக்கொண்டு, இப்போது முல்லைத்தீவில் ஒருநூறு சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள காடுகளில் தமிழீழத் தமிழர்கள் தத்தளிக்க நேரிட்டபிறகு, தமிழ்நாட்டுத் தமிழர்கள் தில்லியை நோக்கிப் படையெடுப்பதில் பேரார்வத்துடன் செயல்படுகிறோம். இதை நாம் மனமார வரவேற்கிறோம். அதே நேரத்தில் காங்கிரசுத் தலைமையில் உள்ள இந்திய அரசோ, அல்லது பாரதிய சனதாத் தலைமையில் அமைந்தால் அத்தகைய இந்திய அரசோ இலங்கை அரசுக்கு அழுத்தம் தந்து, அங்கு போர் நடப்பதை நிறுத்துவதற்கோ அல்லது தமிழீழ மக்களுக்குத் தன்னுரிமை அளிக்கத்தக்க ஓர் அரசியல் தீர்வை அளிக்கச் செய்வதற்கோ ஒருபோதும் உதவாது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நாம் ஏன் அப்படிக் கூறுகிறோம் என்பதை அருள்கூர்ந்து எல்லோரும் சிந்திக்க வேண்டுகிறோம்.

1. இந்தியாவில் பார்ப்பன - பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கத்திற்கு 1870களில் மகாத்மா புலே வித்திட்டார் என்பது உண்மை. அவர் தோற்றுவித்த 'சத்திய சோதக் சமாஜ்' என்னும் பர்ப்பன எதிர்ப்பு இயக்கம் 1920களிலேயே குன்றி விட்டது. ஆனால் தென்னாட்டில் - குறிப்பாகத் தமிழகத்தில் 1890க்கும் 1912க்கும் இடையில் அரும்பிய பார்ப்பன எதிர்ப்பு உணர்வு - பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு உணர்வு 1912க்கும் 1916க்கும் இடையில் ஒரு திட்டமான இயக்க வடிவத்தைப் பெற்றது. அது ஒரு தேர்தல் அரசியல் கட்சியாக - நீதிக் கட்சியாக உருவெடுத்தது. அது பதவிக்கு வந்த 1920 முதல் அரசியல் பதவிகளில் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பது; அரசு உத்தியோகத் துறையில் பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்துவது, அரசுக் கல்வித் துறையில் பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்துவது, சமயத் துறையில், கோயில்களில் பார்ப்பனர்களுக்கு இருந்த ஆதிக்கத்தை முறியடிப்பது என்பனவற்றை 1937க்குள் திறம்படச் சாதித்துக் காட்டியது. திராவிடக்கட்சி ஆட்சியினர் நடைமுறைப்படுத்திய இட ஒதுக்கீட்டுக் கொள்கை மயிலாடுதுறை மணி சங்கர அய்யரின் முன்னோர்கள், சோழவந்தான் சுப்பிரமணிய சாமியின் முன்னோர்கள் ஆகியோரைத் தமிழ்நாட்டிலிருந்தே வெளியேறச் செய்தது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு அரசுப் பணி ஆதிக்கத்திலிருந்து விரட்டப்பட்ட தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் இடம் பெயர்ந்தது உண்மை என்றாலும், தமிழ்நாடு உள்ளிட்ட ஒட்டுமொத்த இந்தியாவை ஆட்டிப்படைக்கும் மத்திய அரசாங்கத் தலைமைச் செயலகங்களிலும், இரயில்வே, வருமான வரித்துறை, அஞ்சல் துறை முதலானவற்றிலும் நூற்றுக்கு 75 பங்கு ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர், தெலுங்குப் பார்ப்பனர், மலையாளப் பார்ப்பனர் ஆகியோர் 1950க்குள் பெற்றுவிட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. 'தமிழ்நாடு', 'தமிழர்கள்' என்று சொன்னவுடன், அவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கட்டிக் காப்பவர்கள் மத்திய அரசில் உள்ள உயர் அதிகாரிகளே ஆவர். இலங்கைச் சிக்கல் பற்றியும், ஈழச் சிக்கல் பற்றியும் நன்றாக அறிந்தவர்கள் மத்திய அரசாங்கத்தில் உள்ள உயர் அதிகாரிகளே ஆவர். தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சி நடந்தாலும் தமிழ்நாட்டு அரசு எந்திரத்தில் பார்ப்பனர்கள் புகாமல் பார்த்துக் கொள்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், மேலாதிக்கம் படைத்த இந்திய அரசு எந்திரத்தில் இன்று தமிழ்நாட்டுப் பார்ப்பனர் ஆதிக்கம் குறைந்திருந்தாலும் மலையாளப் பார்ப்பனர், மராட்டியப் பார்ப்பனர், வடநாட்டுப் பார்ப்பனர் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, இவர்களின் ஆலோசனைகளை மீறி அவ்வப்போது பதவிக்கு வருகிற சோனியா காந்தி - மன்மோகன் சிங் அரசோ, அத்வானி - மோடி அரசோ தமிழ்நாட்டுத் தமிழர் சிக்கலையும், ஈழத் தமிழர் சிக்கலையும் நடுநிலையோடு நோக்குவதற்கு அனுமதிக்காது என்பதை இப்போதேனும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

2. தந்தை பெரியார் அவர்களால் 1926இல் சுயமரியாதை இயக்கம், நிறுவப்பட்டது. பார்ப்பன எதிர்ப்பு, இராமாயண எதிர்ப்பு, பார்ப்பன மத எதிர்ப்பு, மநுநீதி எதிர்ப்பு, இராமன் பட எரிப்புக் கொள்கைகளை 1926 முதல் முழுமையாகத் தூக்கிப் பிடித்தவர் பெரியார் அவர்களே. அவர் 47 ஆண்டுக்காலம் தமிழகத்திலும், வட இந்தியாவின் பல பகுதிகளிலும் இக் கொள்கைகளைப் பரப்பி வலிமை பெறச் செய்தார். நீதிக்கட்சியின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையையும் இறுதிவரை கெட்டியாகக் காப்பாற்றினார். எனவே, 'தமிழ்நாடு' - 'தமிழர்' என்றவுடன் -தமிழர்கள் என்றால் பார்ப்பன எதிர்ப்பாளர்கள், இராமன். இராமாயண எதிர்ப்பாளர்கள் என்று அடையாளப் படுத்தி அவர்களுக்கு எல்லாவகைத் தீங்குகளையும் செய்ய உயர் அதிகார வர்க்கமும் அரசும் முனைவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

3. தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் 1938இல் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கக் கூடாது என்பதை மட்டுமே மய்யமாகக் கொண்டது. ஆனால் 1946 முதல் அவர் முன்வைத்த இந்திய அரசமைப்புச் சட்ட எதிர்ப்பும், 1965இல் தி.மு.க. தலைவர் சி.என். அண்ணாதுரை அவர்களால் முன்வைக்கப்பட்ட 'இந்தி எதிர்ப்பும் - 'இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருத்தல் கூடாது' என்பதை நோக்கமாகக் கொண்டவை. இந்தக் கோரிக்கையும் இந்தியா முழுவதும் இந்தி பேசாத மாநில மக்களிடம் எடுத்துச் செல்லப்படவில்லை. இன்று இந்தி ஆட்சி மொழியாக வந்து

விட்டது உண்மை. ஆனால் 'தமிழ்நாடு - தமிழர்கள்' என்றால் அவர்கள் இந்தி எதிர்ப்பாளர்கள் என்கிற உணர்வு மத்திய அரசாங்கத்தில் உள்ள பார்ப்பன மற்றும் வட இந்திய அதிகாரிகளிடமும் இந்தி பேசுகிற மாநில அரசியல் தலைவர்களிடமும் பழம்பெரும் பத்திரிகையாளர்களிடமும் நிலைபெற்றுவிட்டது என்பது உண்மை. இதில் பெருங்காயம் இருந்த தகரப் பெட்டி என்கிற வெறும் பெயர் மட்டுமே இன்றைய திராவிட இயக்கத்தினர்க்கு - தமிழர்களுக்கு மிஞ்சி இருக்கிறது. ஆனால் இந்தி மொழி பேசுகின்ற பெரும் பாலோரின் எதிர்ப்பு தமிழர்களுக்கு எதிராகவே இருக்கிறது.

4. 1945இல் திட்டவட்டமாக முன்வைக்கப்பட்ட முழுச் சுதந்தர திராவிடநாடு வேண்டும் என்கிற பெரியாரின் கோரிக்கையும், 1.11.1956 முதல் பெரியார் முன் வைத்த தனிச் சுதந்தரத் தமிழ்நாடு கோரிக்கையும், 1949 முதல் 1961 வரை தி.மு.க. தூக்கிப் பிடித்த நாட்டுப் பிரிவினை கோரிக்கையும் இன்று புதை குழிக்குப் போய்விட்டன. ஆனால் 'தமிழர்கள்' என்றால் பிரிவினை வாதிகள் என்கிற எண்ணம் இந்திய அரசு உயர்மட்ட அதிகாரிகளுக்கும், அனைத்திந்தியக் கட்சிகளின் தலைவர்களுக்கும்2009இலும் நீடிக்கிறது. இதிலும் பெருங்காயம் இருந்த பாண்டமாகவே தமிழ்நாடும், திராவிட இயக்கங்களும் மாறிவிட்டன.

**இவற்றை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் தந்தை பெரியார் அவர்களுக்கு 1971இல் முகிழ்த்தது. அது காலந் தவறிய ஒரு சிந்தனையே ஆகும். அதாவது, 'பார்ப்பனரல்லாதார் இயக்கம் - திராவிடர் இயக்கம் ஓர் அனைத்திந்திய இயக்கமாக உருவாக்கப்படவேண்டும்' என்று அவர் 1971இல் சொன்ன அறிவுரை, திராவிடர் இயக்கத்தாராலும், தமிழர்களாலும் அடியோடு புறந்தள்ளப்பட்டது.**

இராசிவ் காந்தி படுகொலை 1991 மே திங்களில் நடந்தது. 1991க்கு முன்னரேயும் இப்போதும் இந்திய அரசு உயர் அதிகார வர்க்கத்தினரும், அனைத்திந்தியக் கட்சியினரும் - 'தமிழர்', 'தமிழ்நாடு' என்பவற்றைப் பகைமைக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கிறார்கள் என்பதை மேலே நாம் குறிப்பிட்டுள்ள நான்கு செய்திகளைக் கொண்டு நன்கு உணரலாம்.

எதிர்பாராதவிதமாக, இராசிவ் காந்தி படுகொலை தமிழ் மண்ணில் நடைபெற்றது. அக் கொலையைச் செய்தவர் ஈழத் தமிழ்ப் பெண்மணி என்பதற்கும், அதற்குத் திட்டமிட்டவர் ஓர் ஈழத் தமிழர் என்பதற்கும் மட்டுமே தரவுகள் உள்ளன. இவர்கள் அப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்ததற்கான தரவுகள் ஏதும் இல்லை. விடுதலைப் புலிகள்தான் இராசிவ் காந்தி படுகொலைக்குச் சதித் திட்டம் தீட்டினார்கள் என்பதற்கும் எந்தத் தரவுகளும் இல்லை. புலிகள் இயக்கத்தையும், பிரபாகரனையும் இராசிவ் கொலையில் இணைப்பது ஓர் ஊகமே ஆகும். இது இந்தியக் குற்றவியல் உளவுத்துறையின் கற்பனையும் ஆகும். மேலும் அமெரிக்க உளவு நிறுவனமான சி.அய்.ஏ.-வின் திசை திருப்பும் பணியும் இதில் சேர்ந்திருக்கிறது. இராசிவ் படுகொலையில் சந்திராசாமிக்கும், சுப்பிரமணிய சாமிக்கும் பங்குண்டு என்று தொடக்கத்தில் எல்லா ஊடகங்களும் செய்தியைப் பரப்பின. ஆனால் ரா (RAW) போன்ற இந்திய உளவு நிறுவனம் மற்றும் இந்திய உயர் அதிகார வர்க்கம் முதலானவை பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதால் சந்திராசாமி, சுப்பிரமணிய சாமி முதலானோர் பற்றிய செய்திகள் அடியோடு மறைக்கப்பட்டுவிட்டன; அல்லது கழற்றி விடப்பட்டன. ஆனால், ஈழத் தமிழரை ஒழிப்பதற்கு ஒரு காரணார்த்தமாக இராசிவ் படுகொலைக்கும் பிரபாகரனுக்கும் முடிச்சுப் போட்டு, பிரபாகரனைக் கொல்லவேண்டும் என்று முடிவெடுத்து அதற்காக ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களையும் உரிமை அற்றவர்களாக ஆக்குவதற்கு சிங்களக் காடையர்களுக்கு இந்தியப் பார்ப்பன ஆதிக்க அரசு துணை போகிறது என்று நாம் துணிந்து கூறலாம்.

தமிழ்நாட்டில் தமிழருக்கு, தமிழராகப் பிறந்துவிட்ட இந்திய தேசிய காங்கிரசாரும், தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களும் தொடர்ந்து ஈழ விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டை இனியும் கொள்ளுவது தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு அவர்களை அறியாமலேயே செய்யும் துரோகமாகும்.

ஈழச் சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற ஏக்கத்தில் தத்தளிக்கிற இன்றைய தமிழ் மக்கள் - இன்று ஈழத்தில் உயிரோடு கொல்லப்படும் தமிழர்களைப் போன்ற ஓர் அவல நிலைக்கு ஆளாகாமல் இருந்தாலும் - தன்னுரிமை அற்ற தமிழ்நாட்டில் அவரவர்க்குக் கிடைத்ததை அனுபவிக்கிற நடமாடும் பிணங்களாகத் தமிழ்நாட்டார் விரைவில் மாறி விடுவோம் என்பது உறுதி.

ஈழச் சிக்கலுக்காகச் சிறிதேனும் பயன்படக்கூடிய நடவடிக்கைகளையும் - இந்திய அரசுக்கு அழுத்தம் தரக்கூடிய அளவுக்குத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமானால் - பல மாதங்களுக்கு - ஏன் சில ஆண்டுகளுக்கு, தமிழர்கள் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கும் பயணம் செல்ல வேண்டும்; பல இந்திய மொழிகளிலும் அறிக்கைகளையும், குறு வெளியீடுகளையும் வெளியிட்டுப் பரப்பவேண்டும்; பல கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுக்கு உண்மையைப் புரியவைத்து இந்திய நாடாளுமன்றத்தில் ஈழச் சிக்கல் பற்றி அவர்கள்பேச உடனடியாக வழிவகுக்க வேண்டும். தமிழகத்திலும் ஒன்றுபட்ட குரலில் இச் சிக்கலை முன்வைக்க நாம் ஆயத்தமாக வேண்டும்.

இவ்வளவு இடர்ப்பாடுகளையும் மனத்திற் கொண்டு, "தமிழீழம் தனிச் சுதந்தர நாடாக அமைக்கப்படவேண்டும்"

என்கிற கோரிக்கைக்கு மாறாக, தன்னுரிமை பெற்ற தமிழீழ மாகாணம் உள்ளிட்ட ஓர் உண்மையான இலங்கைக் கூட்டரசை அமைக்கவேண்டும் என்கிற கொள்கையை முன்வைத்து அதற்கான ஒரு மாதிரி அரசமைப்பு வரைவை உருவாக்கிக் கொண்டு, அவ்வரைவை தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலான மொழிகளில் அச்சிட்டுக் கொண்டு தக்கவர்கள் மூலம் உலக நாடுகளுக்கெல்லாம் - குறிப்பாக அய்ரோப்பிய நாடுகளுக்கெல்லாம் கொண்டு சென்று அதற்கு ஆதரவு திரட்டுங்கள் என 'பெரியார் ஈரா' - (Periyar Era) இதழ் மூலம் வேண்டுகோள் விடுத்தோம். இதுபற்றி எங்களுக்குத் தோன்றிய வகையில் தன்னுரிமை பெற்ற தமிழீழம் மற்றும் அதேபோன்ற பல மாகாணங்களைக் கொண்ட உண்மையான இலங்கைக் கூட்டாட்சிக்கான மாதிரி அரசமைப்பு வரைவை நாங்களே எழுதி, 2003 ஆகஸ்டு இதழில் முதன்முதலாக அதை வெளியிட்டோம். தமிழீழ விடுதலையில் அக்கறை கொண்ட தமிழ்நாட்டுத் தமிழரோ, ஈழத் தமிழரோ, உலகத் தமிழரோ அதுபற்றி எந்த எதிர்வினையும் புரியவில்லை.

**2002க்குப் பிறகு ஈழத்தில் அமைதி நிலவிய காலத்தில் 2005 சூன் திங்களில் கிளிநொச்சி, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 14 நாள்கள் பயணித்து அங்குள்ள கள நிலைமைகளைப் புரிந்துகொண்டும்; கொழும்புவில் தங்கி மலையகத் தமிழர்களிடையே 14 நாள்கள் பயணித்து அங்குள்ள நிலைமையை ஆய்வு செய்த பின்னரும்; கொழும்பு ஆவணக் காப்பகத்தில் சில நாள்கள் படித்து ஆய்வு செய்து சில ஆவணங்களைப் பார்த்த பிறகும்; விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உள்ள இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரோடு உரையாடிய பிறகும்; சிங்களத் தலைவர்கள் சிலரோடு உரையாடிய பிறகும் இந்த எண்ணமே எனக்கு உறுதிப்பட்டது.**

எனவே, 2008 ஏப்பிரல் 'பெரியார் ஈரா' - இதழில் உண்மையான இலங்கைக் கூட்டாட்சிக்கான வரைவை மீண்டும் மறு வெளியீடு செய்தோம். அடுத்த மாதமே விடுதலைப் புலிகளின் தலைமையகமான கிளிநொச்சிக்குத் தொடர்புகொண்டு, இதில் நாட்டம் கொள்ளுங்கள் என்று வேண்டிக்கொண்டோம்.

கிளிநொச்சி, இன்று விடுதலைப் புலிகளிடம் இல்லை. இந்நிலையில் இவற்றை நினைவுகொள்ளும் தன்மையில் 2009 பிப்பிரவரி ''சிந்தனையாளன்'' இதழிலும் சில குறிப்புகளை வெளியிட்டுள்ளோம்.

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, ஈழ விடுதலையில் ஆர்வமுள்ள எல்லோரும் செயல்படுங்கள் என மா.பெ.பொ.க.வின் சார்பில் அன்போடும் உரிமையோடும் வேண்டிக் கொள்கிறோம்.

1.3.2009 **- வே. ஆனைமுத்து** •

## தாம்பரத்தில் மனித சங்கிலி



இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு இயக்கம் சார்பாக இலங்கையில் போர் நிறுத்தம்கோரி தாம்பரம் முதல் கன்னியாகுமரிவரை மனித சங்கிலி போராட்டம் பிப்பிரவரி 17ஆம் தேதி நடைபெற்றது. தாம்பரத்தில் பழ. நெடுமாறன், வைகோ, கோ.க. மணி, தொல். திருமாவளவன், கண்ணப்பன் ச.ம.உ., இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## திருமுட்டத்தில் ஈழத் தமிழர் அடக்குமுறையைக் கண்டித்து போராட்டம்



9.2.2009 அன்று திருமுட்டம் கடைவீதியில் ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் பட்டினிப் போராட்டம்மு. பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எ. பொன்னுசாமி தொடக்கி வைத்தும், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் முடித்து வைத்தும் உரை யாற்றினர். ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியத் தேவன், மா.பெ.பொ.க. தோழர்கள் நெய்வேலி கல்யாண சுந்தரம், அறிவழகன், விடுதலைச் சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் திருமாறன் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

# வைரத்தைப் பட்டை தீட்டிவிட்டால் கண்ணாடியின் கதி என்னாவது?

- இராமியா

சென்னையில் பரவாசி பாரதீய திவஸ் என்ற விழா விமரிசையாக நடைபெற்றது. இறுதிநாளான 9.1.2009 அன்று கலந்துகொண்டு பேசிய மய்ய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஆ.இராசா பேசுகையில் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களும், இந்திய வமிசா வழியினரும் இந்தியாவில் உள்ள உயர்தரக் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் இவ்வுயர்தரக் கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்வதன்மூலம் அவர்களின் குழந்தைகள் இங்கு படிக்க வாய்ப்புகளை ஏற்படுத்தலாம் என்றும் கூறினார். இவரைவிட ஒருபடி மேலே சென்ற மய்ய அரசின் இணை அமைச்சர் ஜி.கே. வாசன் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வமிசா வழியினருக்காக மூன்று புதிய பல்கலைக் கழகங்களை உருவாக்கும் திட்டம் உள்ள தாகவும் தெரிவித்தார். சத்யம் நிறுவனத்தில் உருவாகியுள்ள ஊழல் பூகம்பம் பற்றி இவ்விழாவில் கலந்துகொண்ட மலேசிய நாட்டு அமைச்சர் எஸ். சுப்பிரமணியம் குறிப்பிட்டுப் பேசி வெளிநாட்டு முதலீடுகளுக்கு எப்படிப் பாதுகாப்பு கிடைக்கும் என்று அய்யத்தைக் கிளப்பினார். இதற்குப் பதிலளித்துப் பேசிய நமது நாட்டு அமைச்சர்கள், இது விசாரணை நிலையில் இருப்பதால் அதைப்பற்றிப் பேசவேண்டாம் என்றும், வெளிநாடுகளின் எந்த முதலீடும் இலாபமின்றிப் போகவில்லை என்பதை மட்டும் கவனித்தால் மற்ற நாடுகளில் முதலீடு செய்வதைவிட இந்தியாவில் முதலீடு செய்வது சரியான முடிவாக இருக்கும் என்றும் பேசி அவரைச் சமாதானப் படுத்தினார்கள்.

இது ஒருபுறம் இருக்கட்டும் நமது மய்ய அரசின் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் 24.1.2009 அன்று சென்னையில் பேசுகையில் நகரங்களில் சேரிகளில் வாழ்பவர்களும், கிராமப்புற ஏழைகளும் கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்தாலும் அறிவில் குறைந்தவர்கள் அல்ல என்றும், அவர்கள் புதுப்புது எண்ணங்களைப் படைக்க வல்லவர்கள் என்றும், எடுத்த வினைகளை எப்பாடு பட்டேனும் வெற்றிகரமாக முடிக்க வல்லவர்கள் என்றும் கூறினார். புராணகாலத்து ஜாபாலி முனிவரில் இருந்து, வரலாற்றுக் காலத்து, புத்தர், அவ்வையார், மேலும் அண்மைக்காலத்து நாராயணகுரு, பெரியார், அம்பேத்கர், மற்றும் நம் காலத்து ஆனைமுத்துவரை இதைத்தான் விளங்கிக்கொள்ளும்படி கூறுகிறார்கள். நமது அமைச்சர் சிதம்பரம் இதைப் புரிந்துகொண்டு பேசியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் புரிதலுக்குப் பின்னால் புரிந்துகொள்ள வேண்டிய வேறு விவரங்களும் உண்டு. பெரியார் கூறியது போல 'பார்ப்பனர்கள் படிப்பாளிகளே ஒழிய அறிவாளிகள் அல்ல'. அமெரிக்காவில் தற்கொலை செய்துகொண்ட கார்த்திக் இராஜாராம் என்ற அய்.அய்.டி.யில் படித்த பார்ப்பனர் அறிவுத் திறன் குறைந்தவர் என்று அவருடைய பார்ப்பனப் பேராசிரியர் நரேந்திரன் என்பவர் கொடுத்த சான்றிதழ் பெரியாருடைய கணிப்பு சரியானதுதான் என்று மெய்ப்பிக்கிறது.

உண்மைகள் இவ்வாறு இருக்கையில் வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வமிசா வழியினர் என்ற பெயரில் பார்ப்பனர்கள் இங்கு படிப்பதற்கு நமது மூலாதாரங்களைச் செலவழிப்பது எதற்காக? வெள்ளைக் காரர்களுடன் போட்டிபோட முடியாத பார்ப்பனர்களை எப்படியும் படிக்க வைக்கவேண்டும் என்பதற்காக முதலீடு என்ற வகையில் இலாபத்தையும் அள்ளிக் கொடுத்து வெள்ளைக்காரர்களோடு போட்டியிடத் திறனற்ற பார்ப்பனர் களுக்கென்று இடங்களையும் ஒதுக்கிவைக்க மய்ய அரசு ஏன் துடிக்கிறது?

நம் நாட்டில் வாழும் கல்வியறிவற்ற மக்கள் அறிவாளிகள் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் அவர்கள் கல்விபெற்றால் நாட்டிற்கு நலமாயிற்றே என்று எண்ணாமல் திறமை அற்றவர்களாக இருந்தாலும் பார்ப்பனர்கள் படிக்கவேண்டும்; திறமையானவர்களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் படிக்கக்கூடாது என்றும் இந்திய அரசு அடம்பிடிப்பது ஏன்? வைரத்தைப் பட்டை தீட்டிவிட்டால், கண்ணாடித் துண்டின் கதி என்னாவது என்று வைரத்தைப் பட்டை தீட்டாமல் பார்த்துக்கொள்ளும் கண்ணாடி வியாபாரியைப்போல் - ஏன் இந்திய அரசு நடந்து கொள்கிறது? அதற்கு மாநில அரசுகள் ஏன் ஒத்துழைக் கின்றன? கட்சி வேறுபாடு இல்லாமல் இதில் மட்டும் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறார்களே! ஏன்? எப்படி?

சரி! அவர்கள் எப்படியும் போகட்டும்.

மக்களே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இந் நிலையைத் தொடரவிட்டது நம் முன்னோர்கள் நமக்குச் செய்த துரோகம் என்று தோன்றவில்லையா? நாமும் அப்படியே இருப்பது நாம் நம் குழந்தைகளுக்குச் செய்யும் துரோகம் என்று தோன்றவில்லையா? நாம் என்ன செய்தால் நமக்குக் கல்வியறிவு கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு மய்ய மற்றும் மாநில அரசுகள் உள்ளாகும் என்று சிந்திக்க வேண்டாமா? ●

# இடதுசாரி இயக்கங்களும் சாதிகள் ஒழிப்பும்

- மழவன்

நம் நாட்டில் மனித சாதியைச் சார்ந்தவர்கள் யாருமில்லை. சாதிய மனிதர்கள்தான் இருக்கின்றனர். இந்து மதத்தில் உள்ள சாதிகள் கிடைமட்டத்தில் படுக்கைவாட்டத்தில் (Horizontal) இல்லை. அடுக்குமுறையில் (Vertical) கீழிருந்து மேலே போகின்றன. ஒவ்வொரு சாதியும் தனக்குக் கீழேயுள்ள சாதிகளைப் போட்டு மிதித்துக் கொண்டிருக்கிறது. மிக அடித்தளத்தில் இருப்போர் தாழ்த்தப் பட்டோர்களும் பழங்குடிகளும்; இவர்களுக்குக் கொஞ்சம் மேலே பிற்படுத்தப் பட்டவர்களும் உள்ளனர். இவர்களுக்கிடையேயும் கிடை மட்டத்திலேயும் அடுக்கு முறையிலும் சாதிப் பிரிவுகள் உண்டு. இவர்கள்தான் இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள். இன்னமும் பிறருக்குக் கொடி பிடிப்பவர்கள். உயர்நிலைக் கல்விக் கூடங்கள், உயர்நிலை ஆய்வுப் பிரிவுகள், உயர்நிலை ஆளுமைப் பதவிகள் ஆகியவை மட்டுமல்ல - பணம் சேர்த்தல், முதலீடு செய்தல், வணிகம் செய்தல் ஆகியவைகூட மறைமுகமாக மறுக்கப் படுவதைக்கூட மனத்தால் இவர்கள் உணராதவர்கள்; உணர முடியாதவர்கள். உணரும் ஒரு சிலரும் விலை போய் விடுகிறார்கள். பெரும்பான்மையான இவர்கள் நாட்டை ஆளவில்லை; அதற்குமாறாக ஆளப்படுகிறார்கள்.

இடதுசாரிப் புரட்சியாளர்கள் நம் நாட்டின் ‘சாதிச் சிக்கல்’ என்ற ஒன்று இருப்பதாகவே காட்டிக் கொள்வதில்லை. நம் நாட்டில் நிலப் பிரபுத்துவமுறை ஒழிந்து முதலாளியம் வளர்ச்சி யுறும்போது சாதிகள் மறைந்துவிடும் என்றவர்கள், இப்போது உழைக்கும் வர்க்கம் ஒன்றுதிரண்டு முதலாளியத்தை வீழ்த்தும்போது சாதிகள் உதிர்ந்துவிடும் என்கின்றனர். மேல்நாட்டு நிலப் பிரபுத்துவமுறை நம் நட்டில் இருந்ததில்லை. மேல்நாட்டில் நிலப் பிரபுக்களும் குடியானவர்களும் கொள்கை அளவில் தன்னுரிமை (சுதந்தரம்) உடையவர்கள். பிறப்பால் உயர்வு தாழ்வு அற்றவர்கள். இரண்டாவதாக நம் நாட்டில் உழைக்கும் வர்க்கமே சாதிகளாக அடுக்குமுறையிலும் கிடை மட்டத்திலும் பிரிந்து கிடக்கிறது. இவர்கள் எப்படி ஒன்றுசேர முடியும்? பண்பாட்டு நிலையிலும் பழக்க வழக்கங்களிலும் ஒரு சாதி இன்னொரு சாதியை இன்னமும் புறக்கணிக்கும் நிலையுள்ளதே!

உலகில் நடந்த அத்தனை நிகழ்வுகளையும், தோன்றிய இலக்கியக் கருத்துக்களையும் - அவ்வளவு ஏன்? - மதங்களின் தோற்றங்களையும்கூட மார்க்சியப் பார்வை கொண்டு நம்மால் விளக்க முடியும். ஆனால் நம் நாட்டுப் புரட்சியாளர்களோ மார்க்சிய சித்தாந்தங்களை பார்ப்பனிய பார்வைகொண்டு இவற்றை விளக்க முற்படுகின்றனர். வரலாற்றையே மாற்றும் அல்லது திரிக்கும் வல்லமையுடைய இவர்கள் மார்க்சிய சித்தாந்தங்களை வறட்டுத்தனமாக முன்வைப்பதிலும், தங்களுக்கேற்றார்ப்போல் திரிப்பதிலும் திறமையுடையவர்களாகவே இருக்கின்றனர். இந்திய மட்டத்தில் இவ்வியக்கம் இன்னமும் பார்ப்பனர்கள் கையில்தான் உள்ளது.

**தந்தை பெரியார் அவர்கள் பார்ப்பனர்களைப் பிறவி முதலாளிகள் என்று சரியாகவே கூறினார். இப் பிறவி முதலாளிகள் ஒழிந்துவிட்டால் குமுகாயம் முழுவதையும் சமன்மையாக்குவது எளிது. பின்னர் முதலாளித்துவத்தை எதிர்ப்பதும் எளிது. அன்றியும் சூத்திரர்களும் தாழ்த்தப் பட்டோர்களும் தானே உண்மையான உழைக்கும் மக்கள். பிறவி முதலாளிகள் பொதுவுடைமைக்குத் தலைமை தாங்கினால், இவ் உழைக்கும் மக்கள் எப்படித் தங்களை அவர்களிடம் ஒப்படைக்கமுடியும்?**

பெரியார் அவர்கள் எந்தக் கல்வி அடித்தட்டு மக்களிடையே விழிப்புணர்வையும் தன்மானத்தையும் புரட்சி மனப்பான்மையையும் உருவாக்கும் என்று எண்ணி னாரோ அக்கல்வி சமய மூட நம்பிக்கைகளில் பற்றையும் பார்ப்பனிய மயமாதல் என்னும் நிலைகளையும் கோழைத் தனத்தையும் உருவாக்குவதாகவே அமைக்கப்பட்டுள்ளது. ஏதாவது பதவிகளுக்குச் சென்றுவிட்ட படித்த கூட்டம் சில குமுகாய காரணிகளுக்காகத் தங்கள் சாதிகளை அடையாளப் படுத்திக் கொள்கிறார்களே தவிர, மற்றைய நேரங்களில் தங்கள் சாதிகளைவிட்டுத் தனித்தே நிற்கின்றனர். மேட்டுக் குடியினரின் பழக்க வழக்கங்களையும் நடைமுறையையும் பின்பற்றுவதன்மூலம் தங்களை உயர்த்திக் கொள்வதாகப் பாவனை செய்துகொள்கின்றனர்.

நம் நாட்டில் சாதி என்பது சிக்கலானது என்பது மட்டு மல்ல; புரியாத புதிரும்கூட சான்றாக நாடார் பெருமக்களை எடுத்துக்கொள்வோம். போன நூற்றாண்டின் தொடக்கம் வரை அவர்களுடைய குமுகாய நிலை (Status) என்ன? இந்துமதம் அவர்களை எங்கே நிறுத்தியிருந்தது? ஆங்கிலே யன் காலத்தில் பருத்தி வணிகத்தில் தொடங்கி இன்று பல்வேறு வணிகங்களில் ஈடுபட்டுப் பொருளாதார வளர்ச்சி யுற்றதும் அவர்கள் தங்களை உயர்ந்த சாதியாக்கிக் கொள்ள முயல்வதுடன், இந்துமதப் பாதுகாவலர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். தன்மானமுள்ள ஓரிருவர் இவர்களிடையே இருந்தனர்; இன்னமும் இருக்கவே செய்கின்றனர்.

சாதி ஒழிப்பு என்பதே முதலாளியத்தை எதிர்க்கிற முதற்கட்டப் போர் என்பதை நமது புரட்சி இயக்கங்கள் பார்க்க மறுக்கின்றன. இதில் தலையிட்டால் வர்க்கப் போராட்டங்களுக்கு ஊறு விளையும் என்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள். உண்மையில் இவ் இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் கூட்டம் வர்க்கப் புரட்சியை முனை முறிக்கவே விரும்புகிறது என்பது என்னுடைய துணிபு. வெறும் தொழிற்சங்கப் போராட்டங்களை வர்க்கப் போராட்டங்களாகக் காட்டி மயங்க வைப்பது இவர்களுடைய வாழ்க்கை வழி.

சாதிச் சங்கங்கள் சாதிகளை அழியவிடாமல் பார்த்துக் கொள்கின்றன என்று மேட்டுக் குடியினரும் அவர்களுடைய இதழ்களும் மட்டுமல்ல; புரட்சி இயக்கத்தார்களும் மிகக் கரிசனத்தோடு கூறுகின்றனர். இதில் உண்மை இருக்கிறது. ஆனால் மேட்டுக் குடியினர் சங்கங்கள் வைப்பது தங்கள் சாதிகளைக் காப்பாற்றிக்கொள்ள - நிலை நிறுத்திக் கொள்ளவே. அடித்தட்டு மக்கள் சங்கங்கள் வைப்பது தங்களுடைய இழிவுகளைப் போக்கிக் கொள்ளவே. இம்மக்களுக்கு விழிப்புணர்வையும் தன்மானத்தையும் ஊட்ட இச் சங்கங்கள் - நம்முடைய கெட்ட வாய்ப்பு இச் சங்கங்கள் இணைந்து செயல்படுவதற்கு மாறாக, ஒன்றை ஒன்று நம்பாமல் மேட்டுக் குடியினர்க்குக் கொடி பிடிக்கின்றன. சில சமயங்களில் பெரிய குழுக்கள் தங்களுக் குள்ளே உள்ள போட்டியினால் மிகச் சிறுபான்மையான குழுவைச் சார்ந்த தலைவர்களின் காலடியில் கிடக்கின்றன.

இப்படி ஒரு சங்கத்தை தந்தை பெரியார் அவர்கள் கெட்டியான மெய்யியல் அடிப்படையில் நிறுவினார். அறிஞர் அண்ணாதுரை அவர்கள் இன்னும் முடுக்கத்தோடு இவ்வியக்கத்தை முன்னெடுத்துச் செல்வதாக ஓர் அமைப்பை உருவாக்கினார். அந்தோ! அவ்வியக்கம் இன்று எக் கொள்கையுமின்றி நாற்காலிக் கனவுகளால் சாதி வலையிலேயே சிக்கிக் கொண்டது மட்டுமல்லாமல்; பல காலம் பெரியாரின் கொள்கைகளோடு உடன்பட்டுப் பேசிப் பேசி பெரியாரின் கொள்கைகளையும் மக்கள் இடையில் நீர்த்துப் போகச் செய்துவிட்டது. இவர்களே முதலாளித்துவக் குணங்களுக்கு ஆட்பட்டதோடு முதலாளிகளின் முகவர்களாகவும் மாறிவிட்டார்கள்.

காந்தியார் தன்னைச் 'சனாதன இந்து' என்றுகூறிக் கொண்டார். சாதிகள் இருப்பதில் குற்றமில்லை என்றார், அவரின் வழி வந்தவர்களால் இயற்றப்பட்டதுதான் இந்திய அரசியல் சட்டம். அம்பேத்கரின் கூற்றிலேயே கூறுவதென்றால் தூவலைத்தான் (பேனா), அவர் கை பிடித்திருந்ததே தவிர, அவர் கையைப் பிடித்து இயக்கியவர்கள் அனைவரும் பார்ப்பனர்களே. சாதிகளின் பாதுகாவலாக இருக்கக்கூடிய நிலையான முதலாளி நம்முடைய அரசியல் சட்டமே. இம் முதலாளியின் நிர்வாகப் பொறுப்புகளைக் கவனிப்பவர்கள் பிறவி முதலாளிகளும் மேட்டுக் குடியினரும் பண முதலாளிகளுமேயாவர். **முதலாளிகள் அனைவரும் மேட்டுக்குடியினர்தான் என்பதை நாம் மறத்தலாகாது. பார்ப்பன ஏகாதிபத்தியமும் முதலாளிய ஏகாதிபத்தியமும் தான் நம் நாட்டை நிர்வாகம் செய்கின்றன.** பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் நிர்வகிக்கப்படும் பொருள்களைச் சார்ந்தவர்கள். அதாவது வெறும் உழைப்புப் பொருள்களே.

கார்ல் மார்க்சு, 'முதலாளியத்தின் அழிவில் உழைக்கும் வர்க்க ஆட்சி உருவாகும்' என்றார். நம் நாட்டில் முதலில் பெரும்பான்மையான அடித்தட்டு மக்களின் ஆட்சி உருவாகி நம்மை ஆட்டிப்படைக்கிற அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும். இரண்டாவதாக நம்நாட்டில் அடித்தட்டு மக்களுக்கு இதுவரை மறுக்கப்பட்ட நிறுவனங்களின் கதவுகள் பார்ப்பனியத்துக்கு மூடப்படுதல் வேண்டும். மார்க்சியம் தொழிலாளர்களும் ஆய்தம் ஏந்த உரிமை அளிப்பதுபோல், வன்முறை மூலமாகவாவது பார்ப்பனியம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். இன்றைய அரசியல் சட்டமும், பார்ப்பனியமும் ஒழிக்கப்படாமல் சாதிகளை ஒழிக்கலாம் என்பது இன்னும் இருநூறு ஆண்டுகளில்கூட முடியாது. அதுவரை பொதுவுடைமை இயக்கமும் இருக்கிற இடத்திலிருந்து நகராது.

நம்நாட்டில் மனித சாதி மட்டும் இருக்க வேண்டுமானால், இதைவிட வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. •

## வி.ஜி.ஆர். மருத்துவமனை திறப்புவிழா

அரியலூர் பெரியகடைத் தெருவில் மருத்துவர் க. கொளஞ்சிநாதன் அவர்களின் வி.ஜி.ஆர். மருத்துவமனையை 8.02.2009 அன்று தோழர் வே. ஆனைமுத்து தலைமையில், பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ச. இராமதாசு அவர்கள் திறந்து வைத்தார். முனைவர் க. இராமசாமி வரவேற்புரை ஆற்றினார். வன்னியர் சங்க மாநிலத் தலைவர் ஜெ. குரு முன்னிலை வகித்தார்.

## திருக்குறள் செம்மொழி உரைநூல் வெளியீடு

சென்னை பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் சார்பில் பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்கள் எழுதிய திருக்குறள் செம்மொழி உரைநூல் வெளியீட்டுவிழா 9.2.2009 அன்று மாலை சென்னைப் பல்கலைக் கழகம் பவளவிழாக் கலை அரங்கில் நடைபெற்றது. சிலம்பொலி செல்லப்பன் தலைமை யேற்க, திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி நூலை வெளியிட்டார். தமிழறிஞர்கள் பலரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

# உயிர்கள் படைக்கப்பட்டவையா? படிநிலை வளர்ச்சியில் பரிணமித்தவையா?

- க. முகிலன்


12.2.2009ஆம் நாள் அறிவியல் ஆய்வு அறிஞர் சார்லசு டார்வின் அவர்களின் 200ஆவது பிறந்தநாள். உலக நாடுகள் பலவும் அவருடைய 200 ஆவது பிறந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடின. நாம் காணும் புல், பூண்டு, மரம், விலங்குகள், மனிதர்கள் எல்லாம் கடவுளால் - கர்த்தரால் படைக்கப்பட்டவை என்ற மத மவுடீக நம்பிக்கையின்பேரில் முதலாவதாக அறிவியல் அடி கொடுத்தவர் அவரே.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் (1789) நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின் மானுட விடுதலை முழக்கம் உலகம் முழுவதும் எதிரொலித்தது. பிறப்பில் ஆண்டான் - அடிமை இல்லை; மனிதர்கள் அனைவரும் சம உரிமை உடையவரே என்கிற சுதந்தரத் தீயை மூட்டியது. முதலாளியத்தின் வளர்ச்சிக்கு இந்த சுதந்தர முழக்கம் தேவைப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் உலகையே குலுக்கிய இரண்டு நூல்கள் வெளிவந்தன. ஒன்று 1848இல் மார்க்சும் ஏங்கெல்சும் இணைந்து எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை. மற்றது சார்லஸ் டார்வின் 1859இல் வெளியிட்ட உயிரினங்களின் தோற்றம். இதுநாள் வரையிலான மனித குலத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறேயாகும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை முரசொலித்தது. இவ்வுலகத்தில் உள்ள உயிரினங்கள் அதைத்தும் கடவுளால் படைக்கப்பட்டவை அல்ல. தாழ்நிலை உயிரினங்களிலிருந்து இயற்கைத் தேர்வின் வாயிலாகப் பரிணமித்தவையே ஆகும் என்று டார்வினின் நூல் பறை சாற்றியது. மனித சமூகத்தின் சிந்தனைப் போக்கின்மீது பெரும் தாக்கத்தை - மாற்றத்தை இவ்விரு நூல்களும் உண்டாக்கின.

அய்ரோப்பிய வரலாற்றில் கி.பி. 1500க்குப் பிற்பட்ட காலப் பகுதியை மறுமலர்ச்சி - அறிவொளிக் காலம் என்று குறிப்பிடுகின்றனர் அரசியல், சமூகம், பொருளியல், சமயம், கலைகள், முதலான எல்லாத் துறைகளிலும் புதிய சிந்தனைகள் கிளர்ந்தெழுந்தன. மன்னர்களையே ஆட்டிப் படைக்கும் பேரதிகாரம் பெற்றதாக ரோம் நகரில் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடம் இன்றும் விளங்குகிறது. செருமன் நாட்டின் பாதிரியாரான மார்ட்டின் லூதர் வாட்டிகன் தலைமைக்கு எதிராக 1517இல் 95 கேள்விக் கணைகளைத் தொடுத்தார். இதன் விளைவாக புராட்டெஸ்டென்ட் கிறித்தவ சமயப் பிரிவு தோன்றியது.

இக்காலக் கட்டத்தில் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வெளிவரத் தொடங்கின. கோபர் நிக்கஸ் (1473 - 1543) சூரியன்தான் நடுநாயகமாக உள்ளது. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதை அறிவியல் ஆய்வின் அடிப்படையில் கண்டறிந்தார். ஆனால் கிறித்தவ வேத நூலான விவிலியத்தில் பூமிதான் நடுநாயகம்; சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது என்று சொல்லப்பட்டுள்ள கருத்துக்கு இது எதிரானது என்பதால் கோப்பர் நிக்கஸ் தன் கண்டுபிடிப்பை நூலாக வெளியிட அஞ்சினார். கிறித்தவ மத நம்பிக்கைக்கு மாறுபட்ட கருத்தை எவர் கூறினாலும் ரோமன் கத்தோலிக்கத் திருச் சபை அவரைக் கடுமையாகத் தண்டிக்கும் கொடிய நிலை இருந்தது. எனவே கோப்பர் நிக்கசின் நூலை அவருடைய சீடர்கள் அவர் இறந்த நாளில் வெளியிட்டனர்.



கோப்பர் நிக்கசின் கோட்பாட்டை தீவிரமாக ஆதரித்தார் என்பதற்காக புருனோ (1548 - 1600) கத்தோலிக்க மதத் தலைமையால் ஊர் நடுவில் கம்பத்தில் கட்டப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார். மத நம்பிக்கைக்கு எதிராகக் கருத்துரைத்தவர்களுக்குத் திருச்சபையால் அந்நாளில் தரப்பட்ட தண்டனை அது!

கலிலியோ கலிலி (1564 - 1642) கோப்பர் நிக்கசின் கோட்பாட்டிற்கு மேலும் அரண் சேர்க்கும் வகையில் தான் உருவாக்கிய தொலைநோக்கி மூலம் மேலும் புதிய அறிவியல்

கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தினார். அரிஸ்டாட்டில் வகுத்தவையே அறிவியல் என்று நம்பப்பட்டுப் பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட்டு வந்தது. இவற்றுள் பலவற்றைத் தவறு என்று கலிலியோ தன்னுடைய அறிவியல் செயல்முறை மூலம் எண்பித்தார். எனவே கத்தோலிக்கத் திருச்சபை கலிலியோமீது குற்றஞ்சாட்டி விசாரணை செய்தது. சூரியன் நடுநாயகமாக உள்ளது. நகராமல் உள்ளது. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்பது தவறு என்று ஒத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தியது. தன்னுடைய எழுபதாவது அகவையில் சிறைக் கொடுமைக்கும் மரண தண்டனைக்கும் அஞ்சி கலிலியோ தன் கோட்பாடு தவறு என்று திருச்சபை முன் மண்டியிட்டு ஒத்துக்கொண்டார். ஆயினும் 1633 முதல் அவர் இறக்கும்வரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.



டார்வின் நூல் வெளியானபோது அவரைக் கேலிசெய்து
பழமைவாதிகள் வெளியிட்டக் கருத்துப்படம்

கலிலியோ இறந்த ஆண்டில் நவீன காலத்தின் பல அரிய அறிவியல் கண்டுபிடிப்புகளை உலகிற்கு வழங்கிய அய்சக் நியூட்டன் பிறந்தார்.

அறிவியல் ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும் கிறித்துவ சமயக் கோட்பாடுகளைக் குறிவைத்துத் தாக்குவதுபோல் வெளிவருவது கண்டு மத ஆதிக்கப் பீடம் அலறியது. தனது ஆதிக்கப் பிடியை மேலும் இறுக்கிட முனைந்தது. எனவே 1650ஆம் ஆண்டு ஜேம்ஸ் உஷர் என்ற பாதிரியார் - கடவுள் கி.மு. 4004 அக்டோபர் 23 காலை 9 மணிக்கு உலகத்தைப் படைத்தார் என்று அறிவித்தார். இது மதக் கட்டளையாகக் கருதப்பட்டது. இதற்கு மாறுபட்ட கருத்தை எவரும் இனி சொல்லக்கூடாது என்பதற்கான மத ஆதிக்க அச்சுறுத்தலே இந்த அறிவிப்பு.

அய்சக் நியூட்டன் (1642 - 1727) வானியலில் - இயற்பியலில் மேலும் பாய்ச்சலான அறிவியல் உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார். விண்ணில் இன்று விண்கலங்கள் செலுத்தப்படுகின்றன. இவை நியூட்டனின் விதிகளின் அடிப்படையைக் கொண்டே உருவாக்கப்பட்டு இயக்கப்படுகின்றன.

அண்ட வெளியில் கோள்கள் ஈர்ப்பு விசையால் நுண்ணிய நேர்த்தியுடன் இயங்குகின்றன. இவ்வாறு வடிவமைத்தவர் பேரறிவாக - பரப்பிரம்மமாகத் திகழும் கடவுளே என்று கூறினார். திருச்சபையும் இக் கருத்தை ஏற்றுக் கொணடது. நியூட்டன் அரசில் உயர் பதவிகளை வகித்தார். பெரும் செல்வமும் ஒப்பற்ற அறிவியல் அறிஞர் என்ற பெரும் புகழையும் தன் வாழ்நாளிலேயே பெற்றார்.

கடவுள் படைப்புக் கோட்பாட்டுக்கு அறிவார்ந்த விளக்கம் தரும் நோக்குடன் வில்லியம் பாலே (1743 - 1805) என்பவர் 1802இல் இயற்கை இறையியல் (Natural theology) என்ற கோட்பாட்டை வெளியிட்டார். 'திட்டவட்டமான வடிவமைப்பு களாக உயிரினங்கள் உள்ளன. வடிவமைப்பு இருக்கிற தென்றால் அதை வடிவமைத்தவர் என்றொருவர் இருக்க வேண்டும். அவர்தான் கடவுள்' என்பதே இக்கோட்பாடு.

இத்தகைய சமூகச் சூழலில்தான் சார்லஸ் டார்வின் 1809 பிப்பிரவரி 12 அன்று இங்கிலாந்தில் ஷீருஸ்பரியில் பிறந்தார். டார்வின் சிறு வயதிலேயே இயற்கையில் தோய்ந்து இன்புறும் இயல்பினராக இருந்தார். பாறைகளையும் பூச்சிகளையும் திரட்டுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். நாய்கள், செடிகள், மீன் பிடித்தல் அவருக்கு விருப்பமானவை. இதனால் படிப்பில் நாட்டமின்றி இருந்தார். டார்வினின் தந்தை இராபர்ட் புகழ்பெற்ற மருத்துவர். பெருஞ்செல்வர். சமூகத்தில் செல்வாக்கானவர்.

எனவே, மருத்துவப் படிப்பிற்காக சார்லஸ் டார்வினை 1825இல் எடின்பரோ பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினார். அப் படிப்பு டார்வினுக்குப் பிடிக்கவில்லை. அதனால் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றார். 1831இல் பட்டம் பெற்றார்.

**கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றபோது டார்வின் தன்னை விசுவாசமான கிறித்துவனாகக் கருதிக் கொண்டார். பட்டம் பெற்றபின் மதகுருவாக வேலைக்குச் செல்ல எண்ணங் கொண்டிருந்தார். சார்லசின் பாட்டனார் இராஸ்மஸ் முற்போக்குச் சிந்தனையாளர். படைப்புக் கோட்பாட்டைக் கேள்விக்குட்படுத்திய பொருள்முதல் கொள்கையாளர். தந்தை இராபர்ட் திட்டவட்டமான கடவுள் மறுப்பாளர். இக் குடும்பப் பின்னணியில் வளர்ந்த சார்லஸ் டார்வினிடம் அறிவியல் ஆய்வு நோக்கு மேலோங்கியது.**

கடல் பயணத்திற்கான வரைபடத்தை உருவாக்குவதற் காக தென் அமெரிக்காவின் கடற்கரைப் பகுதிகளை ஆய்வு செய்வதற்கான கடற்பயணக் குழுவில் இயற்கையியலாள ராகப் பணி செய்வதற்கான வாய்ப்பு வந்தது. ஊதியமில்லாத

இப் பணியை டார்வின் ஆர்வமுடன் ஏற்றுக் கொண்டார்.

எச்.எம்.எஸ்.பீகில் என்னும் கப்பலில் 1831 திசம்பர் மாதம் தென் அமெரிக்கப் பயணக் குழுவினருடன் டார்வின் சென்றார். அப்போது டார்வின் பத்து நூல்களை எடுத்துச் சென்றார். ஒன்று விவிலியம். மற்றொரு நூல் சார்லஸ் லையெல் எழுதி நிலவியலின் கோட்பாடுகள் என்ற நூலின் முதல் தொகுதி. லையெல் டார்வினுடைய நெருங்கிய நண்பராக விளங்கிய துடன் டார்வினின் உயிரினங்களின் தோற்றம் நூல் வெளியிடப்படுவதற்கு உற்ற துணையாகத் திகழ்ந்தவர்.

கிட்டத்தட்ட அய்ந்து ஆண்டுகள் தென் அமெரிக்காவின் கடற்கரையை ஒட்டியுள்ள பல நாடுகளிலும், தீவுகளிலும் உள்ள தாவர வகைகளையும், பறவைகள், ஊர்வன முதலான விலங்கினங்களையும் டார்வின் ஆராய்ந்தார். பல வகையான பறவைகள் மற்ற உயிரினங்களைப் பதப்படுத்தி இலண்டனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வந்தார். குறிப்பாக கலபாகோஸ் தீவுகளில் டார்வின் கண்ட ஃபின்ச் பறவைகள், ஆமைகள், உடும்புகள் குறித்து விரிவாக ஆராய்ந்தார். மேலும் அழிந்துபோன பல உயிரினங்களின் புதை படிவங்களை (Fossils)யும் கண்டார். தான் நேரில் கண்டவை குறித்து விரிவான குறிப்புகளை எழுதிக் கொண்டார். பீகில் கப்பல் தன் ஆய்வுப் பயணத்தை முடித்துக்கொண்டு 1836 அக்டோபர் மாதம் இலண்டன் திரும்பியது.

இலண்டன் நகருக்குத் திரும்பியபின் தான் எழுதிய குறிப்புகளையும், பதப்படுத்தி அனுப்பிய உயிரினங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆழ்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். காலபாகோஸ் தீவுகளில் ஃபின்ச் (Finch) குருவிகளில் 14 இனங்கள் (species) இருப்பதைக் கண்டறிந்தார். ஸ்பானிய மொழியில் கலபாகோஸ் (Calapagos) என்றால் ஆமை என்று பொருள். இத் தீவுகளில் ஆமைகள் அதிகமாக இருந்ததால் இப்பெயர் உண்டாயிற்று. இவை உருவத்தில் பெரியவை. டார்வின் இத் தீவில் நடந்து சென்றபோது எதிர்பாராமல் ஒரு பெரிய ஆமையின் அருகில் செல்ல நேரிடும்போது மேலேயிருந்து தரையில் ஒரு பொருள் விழுந்தது போன்ற பெருத்த ஓசையுடன் தன் தலையையும், கால்களையும் தன் பெருத்த ஓட்டிற்குள் முடக்கி மறைத்துக் கொள்ளும். டார்வின் அந்த ஆமையின் முதுகின்மேல் ஏறி அமர்ந்துகொண்டு அதன்பிறகு ஓங்கி ஒரு தட்டு தட்டியதும் அது எழுந்து நடக்கும். சிறிது நேரம் ஆமையின்மீது சவாரி செய்து மகிழ்வார். ஒரு ஆமையைப் பார்த்ததும் அது எந்தத் தீவைச் சேர்ந்த ஆமை என்று கூறிவிடலாம். மேலும் ஒரு குறிப்பிட்ட தீவில் இருந்த ஆமையின் இறைச்சி மட்டும் மிகவும் சுவையாக இருந்தது. ஃபின்ச் பறவை, ஆமை, உடும்பு போன்றவற்றில் பல்வேறுபட்ட இனங்கள் (species) ஏன்? எப்படி? எதற்காக? உண்டாயின என்று டார்வின் ஆராய்ந்தார்.

**தொடக்க காலத்தில் இத் தீவுகளில் பின்ச் குருவிகளே இல்லை. பன்னெடுங் காலத்திற்குமுன் தென் அமெரிக்காவிலிருந்து முதன் முதலில் இத் தீவுகளுக்கு வந்த சிட்டுக் குருவி (sparrow) போன்ற ஒரு குருவி இனத்திலிருந்துதான் டார்வின்கண்ட 14 பின்ச் இனங்களும் தோன்றியுள்ளன. அத் தீவுகளுக்குரிய தனித்தனியான சுற்றுப்புறச் சூழல், தனித்தனியான உணவுப் பழக்கம் காரணமாக தனித்தனி இனமாக உருவாயின. எனவே ஒரு பொது மூதாதையிலிருந்தே (ancestor) உயிரினங்கள் பரிணமிக்கின்றன என்று டார்வின் ஆய்ந்தறிந்தார். ஆனால் இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை எப்படி விளக்குவது என்ற சிந்தனையில் மூழ்கியிருந்தார்.**

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தாமஸ் ராபர்ட் மால்தூஸ் (1776 - 1834) என்பவர் 1798இல் மக்கள்தொகைக் கோட்பாடு என்ற நூலை வெளியிட்டார். இந்நூலை டார்வின் 1838இல் படித்தார். மக்கள்தொகை பெருக்கல் விகிதத்தில் (2, 4, 8, 16 ... ... ...) உயர்கிறது. ஆனால் உணவு உற்பத்தியோ கூட்டல் விகிதத்தில் (1, 2, 3, 4




23 கோடி ஆண்டுகளுக்குமுன் நிலப்பரப்பு தொடர்ச்சியான ஒரே பகுதியாக இருந்ததை விளக்கும் படம் (இர்ஃபான் அபீப் நூல்)

... ... ...) உயர்கிறது. போர்கள், பஞ்சம், நோய்கள் முதலானவை மக்கள் பெருக்கத்தைக் கட்டுக்குள் நிறுத்துகின்றன. "உணவுக்கான மக்களின் வாழ்க்கைப் போராட்டம்" என்று அந்நூலில் கண்டுள்ள ஒரு வரி, டார்வினுக்கு தன் ஆய்விற்கான ஒரு தூண்டுதலான சிந்தனையைத் தந்தது. உயிரின வகைகளிலும் தம் வாழ்க்கைக்கான போராட்டத்தின் காரணமாக மாற்றங்களும் வளர்ச்சிகளும் வகைகளும் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணினார்.


சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளக்கூடிய உயிரினங்களே தொடர்ந்து வாழ்கின்றன; இத் திறனைப் பெற முடியாதவை

அழிந்து விடுகின்றன. இதையே டார்வின் இயற்கைத் தேர்வு என்றார். தகவமைப்பு ஆற்றல், உயிரினத்தின் உடலுறுப்பு அமைப்பில் ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றங்கள் மூலமாகவே தொழிற்படுகிறது. அதன் பிறங்கடைகளுக்கும் (பரம்பரைகள்) இத்தகவமைப்பு மரபு வழியாகச் செல்கிறது. இவ்வாறாக இயற்கைத் தேர்வு வாயிலாக உயிரின வகைகளின் தோற்றம் நிகழ்கிறது என்பதை டார்வின் கண்டறிந்தார்.

கி.மு. 55இல் கிரேக்க அறிஞர் லூக்ரடீஸ் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளாதவை காலப் போக்கில் மறைந்தொழிகின்றன (elimination theory) என்று கூறினார். அதன்பின் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் உயிரினங்கள் தோற்றம் குறித்த விவாதம் தொடங்கியது. சார்லஸ் டார்வின்தான் திட்டவட்டமான அறிவியல் ஆய்வின் அடிப்படையில் உயிரினங்களின் தோற்றம் பற்றிய தன் கண்டுபிடிப்பை வெளியிட்டார்.

டார்வின் தன்னுடைய ஆய்வை 1842இல் 35 பக்கங்களில் பென்சிலில் குறிப்புகளாக எழுதினார். 1844இல் 350 பக்கங்களாக விரித்து எழுதினார். இப்போதுள்ள வடிவத்திலேயே உயிரினங்களைக் கடவுள் படைத்தார் என்ற மதக் கோடபாட்டுக்கு எதிரானதாகத் தன்னுடைய ஆய்வின் முடிவு இருப்பதால், அதனை வெளியிடுவத்குத் தயங்னார். தான் இறந்த பிறகு இதை நூலாக வெளியிடவேண்டும் என்று தன் மனைவியிடம் கூறியிருந்தார். ஆயினும் டார்வின் 1836இல் கடற்பயணத்தை முடித்துக்கொண்டு இலண்டன் திரும்பியபிறகு, தன்னுடைய கடற்பயண அனுபவங்கள் குறித்து பல கட்டுரைகளை ஏடுகளுக்கு எழுதினார். அதனால் டார்வினின் புகழ் பரவியிருந்தது.

6.5 கோடி ஆண்டுகளுக்குமுன் தென்னிந்தியா மட்டுமே நிலப்பகுதியாக இருந்தது. வட இந்தியா கடலாக இருந்ததை விளக்கும் படம். (இர்ஃபான் அபீப் நூல்)




டார்வினின் நெருங்கிய நண்பர்களான லையெலும், ஹூக்கரும் டார்வினின் ஆய்வு முடிவை விரிவான நூலாக எழுதி விரைவில் வெளியிடுமாறு வலியுறுத்தி வந்தனர். எனவே 1856இல் பெரிய நூலாக எழுதத் தொடங்கினார். இந் நிலையில் 1858 சூன் மாதம் ஆல்பர்ட் ரஸ்ஸல் வாலஸ் என்பவரிடமிருந்து டார்வினுக்கு நீண்ட கடிதம் ஒன்று வந்தது. டார்வின் பல ஆண்டுகள் கடுமையாக உழைத்து ஆய்ந்து கண்டறிந்த உயிரினங்களின் பரிணாமக் கோட்பாட்டை வாலஸ் அவருடைய மடலில் விரிவாக விளக்கியிருந்தார். வாலசும் இங்கிலாந்து நாட்டவர். தென் அமெரிக்கத் தீவுகளிலும் கிழக்கு ஆசியத் தீவுகளிலும் உயிரினங்கள் பற்றி வாலஸ் மேற்கொண்ட - ஆய்வுகளின் அடிப்படையில் தன் கருத்தை டார்வினுக்குத் தெரிவித்திருந்தார். வாலசின் கடிதத்தால் டார்வின் மிகுந்த மனச் சோர்வடைந்தார். அவருடைய நண்பர்கள் அவரைத் தேற்றினர்.

டார்வினின் நண்பர்கள் இலண்டன் லினியன் கழகத்தில் ஒரே தலைப்பின்கீழ் டார்வினும், வாலசும் கட்டுரை படிக்க ஏற்பாடு செய்தனர். இனியும் காலம் தாழ்த்தக்கூடாது என்று கருதி டார்வின் தன்னுடைய நூலை விரைந்து எழுதி முடித்தார்.

1859 நவம்பர் 24 அன்று இந்நூல் வெளியிடப்பட்டது. “இயற்கைத் தேர்வு மூலம் உயிரினங்கள் தோற்றம் வளர்ச்சி அடைதல் அல்லது வாழ்க்கைப் போராட்டத்தில் சாதகமான மாற்றங்களைப் பெறும் உயிரினங்கள் பாதுகாத்து வைத்தல்” (On the origin of species by means of natural selection or the preservation of Favoured rules in the struggle for life) என்பதே இந்நூலின் முழுமையான தலைப்பு. இவ்வுலகத்தையும், உலகில் உள்ள உயிரினங்களையும் மனிதனையும் இன்றுள்ள வடிவிலேயே கடவுள் படைத்தார் என்று காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்த கோட்பாட்டை டார்வினின் பரிணாமக் கோட்பாடு அணுகுண்டு போட்டது போல் தூள்தூளாக அடித்து நொறுக்கியது.

அச்சிடப்பட்ட 1250 படிகளும் வெளியிட்ட அன்றே விற்றுத் தீர்ந்துவிட்டன. 502 பக்கங்கள் கொண்ட அந்நூலின் விலை 15 ஷில்லிங். 1860இல் 2000 படிகள் அச்சிடப்பட்டன. 1861இல் மூன்றாம் பதிப்பாக 3000 படிகள் வெளிவந்தன. 1866இல் நான்காம் பதிப்பு வெளிவந்தது. டார்வினால் திருத்தி அமைக்கப்பட்ட 5அய்ந்தாம் பதிப்பு 1872இல் வெளிவந்தது. 1876இல் இங்கிலாந்தில் மட்டும் இந்நூல் 16,000 படிகள் விற்பனை ஆயின.

வாழ்க்கைப் போராட்டத்தில் உடல் உறுப்புகளின் அமைப்பில் சாதகமான மாற்றங்களைப் (Favourable variations) பெறுபவை தொடர்ந்து உயிர் வாழ்கின்றன. சாதகமான கூறுகள் பரம்பரைகளுக்கும், தொடர்ந்து செல்கின்றன. சாதகமான மற்றங்களைப் பெற முடியாத உயிரினங்கள அழிந்து விடுகின்றன. இதையே இயற்கைத் தேர்வு என்று டார்வின் குறிப்பிடுகிறார். **இவ்வாறாக பொது மூதாதையரிலிருந்து உயிரினங்கள் பரிமணமித்தன என்பதே டார்வின் கோட்பாடு. இயற்கைத் தேர்வு -** சாதகமான கூறுகள் ஓர் உயிரினத்தில் எவ்வாறு உண்டாகின்றன என்பதை டார்வின் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவர் காலத்தில், இன்று மிகச்

சிறப்பானதொரு அறிவியல் பகுதியாக விளங்கும் மரபியல் (Genetic Science) உருவாகவில்லை. டேனிஷ் நாட்டினரான ஜோஹன்சன் (1857 - 1927) 1903ஆம் ஆண்டில் ஜீன் (Gene) என்ற சொல்லை உருவாக்கினார். எனவே டார்வின் ஜீன்கள் பற்றி ஏதும் அறியார். இயற்கைத் தேர்வின் அடிப்படை அளவுகோலாக ஜீனை எடுத்துக்கொள்வதே சிறப்பாகும் என்று ரிச்சர்டு டாக்கின்ஸ் கூறுகிறார்.

1953இல் ஜேம்ஸ் வாட்சன் என்பவர் டி.என்.ஏ. (De oxy Ribo Neuclic Acid - DNA)வைக் கண்டுபிடித்தார். உயிரினங்களில் உள்ள உட்கருவில் குரோமோசோம்கள் உள்ளன. இவை ஒருவகையான ஏணி போன்ற உருவ அமைப்பை உடையவை. ஒவ்வோர் இனத்திற்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குரோமோசோம்கள் உள்ளன. மனிதனில் 46 குரோமோசோம்கள் உள்ளன. குரங்கு 42, முயல் 44, எலி 42, கொசு 6 குரோமோசோம்களைக் கொண்டுள்ளன. குரோமோசோம்கள் இழை போன்றவை. இவ் இழைகளில் மணிகள் கோத்தாற்போல் ஜீன்கள் உள்ளன. ஜீன்கள் டி.என்.ஏ.வால் ஆனவை. ஆண் - பெண் குரோமோசோம்கள் இணையும்போது ஜீன் பரிமாற்றம் நடக்கிறது. பெற்றோரின் உடற்கூறுகள் வழித்தோன்றல்களுக்கு ஜீன்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

மனிதர்களில் 1,00,000, முதல் 1,50,000வரை ஜீன்கள் இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால் இப்போது 30,000 ஜீன்கள் இருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஜீனும் உடலின் ஒரு கட்டளை வாக்கியமாக உள்ளது. (A gene is a sentence of instruction for the body) இந்த 30,000 ஜீன்கள் தமக்குள் பல்வேறு வகைகளில் தொழிற்படுகின்றன. அதனால்தான் இன்று உலகில் உள்ள 630 கோடி மனிதர்களும் உருவ அமைப்பில் குறைந்த அளவிலேனும் வேறுபாடு உடையவர்களாக உள்ளனர். **ஜீன்கள் உடல் அமைப்பை மட்டுமே தீர்மானிக்கின்றன. அறிவாற்றலுக்கும் ஜீன்களுக்கும் தொடர்பில்லை.**

மரபியல் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய நிலையில் டார்வினின் இயற்கை தேர்வு மூலமான உயிர்களின் தோற்றம் வளர்ச்சி என்பதைத் திட்டவட்டமாக விளக்க முடிகிறது. உயிரற்ற பொருள்களிலிருந்து குறிப்பிட்ட சூழலில் நூறுகோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு செல் உயிரி தோன்றியது. ஒரு செல் உயிரியிலிருந்து இன்று மனிதன் வரை பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது.

சிம்பன்சியின் ஜீன் அமைப்பு மனிதனின் ஜீன் அமைப்பில் 98.4 விழுக்காட்டைப் பெற்றுள்ளது. 1.6 விழுக்காடு வேறுபாட்டால்தான் சிம்பன்சியைவிட மனிதன் மூளை வளர்ச்சியிலும் பேசுந்திறன் உறுப்பிலும் உயர்ந்து நிற்கிறான். கழுதைக்கும் நமக்கும் 80 விழுக்காடு ஜீன்கள் ஒத்துள்ளன. ஒரு செல் உயிரியான பாக்டீரியாவில் மனிதனில் உள்ள 30,000 ஜீன்களில் 200 ஜீன்கள் உள்ளன.

ஓர் உயிரினத்திலிருந்து மற்றோர் உயிரினமாகப் பரிணமிப்பதற்குள் இடைப்பட்ட நிலையிலான வடிவமுடைய வகைகள் உண்டாகின்றன. மனிதனும் மனிதக் குரங்கும் 70 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பிரியத் தொடங்கின. இன்று மனிதக் குரங்கும் மனிதனும் இருக்கின்றன. மனிதக் குரங்கிலிருந்து 25 இலட்சம் ஆண்டுகளுக்குமுன் கைகளைப் பயன்படுத்தத் தொடங்கிய மனிதன் (Homo erectus) தோன்றினான். 18 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் நிமிர்ந்து நடக்கத் தொடங்கிய (Homo havilis) தோன்றினான். நியாண்டர்தால் மனிதன் 2,50,000 முதல் 30,000 ஆண்டு காலத்தில் வாழ்ந்தான். நியாண்டர்தால் மனிதன் குறிப்பாக அய்ரோப்பாவில் வாழ்ந்தவன். நியாண்டர்தால் மனிதன் இறந்தவர்களைப் புதைத்தான். நியாண்டர்தால் மனிதனின் எலும்புகளின் டி.என்.ஏ.வை ஆய்வு செய்ததில் நியாண்டர்தால் மனிதன் இன்றைய மனிதனிலிருந்து வேறுபட்டவன் என்பது உறுதியாகியுள்ளது (தி இந்து, 25.09.2009).

70 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மனித மூதாதையரின் மூளை 340 சி.சி. அளவில் மட்டுமே இருந்தது. இன்றைய மனிதனின் (Homo sapiens) மூளை அளவு 1,300 - 1,500 சி.சி. என்ற அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது.

**நிலவியல் ஆய்வின்படி நாம் வாழும் பூமி 460 கோடி ஆண்டுகளுக்குமுன் உருவானது. பாறைகள் 300 கோடி ஆண்டுகளுக்குமுன் உருவாயின. 23 கோடி ஆண்டு களுக்குமுன் உலகின் நிலப்பரப்பு முழுவதும் ஒரே தொடர்ச்சியாக இணைந்திருந்தது. பிறகு நிலப்பரப்பு பிரிந்தது. பிரிந்தவை நகரத் தொடங்கின. 6.5 கோடி ஆண்டுகளுக்குமுன் வரை தென்னிந்தியா மட்டுமே இருந்தது. இன்றைய வட இந்தியா கடலாக இருந்தது. அய்ந்து பெரும் பனி ஊழிகள் பல கோடிக்கணக்கான - இலட்சக்கணக்கான ஆண்டுகள் நீடித்தன. கடைசிப் பனி ஊழி 16,000 ஆண்டில் அதன் உச்சத்தில் இருந்தது. இப் பனி ஊழி கி.மு. 11,000 ஆண்டில்தான் முடிவுக்கு வந்தது.**

இவ்வாறாக பல கோடிக்கணக்கான ஆண்டுகளில் நிலப்பரப்பு அமைப்பில், கடல் பரப்பு அமைப்பில் மற்றும், தட்ப வெப்ப நிலையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள்தாம் உயிரினங்களின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அச்சாணி யான பங்கினை வகித்தன.

உயிரினங்களின் தோற்றத்தில் சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப உறுப்புகளில் சாதகமான மாற்றங்களைப் பெறும் உயிரினங்கள் வாழ்கின்றன. பிற உயிரினங்களின் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டது போலவே மனிதனாகப் பரிணமித்த வரலாற்றில் சாதகமான மாற்றங்களை உண்டாக்குவதில் கருவிகள் முதன்மையான பங்கு வகித்துள்ளன. மேலும் மனித சமூக வளர்ச்சியிலும் சமூக உற்பத்தியிலும், உற்பத்தி உறவுகளிலும் கருவிகள் தொடர்ந்து முக்கியமான பங்காற்றி வந்துள்ளன என்று மார்க்சும் எங்கல்சும் ஆராய்ந்து கூறினர். இதை வரலாற்றுப் பொருள் முதல் கோட்பாடாக வகுத்தளித்தனர்.

Organ என்ற இலத்தீன் சொல்லுக்கு கருவி என்று பொருள் என்பது மார்க்சுக்குத் தெரியும். 1859 நவம்பரில்

வெளியான உயிரினங்களின் தோற்றம் நூலை ஏங்கெல்சு படித்தார். 1859 திசம்பர் 12 அன்று ஏங்கெல்சு மார்க்சுக்கு ஒர மடல் எழுதினார். டார்வின் நூலைப் படித்துக் கொண்டிருக் கிறேன். கடவுள் பற்றிய தத்துவத்தில் தெய்விகப் படைப்பு என்ற ஒன்று இதுநாள்வரை தகர்க்கப்படாமல் இருந்தது. அந்த வேலையை டார்வின் நூல் செய்திருக்கிறது. இயற்கையின் பரிணாம வளர்ச்சிபற்றி இதுவரையில் விளக்கிட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைவிட ஒப்பரிய தன்மையில் மிக வலுவான ஆதாரங்களுடன் டார்வின் பரிணாமக் கோட்பாட்டை எண்பித்திருக்கிறார்'' என்று அம் மடலில் எங்கெல்சு எழுதியிருக்கிறார்.

**டார்வின் நூலைப் படித்தபின் மார்க்சு, 1860 திசம்பர் 19 அன்று ஏங்கெல்சுக்கு எழுதிய மடலில், "டார்வினுடைய நூல் முதன்மை வாய்ந்ததாகும். வர்க்கப் போராட்டத்தை விளக்குவதற்கு மிகச் சிறந்த இயற்கை விஞ்ஞான அடித்தளத்தை எனக்குக் கொடுத்திருக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். மார்க்சின் கடும் உழைப்பால் உருவான மூலதனம் முதல் தொகுதி 1867ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலில் டார்வினின் ''உயிர் வகைகளின் தோற்றம்'' தன்னுடைய கோட்பாட்டை விளக்குவதற்கு மிகவும் உதவியாக இருந்தது என்பதை விளக்கியுள்ளார்.**

மனிதகுலத்தின் நெடிய வரலாற்றில் கல், மரம், செம்பு, இரும்பு ஆகியவற்றாலான கருவிகள், ஆயுதங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப மனித நாகரிகம் வளர்ந்தது. மனிதனின் அறிவுத் திறனும் உணவு உற்பத்தியின் வளர்ச்சியும் இதற்கேற்ப இருந்தன. இதிலிருந்தே வர்க்கப் பிரிவினையும் உண்டாயிற்று. இன்றும் நவீன தொழில்நுட்பக் கருவிகள் உடையவரே ஆதிக்க வர்க்கமாக உள்ளனர். டார்வின் கோட்பாட்டு மார்க்சியத்தை விளங்கிக்கொள்ளப் பெருந் துணையாக உள்ளது.

**டார்வின் 1876இல் தன்வரலாற்றை எழுதினார். "நான் பீகில் கப்பலில் ஆய்வுப் பயணம் செய்த காலத்தில் பைபிளின் பழைய ஏற்பாடுகள் பற்றிச் சிந்தித்தேன். உலக வரலாறு பற்றிய பைபிளின் தவறான கருத்துகள், கடவுளை வஞ்சம் தீர்க்கும் வன்கணாளராகச் சித்தரிக்கப்பட்டிருத்தல் ஆகியவற்றை வைத்து, பைபிளும் இந்துக்களின் புனித நூல்கள் போன்றே நம்புவதற் குரிய தன்று, காட்டு மிராண்டிகளின் நம்பிக்கைகளைக் கொண்டது என்ற முடிவுக்கு வந்தேன்" என்று எழுதியுள்ளார்.**

1881 செப்டம்பர் 28 அன்று தன் நண்பர்களுக்கு டார்வின் விருந்தளித்தார். மார்க்சின் மகள் இலியா னோவைப் பின்னாளில் மணந்து கொண்ட எட்வர்ட் அந்த நண்பர் குழாத்துள் இருந்தார். அப்போது கடவுள் பற்றிய விவாதம் எழுந்தது. "கிறித்துவ சமயத்தை நாற்பது ஆண்டு களுக்கு முன்பே நான் துறந்துவிட்டேன். கடவுள் பற்றிய கவலை இல்லாக் கொள்கையாளன் (agnostic) நான்'' என்று அப்போது டார்வின் தன் நண்பர்களிடம் கூறினார்.

சார்லஸ் டார்வின் பிறந்த 200ஆவது ஆண்டுவிழா பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. உயிரினங்களின் தோற்றம் நூல் வெளிவந்து 150 ஆண்டுகளாகின்றன.

புராண இதிகாசங்களின் மூடத்தனங்களை மட்டும் கண்டிக்கின்ற விளக்கிச் சொல்லுகிற - விமர்சிக்கிற பகுத்தறிவு பயன் தராது. டார்வினின் உயிரினங்களின் தோற்றம் போன்ற அறிவியல் அடிப்படைகளை அறிவதுடன், மார்க் சியம் விளக்குகின்ற மனிதகுல வரலாற்றையும் வர்க்கப் போராட்டத்தையும் நாம் கற்கவேண்டும். இதுவே அறிவு விடுதலைக்கும் சமூக விடுதலைக்குமான உயரிய வழியாகும்.

**கட்டுரை எழுதத் துணை செய்த நூல்கள் :**

டார்வின் ஆய்வும் விளைவும் - ப. செங்குட்டுவன், உயிரினங்களின் வரலாறு கண்ட டார்வின் - ப. வெங்குட்டுவன், Prehistory - Irfan Habib. Marx's Ecology - John Bellamy Foster, சார்லஸ் டார்வின் - ஓரியண்ட் லாங்மேன் வெளியீடு. •

## தமிழ் ஐந்திணை நூல் வெளியீடு

பாவலர் மு.வ. பரணனார் யாத்து உரை வரைந்துள்ள அகப் பொருள் இலக்கியம் தமிழ் ஐந்திணை நூலை 1.2.2009 அன்று திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மு. பொன்ன வைக்கோ வெளியிட்டார். பொறிஞர் சி..ந.சி. இராம முத்தய்யா நூலின் முதற் படியைப் பெற்றுக்கொண்டார். இந் நிகழ்ச்சிக்கு முனைவர் இரா. இளவரசு தலைமை ஏற்றார். முனைவர் தமிழண்ணல் இலக்கியச் செம்மல் இரா. இளங்குமரனார் ஆகியோர் நூலைத் திறனாய்வு செய்து வாழ்த்துரைத்தனர். முனைவர் கு. திருமாறன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



புலவர் **கி.த. பச்சையப்பன்**
அவர்களின்
வாழ்க்கைத் துணைவர்
ஆசிரியர்
**ஆ.கு. செயம்மாள்**
அவர்களின்
மூன்றாமாண்டு
நினைவுநாளை முன்னிட்டு
சிந்தனையாளன்
வளர்ச்சிக்கு உருவா
ஆயிரம் அளிக்கப்பட்டது.

# பாவிகளும் அப்பாவிகளும் ... ?

**- வழிப்போக்கன்**

அப்பாவித் தமிழர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று அன்றாடம் பேசப்படுகிறது; அனைவரும் பேசுகிறார்கள்!

அப்படியானால் கொல்லப்படவேண்டிய பாவிகள் யார்? கொல்லப்படவேண்டிய தமிழர்கள் யார்?

ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள் வாழ்வுரிமைக்காகப் போராடுகிறார்கள்; மறுக்கப்பட்ட அரசியல் உரிமைளுக்காகப் போராடுகிறார்கள். அம் மக்களின் போராட்டத்தினை தலைமைதாங்கி நடத்துகிறார்கள் போராளிகள். அவர்களில் கொல்லப்பட வேண்டியவர்கள் யார்?

தமிழர்களின் போராட்டத்தினை - போர்க்குணத்தினை களங்கப்படுத்தவே சிங்கள அரசு "பொதுமக்கள் வேறு, போராளிகள் வேறு" எனப் பிரித்துப் பேசுகிறது. அதற்கு தில்லியிலும் சென்னையிலும் சிலர் துணைபோகிறார்கள்.

தெரிந்தோ தெரியாமலோ தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களும் இப்படிப் பேசுகிறார்கள். தமிழர் பத்திரிகை களும் இப்படியே எழுதுகின்றன. ஈழத் தமிழரின் போராட்டத்தை ஆதரிப்பவர்களுள் ஒரு பிரிவினர் இப்படியேப் பேசுகிறார்கள். இது ஈழத் தமிழர் நலனுக்கு எதிரானது!

போராளிகளையும், மக்களையும் பிரித்துப் பார்ப்பது ஆளும் வர்க்கப் பார்வை; அரசியல் தந்திரம் மிக்க சொற்கள்; உலக நாடுகளை ஏமாற்றும் வித்தை. எனவே தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

இலங்கை அரசாங்கம் சிங்களரின் கொலைவெறித் தாக்குதலை நியாயப்படுத்தவே அப்பாவித் தமிழர்கள் வீட்டைவிட்டு - ஊரைவிட்டு - வெளியே வந்துவிடுங்கள். காடுகளிலும், முகாம்களிலும் தஞ்சம் புகுந்துவிடுங்கள்; நாங்கள் போராளிகளைக் கொன்று விடுகிறோம் என்று விளம்பரப்படுத்துகிறது!

சொந்த வீட்டைவிட்டு - ஊரைவிட்டு ஓடிவிடு என்றால் யார் போவார்கள்? காங்கிரசார் போவார்களா?

போராடுபவர்களைக் கொன்று ஒழித்துவிட்டால் உரிமை கேட்பவர்கள் யார்? பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் யார்? சிங்கள அரசோடு கூட்டுச் சேர்ந்த கருணாவும் வரதராசப்பெருமாளுமா?

இலங்கையில் தமிழர்கள் 1956முதல் சம உரிமை கேட்டுப் போராடுகிறார்கள். அன்று அமைதியாகப் போராடினார்கள்; அடிவாங்கினார்கள். இந்தியா உதவ முன்வரவில்லை. 1983இலும் 1987இலும் உலக நாடுகள் பல உதவிட முயன்றபோது இந்திய அரசினர் அந்நாடுகளின் முயற்சிகளைத் தடுத்தார்கள். 1991க்கு முன்வேறு, பின் வேறு என்று பேசுபவர்கள் இவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

இன்று ஆயுதப் போராட்டம் நடத்துகிறார்கள்; ஆவேசமாகத் தாக்குகிறார்கள். ஆகவே சிங்கள அரசுக்குத் துணை தேவைப்படுகிறது. பல்வேறு தந்திரங்களைச் செய்கிறார்கள்.

எனவே, ஈழத் தமிழர்க்கு ஆதரவான இந்தியத் தமிழ் மக்களும், தலைவர்களும், பத்திரிகைளும் கவனமாகப் பேசவேண்டும்; எழுதவேண்டும்! ஆளும் வர்க்கத் திசை திருப்புதல்களை அடையாளம் கண்டுகொள்ளவேண்டும்!

போராளிகள் மக்களுக்காகப் போராடுகிறார்கள்; மக்களும் போராடுகிறார்கள். போராட்டத்துக்கிடையே வாழ்க்கையும் நடத்துகிறார்கள். தங்களுக்கான நிர்வாக அமைப்புகளையும் உருவாக்கியுள்ளார்கள். அவர்களது உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். அப்போதுதான் போராட்டம் நிற்கும்.

உள்நாட்டில் பயங்கரவாதிகளை அடக்கிட டாங்கிகள், பீரங்கிகள், விமானப் படைகளைப் பயன்படுத்தக்கூடாது. இரண்டு நாட்டுப் படைகளுக்குள் சண்டை நடக்கிறபோதுதான் டாங்கிகளும், பீரங்கிகளும், விமானப் படைகளும் குண்டு வீசும். அப்போதும் மக்கள் வசிப்பிடங்கள், மருத்துவ மனைகளில் (Civilian Areas) குண்டு வீசக்கூடாது என்பதுதான் உலக நெறி. இந்த நெறிமுறைகளையும் இலங்கை மதிக்கவில்லை. எனவே சிங்களர் நடத்துவது இனப்படுகொலை - Genocide.

இலங்கை அரசு சொல்வதை இந்தியா ஏற்கிறது. அரசு சொல்வதை தமிழகக் காங்கிரசார் சொல்கிறார்கள்; அ.தி.மு.க. வினரும் சொன்னார்கள்; இப்போது தி.மு.க.-வினரும் சொல்கிறார்கள்.

இங்கு தேர்தல் வரும்போது ஈழத்தில் போர் நடைபெறுவது எல்லோருக்கும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே 'அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்கிறார்கள்.

சிங்கள அரசினர் 'அப்பாவிகளை'ப் பிரித்துவிட்டு, 'பாவிகளை' மட்டும் கொல்கிறோம் என்கிறார்கள். கொல்லப் பட்டவர்களை எல்லாம் பாவிகள் பட்டியலில் சேர்க்கிறார்கள்!


பாவிகள் யார்? அப்பாவிகள் யார்? என்பதை வரலாறு பதிவு செய்யும்! •

## தில்லைவனம் தமையனார்
## பழமலை மறைவுற்றார்



சின்ன புங்கனேரி து. பழமலை தன்னுடைய 85ஆம் வயதில் 30.1.2009 அன்று இயற்கை எய்தினார். இவருடைய திருமணம் 1952இல் நடை பெற்றது. இந்தத் திருமணம்தான் காட்டுமன்னார்கோயில் வட்டாரத்தில் முதன் முதலில் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணமாகும். அது முதற்கொண்டு இவரும், சின்ன புங்கனேரி ஊரைச் சார்ந்தவர்களும் வீட்டு நிகழ்ச்சி களுக்குப் பார்ப்பனர்களை அழைப்பதில்லை என்பதில் விடாப்பிடியாக இன்றுவரை இருந்து வருகின்றனர். இதற்குக் காரணமானவர் மறைந்த ஆசிரியர் வீரானந்த புரம் ந. கணபதி அவர்கள் ஆவார். அவர் இறுதிவரை இவ் ஊர் மக்கள்மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். மறைந்த பழமலைக்கு பாப்பம்மாள் என்ற மனைவியும், அருளரசி தியாகராசன் என்ற மகளும், இராவணன், இங்கர்சால் என்கின்ற மகன்களும் உள்ளனர். அவரின் குடும்பத்தினரை வே. ஆனைமுத்து 1.2.2009இல் நேரில் சந்தித்து துக்கம் விசாரித்தார். பழமலை படத்திறப்பு 14.2.2009 அன்று நடைபெற்றது. கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் பா. மோகன் படத்தைத் திறந்து வைத்து இரங்கல் உரையாற்றினார். தோழர் து. தில்லைவனம் நினைவுரையாற்றினார்.

## தில்லைவனம் இளைய அண்ணார்
## தெய்வசிகாமணி மறைவுற்றார்



து. தில்லைவனம் இளைய தமையனார் தெய்வ சிகாமணி அவர்கள் தன்னுடைய 78ஆம் அகவையில் 20.2.2009 அன்று மறைவுற்றார். அவர் பழமலை யின் தம்பியும், தோழர். தில்லை வனம் அவர்களின் அண்ணனும் ஆவார். இவருடைய திருமணம் ஒரேமேடையில் மூன்று இணையர் களுக்கு 1956இல் நடைபெற்றது. காட்டுமன்னார்கோவில் வட்டாரத்தில் நல்ல சுயமரியாதை எழுச்சியை உண்டாக் கியது. இவருக்கு இராசம்மாள் என்கிற மனைவியும், இரணியன், சங்கர் என்ற மகன்களும் பகுத்தறிவு, அல்லி என்கின்ற மகள்களும் உள்ளனர். எல்லாருமே புரோகித மறுப்பில் உறுதி யானவர்கள். இவர்களை வே. ஆனைமுத்து நேரில்கண்டு 24.2.2009இல் துக்கம் விசாரித்தார்.

தோழர் து. தில்லைவனம் 20.11.2008இல் நோய் வாய்ப் பட்டார். அச் செய்தியை அறிந்த நாள்முதல் உணவு உண்பதை இவர் மறுத்துவிட்டார். உடல்நிலை குன்றிய அவரை 1.2.2009இல் வே. ஆனைமுதது நேரில்கண்டு தேறுதல் கூறிவந்தார். இவரின் மறைவை அறிந்து 24.2.2009இல் வே. ஆனைமுத்து இவரது குடும்பத்தார்க்கு ஆறுதல் கூறினார்.

## குமிழியம் கோ. நெடுஞ்செழியன் மறைவுற்றார்

தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளில் பற்றுக் கொண்டவரும், வே. ஆனைமுத்துவின் அன்புத் தோழரும், தி.மு.க. செயல்வீரருமான தோழர் குமிழியம் கோ. நெடுஞ் செழியன், தம் 74ஆம் அகவையில் 26.2.2009 நண்பகல் 12.10 மணிக்கு மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். அவர் 5.10.1935இல் தோன்றியவர்.

உடையார்பாளையம் பகுதியில் சுயமரியாதைத் திருமணங்கள் பலவற்றை நடத்தி வைத்தார்; தந்தை பெரியாரை குமிழியத்துக்கு அழைத்து மின்விளக்கு ஏற்றும் விழாவை நடத்தினார். 1983 - 1988இல் குமிழியம் ஊராட்சித் தலைவராக விளங்கி நற்பணியாற்றினார். அப்பகுதிகளில் தி.மு.க.வின் மூத்த செயல்வீரராக, விளங்கினார். இவருடைய துணைவியார், மகன், மகள்கள் மற்றும் குடும்பத்தாருக்கும், தி.மு.க, மா.பெ.பொ.க. தோழர்களுக்கும், ஆழ்நத இரங்கலை உரித்தாக்குகிறது.

- ஆசிரியர் குழு

## விழுப்புரம் சீ. செல்வாம்பாள் மறைவுற்றார்



விழுப்புரம் மா.பெ.பொ.க. தோழர், பெரியார் தொண்டர் சீனுவாசன் அவர்களின் மனைவி யும், விழுப்புரம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் நகரச் செயலாளர் சீனு. தங்கராசு அவர்களின் தாயாரு மான கொல்லி (எ) செல்வாம்பாள் அவர்கள் 18.1.2009 அன்று இரவு 8 மணியளவில் தம் 69 ஆவது அகவையில் மறைவுற்றார். அன்னாரின் இரங்கல் நிகழ்ச்சியில் அனைத்துக் கட்சித் தோழர்களும் கலந்துகொ;டு எவ்வித சடங்குகளும் இன்றி அடக்கம் செய்யப்பெற்றது. அவரை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினர்க்கு மா.பெ.பொ.க. தம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தேசிய இனங்களின் விடுதலை

- வடக்கு மாங்குடி **பா. மோகன்**

உலகில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன. தேசிய இன அடிப்படையில் தேசங்களும் இருக்கின்றன. பரந்து விரிந்த இவ்வுலகில், தேசிய இனங்கள், வரலாற்று வழிப்பட்ட தங்களுடைய தனித் தன்மைகளையும் பண்பாட்டு அடையாளங்களையும் தக்கவைத்துக் கொள்ள விரும்பு கின்றன. தமிழகத்தில் சேரன், சோழன், பாண்டியன் என்கிற தனித்தனி அரசுகள் இருந்த போதிலும் இலக்கியங்கள், கலைகள், பண்பாடு, வாழ்க்கை நெறிகள் என்பன ஒட்டு மொத்தத் தமிழருக்கும் பொதுவானவையாக - உரியனவாக விளங்கின.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி செய்யத் தொடங்கு வதற்கு முன் பல்வேறு தேசிய இனங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தன. ஆங்கிலேய ஆட்சிதான் தன்னுடைய நிர்வாக வசதிக்காக இந்தியா ஒரே நாடு என்பதை உருவாக்கியது. இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரசு போராட்டங்களை நடத்தியது. மொழிவழியிலான தேசிய இன உணர்வுகளை மழுங்கடிக் கும்படியான தன்மையில் இந்தியத் தேசியம் என்பதை காங்கிரசு ஊட்டி வளர்த்தது. இந்தியத் தேசியம் இல்லாத ஒன்று. புராணப் புளுகு மூட்டைகளை வெகுமக்கள் நம்புவது போல், பொய்யான இந்தியத் தேசியத்தை பார்ப்பன மேல்சாதி ஆதிக்க வர்க்கங்கள் வளர்த்தெடுத்தன; மக்களை நம்பச் செய்தன. இத்துடன் இந்தி மொழியே சுதந்தர இந்தியாவிற் கான ஆட்சிமொழி என்றும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இரண்டாம் உலகப்போரில் சர்வாதிகாரி இட்லர் அய்ரோப்பாவில் பல நாடுகளைப் பிடித்தார். எனவே இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, சோவியத் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். இட்லரின், முசோலினியின் நாசிச - பாசிசப் போர் வெறியை ஒழிக்கா விட்டால் தங்கள் நாடுகளும் அவர்களுக்கு அடிபணியும் நிலை ஏற்படும் என்பதை உணர்ந்தனர். எனவே கூட்டாக எதிர்த்துப் போரிட முடிவு செய்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, உலகின் பேரரசாகிட அமெரிக்கா திட்டமிட்டது. எனவே பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளின் காலனி நாடுகளாக இருந்த நாடுகளுக்கு விடுதலை வழங்கவேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை போட்டது.

அதன்படி, இரண்டாம் உலகப்போருக்குப்பின் காலனி நாடுகள் படிப்படியாக விடுதலை அடைந்தன. மேலும் தேசிய இன அடிப்படையில் நாடுகள் உருவாயின. அனால் மதத்தின் பேரால் இந்தியா - பாக்கிஸ்தான் எனத் தனித்தனி நாடுகளாகச் சுதந்தரம் அடைந்தன. பெரியார் வெள்ளையனிடம் கேட்ட தனி நாடு கிடைக்கவில்லை. இந்தியச் சுதந்தரம் தேசிய இனங்களின் சிறைக்கூடமாகவே அமைந்தது.

ஒரே மதமாக இருந்தபோதிலும் உருது - வங்காளம் என்ற மொழி முரண்பாட்டின் விளைவாக 1971இல் வங்க தேசம் பாக்கிஸ்தானிலிருந்து பிரிந்தது. இதன்பிறகுகூட இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் தங்கள் தன்னுரிமைக் காகத் தீவிரமாகப் போராடவில்லை. நாகாலாந்தின் போராட்டம் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்பட்டது. காலிஸ்தான் போராட்டம் சீக்கிய மதவெறி என்பதாக அமைந்துவிட்டது.

இந்தியாவைப் போலவே 1948இல் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தது. ஆனால் சிங்கள - பவுத்த ஆதிக்க சக்திகள் காலங்காலமாக இலங்கையில் வாழ்ந்துவரும் ஈழத் தமிழர்களை அந்நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் வகையில் இலங்கை அரசின் மூலம் சட்டங்களை இயற்றி அவற்றைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி பயங்கரமான கொடுமைகளைத் தமிழர்கள்மீது ஏவி வருகின்றன.

சிறுபான்மை தேசிய இனம், பெரும்பான்மை தேசிய இனத்தால் ஒடுக்கப்படும்போது, பெரும்பான்மை தேசிய இனத்தில் உள்ள பாட்டாளி வர்க்கம் சிறுபான்மை தேசிய இனத்திற்காகப் போராட முன்வரவேண்டும் என்று இலெனின் கூறியுள்ளார். ஆனால் இலங்கையில் கம்யூனிஸ்டு கட்சி என்று சொல்லிக்கொண்டு சனதா விமுக்தி பெரமுனா என்ற கட்சி சிறுபான்மையினரான தமிழர்களை ஒடுக்குவதிலும், கொன்றொழிப்பதிலும் முன்னணியில் நிற்கிறது. இந்தியாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் ஈழத் தமிழரின் தேசிய இன விடுதலைக்கு எதிராகவே உள்ளது என்பதும் வெட்கக்கேடு!

இலங்கையில் ஈழத் தமிழர்களை இராசபக்சே அரசு முழுமையாக அழித்தொழிப்பது என்று இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் துணையுடன் போர்த் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது.

இலெனின் கூறியவாறு உலக அளவில் உள்ள பாட்டாளி வர்க்கத்தினரும், தேசிய இன விடுதலையில் பற்றுடை யோரும் தமிழீழத் தமிழர்களுக்கு ஆதரவாக அணி திரளவேண்டும். இது வரலாற்றுக் கடமையாகும். •

# என்னைச் சுட்டது "தீண்டாமை" தொட்டது "வகுப்புரிமை"

"சாணாப் பய ஊட்லே சாப்புட்டியா?

ஆத்துலே போய் குளிச்சுட்டு வா!" - என்று, என் அம்மாயி திட்டினார்.

அன்றாடம் இரவில் என்னோடு விளையாடுகிற என் தோழன் ரெங்கசாமியை அவர் இழிவாகப் பேசிய சொல், என் மனத்தைச் சுட்டது. அப்போது எனக்கு வயது 14; இப்போது என் வயது 84.

1933 முதல் 1942 வரை வடக்கலூர் அக்ரகாரத்தில், என் அம்மாயி வீட்டில் தங்கிப் படித்தேன். 1939 கடைசியில் ஆறாம் வகுப்பில் படித்தேன். அன்றாடம் காலை 8 மணிக்குப் பழைய சோறு சாப்பிட்டுவிட்டுப் புத்தகப் பையையும், தூக்கு வட்டாவையும் சுமந்துகொண்டு, 5 மைல் தொலைவு நடந்துபோய், இலப்பைக் குடிகாடு இசுலாமிய நடுநிலைப் பள்ளியில் படித்தேன்; அன்றாடம் மாலை ஆறு மணிக்குத் திரும்பிவந்து, சுடுசோறும், பருப்புக் குழம்பும் சாப்பிட்டுவிட்டு, நேரே விளையாடப் போய்விடுவேன். இரவு 11 மணிவரை பலிச்சலாங்குடு (சடு குடு), உப்புப் பாரி (உப்பு அள்ளுதல்) விளையாடுவேன். என்னோடு இணையாக விளையாடு பவன் ரெங்கசாமி. விளையாடும்போது கட்டிப் பிடிப்போம்; திமிறுவோம்; காலால் எட்டி உதைப்போம்; வெற்றியோ தோல்வியோ, இரவு 11 மணிக்கு நாராயணப் படையாட்சி வீட்டுத் திண்ணையில் இருவரும் படுத்துக் கொள்ளுவோம்.

யார் அந்த ரெங்கசாமி? என் அம்மாயி குடும்பம் பெரியது. நான்கு மகன்கள்; ஒரு மகள். இவர்களுக்குச் சொந்தமாகச் சின்னாற்றின் தென்கரையில் ஒரு பெரிய தென்னந்தோப்பு - இன்றும் அது இருக்கிறது. கள் இறக்குவதற்காக, ஒரு நாடாரை அமர்த்தியிருந்தனர். அந்த நாடார், தன் மைத்துனனைத் துணைக்காக அழைத்து வந்திருந்தார். அவன்தான் ரெங்கசாமி. அவனும் மரம் ஏறுவான். மரம் ஏறும் நாடார்களை "சாணார்" என்று அழைப்பார்கள். ரெங்கசாமியின் தமக்கை - 40 வயது இருக்கும்; அவருக்குக் குழந்தை இல்லை. ஊரார் குழந்தைக்கு உணவு ஊட்டி அந்தத் தாய் மகிழ்வார்.

ஒருநாள் காலை ஏழு மணிக்கு, 'தம்பி! பல்லு விளக்கிட்டு வா!, பழைய சோறு சாப்பிட்டுப் போ!' என்று அவர் அன்போடு அழைத்தார். தட்டு நிறைய நெல்லுச்சோறு; ஆடையோடு கட்டியான எருமைத் தயிர். வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, வீட்டுக்குப்போய், புத்தக மூட்டையை எடுத்துக்கொண்டுப் புறப்பட்டேன்.

'குளிக்கிலியாடா? சாப்பிடுலியாடா?' என்று, அம்மாயி கேட்டார்.

'ரெங்கசாமி ஊட்டுலே சாப்புட்டுட்டேன் ஆயா, அந்த அத்தை தயிரு சோறு போட்டாங்க!' என்று, மகிழ்ச்சியோடு சொன்னேன்.

உடனே, 'சாணாப் பய ஊட்டுலே சாப்புட்டியா? நம்ம சாதி என்னா, அவுங்க சாதி என்னா! தீண்டாதவன் ஊட்லே சாப்புட்டியா? கழுதே! ஆத்துல போயிக் குளிச்சுட்டு வா' என்று கூறித் துரத்தினார். என் தோழனை, என் அம்மாயி 'தீண்டப் படாதவன்' என்று பேசியது என் மனதைச் சுரீர் என்று சுட்டது. அழுதுகொண்டேபோய், ஆற்றில் குளித்துவிட்டு, ஈர வேட்டியோடு வீட்டுக்குவந்து, புத்தக மூட்டையை வாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக இலப்பைக் குடிகாட்டுக்கு நடந்தேன். ஈர வேட்டியைக் காயப்போட்டுக்கொண்டே, சுடுபட்ட மனத்தோடு பென்னக்குணம் வரையில் - கோவணத்தோடு சென்றேன். அங்கு வேட்டியைக் கட்டிக் கொண்டேன்.

நான் பிறந்த முருக்கன்குடியில், ஊரை ஒட்டியே சேரி இருக்கிறது. அங்குள்ள ஆதித் திராவிடர்களில் முக்கால் வாசிப்பேர் ரெட்டியார், வன்னியர் வீடுகளில் பண்ணை வேலை, கூலிவேலை செய்பவர்களாக இருந்தார்கள்.

நான் வளர்ந்த வடக்கலூர் அக்ரகாரத்துக்கு, வடக்கலூரில், ஒரு மைல் தொலைவில், சேரி உண்டு. அந்தச் சேரியிலிருந்து கிளியூர் சின்னான், பெருமத்தூரான் என்கிற இரண்டு பெரியவர்கள், காலை ஏழு மணிக்கே நாள்தோறும் அக்ரகாரத்துக்குப் பண்ணை வேலைக்கு வருவார்கள். 'அவர்கள் பறையர்கள் - தொட்டுக் கொள்ளாதே' என்று எங்களுக்குப் பெரியவர்கள் சொல்வார்கள். பறையர்கள் தீண்டப்படாதவர்கள் என்று மட்டும் அறிந்திருந்தேன். என் பாட்டி சொன்னது புதிதாக இருந்தது; என் மனத்தைப் பாதித்தது.

இந்த அளவுக்கு மனமாற்றத்தை எனக்கு ஊட்டியிருந்தவர், இலப்பைக் குடிக்காடு பள்ளியில் முதலாம் வகுப்புக்கு ஆசிரியராக இருந்த ந. கணபதி; அவரே என் கொள்கைக் குரு. அவர் சுயமரியாதைக் கட்சி பற்றி – நீதிக் கட்சித் தலைவர்கள் ஈ.வெ.இராமசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, ஏ.டி. பன்னீர்செல்வம், சி.என். அண்ணாதுரை, சவுந்தரபாண்டியன் என்கிற தலைவர்களைப் பற்றி அடிக்கடி எனக்குச் சொல்வார். 'குடிஅரசு', 'விடுதலை' என்கிற ஏடுகளைத் தருவார். சாதி இல்லை, தீண்டாமை என்பது பொய்; கல்லுப் பொம்மையில் கடவுள் இருக்க முடியாது, பார்ப்பானை அழைத்துத் திவசம் கொடுக்கப்படாது என்றெல்லாம் கூறுவார்.

ஏ.டி.பன்னீர்செல்வம் இலண்டனில் படித்தவர் என்பதையும், அவர் மூலம் அறிந்திருந்தேன். அவர் தஞ்சை ஜில்லா போர்டு தலைவராக இருந்தவர்; ‘பார்ப்பனர்களுக்கு வேலை தரக்கூடாது’ என்பதை ஒரு கொள்கையாகவே அவர் கொண்டிருந்தார் என எல்லோரும் கூறுவார்கள். வகுப்புவாரி உரிமையில் நாட்டம் உள்ளவர், அவர்.

இலண்டனில் இருக்கிற - இந்திய விவகார மந்திரிக்கு ஆலோசகராகப் பதவி ஏற்பதற்காக, 1.3.1940இல் அவர் ஏறிச் சென்ற ஏரோப்ளேன், ‘ஹனிபால்’ - ஓமான் கடலில் விழுந்து விட்டது. ‘பன்னீர்செல்வம் செத்துவிட்டார்’. 4.3.1940 காலையில் ‘பன்னீர்செல்லவம் செத்துப்போனாராண்டா! சுதேசமித்திரனில் போட்டிருக்கான்’ என்று, சின்னாற்றுக்கு வந்த என் வகுப்புத் தோழன் சொன்னான். அந்தச் சேதி என் மனத்தைத் தாக்கியதும், அய்யய்யோ! என்று நான் அலறினேன். குளித்துவிட்டு, எனக்கு முன்னாலே நடந்து சென்ற என் வகுப்புத்தோழன் வீ. சீத்தாராமன் என்கிற பார்ப்பன மாணவன், ‘ஒழிஞ்சான் பாவி’ என்று, குதூகலத்தோடு சொன்னான். அவன் வீசிய அந்தக் கொடுஞ்சொல் என் அடி மனதைத் தொட்டது.

அன்றுமுதல் பெரியாரின் பார்ப்பனப் புரோகித விலக்கம் பற்றி வடக்கலூர் அக்ரகாரம் முழுவதிலும் சொல்லிக் கொண்டே இருந்தேன். ‘பார்ப்பானை வைத்துத் திதி கொடுக்காதீர்கள் - கலியாணம் செய்யாதீர்கள்! தீபாவளி கொண்டாடாதீர்கள்’ என்று இடைவிடாமல் வடக்கலூர் அக்ரகாரம், வடக்கலூர், கிழுமத்தூர், பெருமத்தூர், கிளியூர் இங்கெல்லாம் பிரச்சாரம் செய்தேன். சீத்தாராமன் குடும்பம் அந்த ஊரைவிட்டே 1950களில் குடிபெயர்ந்துவிட்டது.

9, 10, 11 வகுப்புகளை 1942 - 1946இல், பரமத்தி வேலூரில் கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்தேன்.

**28.10.1944இல் பெரியார் பரமத்திவேலூரில் பேசினார். அன்றுதான் அவரை முதன் முதல் கண்டேன். பார்ப்பனப் புரோகித விலக்கம், சிலை வணக்க ஒழிப்பு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி விவரமாகப் பேசினார். இவை என் மனதைக் கவர்ந்தன; வகுப்புரிமை என் நெஞ்சைத் தொட்டது.**

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப் போராட்டத்தை 3.12.1950இல் பெரியார் தொடங்கி வைத்தார். அப்போது முதல், வகுப்புவாரி உரிமை பற்றி இந்திய அரசமைப்புச் சட்டத்திலுள்ளவற்றைத் துருவித் துருவிப் படித்தேன். பின்னாளில் அது எனக்குக் கை கொடுத்தது.

29.4.1978 முதல் 1982வரை, எங்களது இயக்கமான மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வடநாட்டின் பல மாநிலங்களுக்கும் சென்று பரப்புரைகள், போராட்டங்கள் நடத்தினோம். அதன் முதலாவது பயனாகவே - மண்டல் குழு 1979 சனவரியில் அமைக்கப்பட்டது. மண்டல் குழு அறிக்கை 1980 திசம்பரில் பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் அளிக்கப்பட்டது.

“மண்டல் அறிக்கையை 25.1.1982க்குள் பாராளு மன்றத்தில் வெளியிடுங்கள்! இல்லாவிட்டால் 1982 சனவரி 26 ‘குடியரசு’ நாளைத் துக்க நாள் என்று கொண்டாடி, எங்கள் எங்கள் வீடுகளில் அன்று கறுப்புக் கொடி ஏற்றுவோம்” என்று, பிரதமருக்கும், உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங்கிற்கும் வேண்டுகோள் விடுத்தோம்.

“25.1.1982 மாலை 4 மணிக்கு, தில்லிக்கு என் அலுவலகத்துக்கு வந்து இதுபற்றிப் பேசுங்கள்” என, கியானி ஜெயில் சிங் அழைப்பு அனுப்பினார். அன்று, வே. ஆமைுத்து, ச. தமிழரசு, ஜெய்பால் சிங் கஷ்யாப், சாலை இளந்திரையன் உள்ளிட்ட குழுவினர் ஒரு மணி நேரத்துக்குமேல் உள்துறை அமைச்சரிடம் விவாதித்தோம்.

விதி 15(4)இல் மூன்று வகுப்புகளின் பெயர்களும் துலாம்பரமாக இருக்கின்றன. ஆனால் விதி 16(4) என்பதில், “எந்தப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்களுக்குப் (any backward class of citizens) போதிய பிரதிநிதித்துவம் இல்லையோ, அவர்களுக்கு வேலையில் இட ஒதுக்கீடுதரலாம் என்று மட்டும் இருக்கிறது. 16(4)இல் உள்ள **பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள்** என்பவர்கள் - பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய மூன்று வகையினர் ஆவர். இம்மூன்று வகையினரில், ஏற்கெனவே இரண்டுவகை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு (S.C., S.T.) மத்திய அரசு வேலையில், இட ஒதுக்கீடு தரப்படுகிறது; இப்போது ‘பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கும் இட ஒதுக்கீடு தரப்படவேண்டும்’ என்று, நான் விளக்கம் அளித்தேன்.

**உடனே, ‘ஆனைமுத்து! இன்றுதான் விதி 16(4)இன் பொருள் எனக்குப் புரிந்தது’ என்று வெளிப்படையாகவே கியானி ஜெயில் சிங் அவர்கள் என்னிடம் கூறினார்.** நாம் வெற்றி பெறுவோம் என்கிற நம்பிக்கை 25.1.1982 அன்றே எனக்கு முதன்முதலாக வந்தது. அவரை 4.3.1982இல் நேரில் வேண்டிக்கொண்டபடி, 1982 மே மாதம் மண்டல் குழு அறிக்கையை அவர்தான் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். அப் பரிந்துரை 1994இல் மத்திய அரசு வேலையில் அமல் ஆயிற்று; 2008இல் மத்திய அரசுக் கல்வியில் பகுதியாக அமல் ஆகியிருக்கிறது.

என்னைச் சுட்ட தீண்டாமைக்கு இன்றும் 17 கோடி மக்கள் ஆளாகியுள்ளனர்; என்னைத் தொட்ட வகுப்புரிமை, 60 கோடி பிற்படுத்தப்பட்டோருக்கு இன்னும் கிட்டவில்லை.

**- வே. ஆனைமுத்து** •



## பெரியார் ஈ.வெ.இராமசாமி – நாகம்மை

# கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு ரூபா 50 இலக்கம் நிதி திரட்டித்தர, தோழர் சங்கமித்ரா ஏற்பாடு

பெரியார் ஈ.வெ.இராமசாமி – நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை முழு வடிவம் பெற்று இயங்குவதற்கு ரூபா இரண்டுகோடி நிதி வேண்டும்.

இதில் ரூபா 50 இலக்கம் திரட்டித் தர விரும்பி, அதற்கென, சங்கமித்ரா, தூத்துக்குடி பொன். தனகரன், திருச்சி ந. கருணாகரன், சென்னை ஓவியா, வடக்கு மாங்குடி பா. மோகன் ஆகிய அய்வரைக் கொண்ட குழு ஒன்றை சங்கமித்ரா அமைத்திருக்கிறார். தோழர் சங்கமித்ரா இவ் அறக் கட்டளையின் ஆலோசனைக்குழு உறுப்பினராக உள்ளார். தோழர் ந. கருணாகரன் அறங் காவலராக உள்ளார்.

இந்த முயற்சியை சங்கமித்ரா மேற்கொள்ள ஒப்புதல் அளித்து, 15.2.2009 ஞாயிறு மாலை 7 மணிக்கு சென்னையில் அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற்ற அறங்காவலர்கள் குழு ஆய்வுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தை ஓராண்டுக் காலத்தில் நிறைவேற்றித்தர சங்கமித்ரா திட்டமிட்டுள்ளார்.

நன்கொடைக்கான காசோலைகள் அறக்கட்டளையின் பெயரில் மட்டுமே பெறப்படும்.

16.2.2009

**- வே.ஆனைமுத்து**
தலைவர் மற்றும்
மேலாண்மை அறங்காவலர்

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் 15.2.2009 பொதுக்குழுக் கூட்டத் தீர்மானங்கள்

மா.பெ.பொ.க.வின் பொதுக்குழுக் கூட்டம் 15.2.2009 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு, சென்னை திருவல்லிக் கேணியில், சிவ இளங்கோ கட்டடக் கூட்ட அரங்கில், கட்சியின் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள் மற்றும் பொங்கல் மலர் வெளியீட்டுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். கிழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1 :**

சிந்தனையாளன் பொங்கல் மலர் வரவு, செலவுக் கணக்குகள் மற்றும் 3.1.2009, 4.1.2009 திருச்சி மாநாடு களின் வரவு செலவுக் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கித் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 2 :**

பொங்கல் மலர் விளம்பரக் கட்டண நிலுவைகளையும் மற்றும் மாநாட்டு நன்கொடை நிலுவைகளையும் அந்தந்த மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் நகரச் செயலாளர்கள் 15.3.2009க்குள் முழுவதுமாகத் திரட்டி, பயணச் செலவுக்கான தொகை போக மீதித் தொகை முழுவதையும் 20.3.2009க்குள் தலைமை அலுவலகத்திற்கு நேரிலோ - வங்கி முறி மூலமாகவோ சேர்த்து உதவும்படி வேண்டித் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 3 :**

மா.பெ.பொ.க. மாவட்ட அமைப்புகள் இயங்கும் எல்லா மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டச் செயலாளர் முன் னின்று மாவட்டப் பொதுக்குழுக் கூட்டங்களை 20.3.2009 முதல் 31.3.2009க்குள்அந்தந்த மாவட்டத்தினர்க்கு வசதிப்பட்ட ஏதேனும் ஒரு நாளில் தவறாமல் நடத்திட வேண்டும் என்றும்; அப்பொதுக் குழுக் கூட்டத்தில்

அ. மாவட்டச் செயலாளர்,

ஆ. மாவட்டத் துணைச் செயலாளர்கள் இருவர்,

இ. மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர்கள்

ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், இவற்றிற்கு வசதியாகக் கட்சிக்கு, அடிப்படை உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை மாவட்ட, நகரச் செயலாளர்கள் பொறுப்பேற்று 20.3.2009க்குள் செய்து முடிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கும் பணியில் அதிகம் நாட்டம் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்ளப் பட்டது.

கட்சி அடிப்படை உறுப்பினர் பட்டியலையும், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் பட்டியலையும் அவரவர் அஞ்சல் முகவரிகளுடன் 31.3.2009க்குள் தலைமை அலுவலகத் திற்கு அனுப்பி உதவும்படி மாவட்டச் செயலாளர்களை இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 4 :**

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 1991 முதல் மேதை டாக்டர் அம்பேத்கர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் பிறந்தநாள் விழாக் கூட்டங்களை மாவட்டந்தோறும் சிறப்பாக நடத்தி வருகிறது. அதனை ஒட்டி, வரும் 2009 ஏப்பிரல் 14 முதல் ஏப்பிரல் 29 முடிய கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலின்படி டாக்டர் அம்பேத்கர் - பாவேந்தர் பாரதிதாசன் 119 ஆவது பிறந்தநாள் விழாக் கூட்டங்களை நடத்துவதற்கு அந்தந்த மாவட்டத் தோழர்கள் முனைப்புடன் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது.

தமிழ்நாடு அளவில் நடைபெறும் இவ்விழாக் கூட்டங்களில் வே. ஆனைமுத்து, க. முகிலன், கவிஞர் தமிழேந்தி, சி. பெரியசாமி, சி. நடராசன், சா. குப்பன், பாவலர் வையவன், அரங்க. சானகிராமன், ஆ. முத்தமிழ்ச்செல்வன். துரைசித்தார்த்தன், பொள்ளாச்சி மணிமுத்து, விசுவநாதன் ஆகியோர் பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் பட்டது. மேலேகண்ட தோழர்கள் அவரவர் பங்கேற்க வாய்ப்புள்ள நாள்களை **20.3.2009க்குள்** கட்சித் தலைமை அலுவலகத்திற்கு மடல் மூலம் தெரிவிக்கவேண்டும் என வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் அம்பேத்கர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 119ஆவது பிறந்தநாள்விழாக் கூட்டங்கள்

**2009 - ஏப்பிரல்**

14 - செவ்வாய் காஞ்சிபுரம் மாவட்டம்

15 - புதன் வேலூர் மாவட்டம்

16 - வியாழன் திருவண்ணாமலை மாவட்டம்

17 - வெள்ளி விழுப்புரம் மாவட்டம்

18 - சனி கடலூர் மாவட்டம்

19 - ஞாயிறு நாகை மாவட்டம்

20 - திங்கள் ஓய்வு

21 - செவ்வாய் அரியலூர் மாவட்டம்

22 - புதன் பெரம்பலூர் மாவட்டம்

23 - வியாழன் திருச்சி மாவட்டம்

24 - வெள்ளி சேலம் மாவட்டம்

25 - சனி சென்னை மாவட்டம்

29 - புதன் புதுச்சேரி மாநிலம்

**தீர்மானம் 5 :**

சிந்தனையாளன ஆசிரியர் குழு உறுப்பினர்களாக இப்போது உள்ளவர்களுடன், மேற்கொண்டு தோழர்கள் வேலூர் மாவட்டச் செயலாளர் சா. குப்பன், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் வாலாசா வல்லவன். மாணவரணித் துணைச் செயலாளர் ஆ. முத்தமிழ்ச் செல்வன் ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பொதுக்குழு அறிவித்துக் கொள்கிறது. இவர்கள் விரைவில் கூடி ஆசிரியர் குழுவில் உள்ள உறுப் பினர்களுள் இருவரைத் துணை ஆசிரியர்களாகத் தேர்வு செய்து அமர்த்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அ) ஆசிரியர் குழு உறுப்பினர்கள் மாதந்தோறும் மூன்றாவது சனிக்கிழமை ஏதேனும் ஒரு மாவட்டத்தில் கூடி, அடுத்து வரும் மாதத்திற்கான சிந்தனையாளன், பெரியார் ஈரா ஏடுகளுக்கு எழுதப்படவேண்டிய பொருள்கள் பற்றி முடிவு செய்யும் வழக்கத்தை 2009 மே முதல் தவறாமல் பின்பற்ற வேண்டும் எனவும், இதனை ஆசிரியர் குழுவினர் முதன்மையாகக் கருதவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 6 :**

தமிழீழ விடுதலைக்கு ஆதரவுக் குரல் கொடுக்கிற எல்லா அமைப்புகளும் ஏதேனும் ஒருவகையில் உண்மையான அக்கறை கொண்டவர்கள் என மா.பெ.பொ.க. மனமாரக் கருதுகிறது. இப்போது ஈழத்தில் நிலவும் நிலைமை நினைக்க வும் பேசவும் முடியாத அளவுக்குக் கொடூரமாக உள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டுத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் ஒரே தன்மையான நிலைப்பாட்டை எடுப்பதும், இந்திய அரசுக்கு வலிமையான அழுத்தம் தந்து அவர்கள் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்குவது, படை அதிகாரிகளை அனுப்பி உதவுவது, இலங்கைப் படை யினர்க்கு இந்தியாவில் போர்ப் பயிற்சி அளிப்பது ஆகியவற்றை அடியோடு நிறுத்தவேண்டும் என்றும்; போரை நிறுத்திவிட்டு இலங்கை அரசினர் பேச்சு வார்த்தை மூலம் தமிழீழத் தமிழர்களுக்கு ஏற்புடைய ஓர் அரசியல் தீர்வை அளிக்க முன்வர வேண்டுமென இந்திய அரசு நேரிடையாக வற்புறுத்தவேண்டும் என்பதன் முதன்மையை ஒன்றுபட்ட குரலில் இந்திய அரசுக்கு எடுத்துரைத்து அழுத்தம் தருவதும் இன்றியமையாதது என மா.பெ.பொ.க. கருதுகிறது. இதில் சிறு சிறு கருத்து வேறுபாடுகளை முதன்மைப்படுத்திக் கொண்டு பல குரல்களில் பேசுவதை இனிமேலாவது தவிர்க்க வேண்டும் என்று எல்லாத் தமிழினத் தலைவர்களையும், தமிழ்ப் பொதுமக்களையும் இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

மேலும் உலக அளவில் செயல்படும் அய்க்கிய நாடுகள் அவை, மானிட உரிமைக் காப்பு அவை இவற்றின் பார்வைக்கு ஈழத்தில் இலங்கை அரசினரால் நடத்தப்படும் தமிழ் இனப் படுகொலையின் கொடூரத்தைச் சரியான தன்மையில் எடுத்துவைத்து தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்த அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் போதிய அளவில் அழுத்தம் தருகிற பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் தமிழ்நாட்டுத் தமிழினத் தலைவர்கள் சிலரும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்பினராக விளங்கும் தமிழீழ அரசியல் தலைவர்கள் சிலரும் இணைந்து உடனடியாக நேரிடையாக அம் மன்றங்களுக்கு முறையீடு செய்து தக்க தீர்வு காண எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென இப் பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

இலங்கையில் அமைதி ஏற்படும் வரையில் உலக நாடுகள் அவை (UNO) இலங்கைக்கு எல்லா நாடுகளின் வீரர்கள் அடங்கிய ஒரு பொதுப் படையை அனுப்பி போர் நடவடிக்கையைத் தடுக்கவேண்டும் என்று கோரலாம். இதற்கு முன்மாதிரிகள் உள்ளன. அதேபோல் உலக மானிட உரிமைக் காப்புஅவை மற்றும் உலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court - ICC) மூலம் இலங்கை அரசு தன்னாட்டுக் குடிமக்களான (Citizens) ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் தமிழ் இனப்படுகொலை யானது குற்றவியல் தண்டனைக்கு உரியதாகும் என்பதால், இலங்கை அதிபர் இராசபக்சே, அவருடைய தலைமை அரசியல் ஆலோசகர் பசில் இராசபக்சே, மற்றும் இராணுவத் துறைச் செயலாளர் கோத்தபயா இராசபக்சே மற்றும் இலங்கைப் படைத் தலைவர்கள் ஆகியோர் தமிழினக் கொலையாளிகள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு - விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட இடம் உள்ளது என இப்பொதுக்குழு திடமாகக் கருதுகிறது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு உலக மானிட உரிமைக் காப்பு அவையானது இந் நடவடிக்கைக்கு அழுத்தம் தருவதும்; தமிழ்நாட்டுத் தமிழினத் தலைவர்களும் தமிழீழத் தலைவர்களும் நேரடியாகவே உலகக் குற்றவியல் நீதி மன்றத்தில் உடனடியாக குற்றவியல் வழக்குத் தொடுத்து இராசபக்சே உள்ளிட்ட இலங்கை அரசுத் தலைவர்கள் தமிழினக் கொலையாளிகள் என முடிவு செய்யப்படவும், அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவும் ஆவன செய்ய வேண்டும் என்று இப்பொதுக்குழு தொடர்புடைய அனை வரையும் வேண்டிக் கொள்கிறது. இதற்குத் தகுதிவாய்ந்த சட்ட வல்லுநர்களைத் தமிழர் தலைவர்கள் தங்களுக்குள் தேர்வு செய்துகொள்ள வேண்டுமென்றும், பெரிய அளவில் நிதி வசதி

ஏற்படுத்திக் கொண்டு மிக விரைவிலேயே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 7 :**

"ஈழச் சிக்கலைப் பொறுத்த வரையில் இந்திய அரசின் நிலைப்பாடுதான் தமிழ்நாட்டு அரசின் நிலப்பாடு'' என்று தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறி வருவதும், அந்த அடிப்படையில் நின்று இந்திய அரசுக்கு மீண்டும் மீண்டும் முறையீடு செய்வதும் முற்றிலும் முரண் பட்டவையும் பயனற்றதும் ஆகும் என இப்பொதுக்குழு உறுதிப்படக் கருதுகிறது. இந்திய அரசு போருக்கான ஆயுதங்கள், கருவிகள் முதலானவற்றையும் இலங்கைப் படை வானூர்தி ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிப்பது, இந்தியப் படை நிபுணர்களை இலங்கைப் போர்க்களத்திற்கு அனுப்பி வழிகாட்டச் செய்வது என்பவை முற்றிலும் உண்மை என உல நாடுகள் அனைத்தும் அறிந்துள்ளன.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து வெளிவரும் 'தென் ஆப்பிரிக்கா போஸ்ட்' - என்னும் செய்தி ஏடு, அண்மையில் இதனை உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய அரசின் ஈழத் தமிழரைப் பழிவாங்கும் போக்கு தமிழக அரசினரால் மிகவும் கண்டிப்பட வேண்டியதாகும். தமிழ்நாட்டு அரசினர் இந்தப் போக்கைக் கண்டித்தால்தான் இந்திய அரசு சற்றேனும் தன் தவறை உணர முற்படும் என்பதைத் தமிழ்நாட்டு அரசினர்க்கு இப்பொதுக்குழு முதன்மையாகச் சுட்டிக் காட்டுகிறது.

**தீர்மானம் 8 :**

தமிழீழத் தமிழர்கள் கொல்லப்படும் கொடுமையைத் தாள முடியாமல் மனம் நொந்து தங்களைத் தாங்களே மாய்த்துக்கொண்ட - இன்னுயிர் ஈகிகளான பத்திரிகையாளர் முத்துக்குமரன், பள்ளப்பட்டி இரவி, சீர்காழி இரவிச்சந்திரன், சென்னை அமரசேன், மலேசியா இராசா, ஜெனிவா ஈழத் தமிழர் முருகதாசன் ஆகியோர்க்கு இப்பொதுக்குழு தலைதாழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஒரு நாட்டின் விடுதலைக்கான போராட்டம் கால வரையறை அற்றது. இத்தகைய போராட்டத்தின் வெற்றிக் கான பங்களிப்பை அவரவர் செய்வதே முறையானது ஆகும். அதற்கு மாறாக குறிக்கோளின்பால் உள்ள அளவுகடந்த பற்றின் காரணமாகத் தங்கள் தங்கள் இன்னுயிரை ஒருவர் மாய்த்துக் கொள்வது மிகவும் வருந்தத் தக்கது ஆகும். எனவே, இளைஞர்கள் இதுபோன்ற சிந்தனையை வெறுக்க வேண்டுமென்றும் எந்தச் சூழலிலும் துணிவைக் கைவிடக் கூடாது எனவும் - உலகத் தமிழ் இளைஞர்களை இப்பொதுக்குழு அன்புடன் வேண்டிக் கொள்கிறது.

தோழர் வே. ஆனைமுத்து நன்றி கூறலுடன் இரவு 7.00 மணிக்குப் பொதுக்குழுக் கூட்டம் முடிவுற்றது. •

# ஒதுக்கீடு உயர்கல்வியில் இல்லையாம்!

**- குளமுற்றத்து மருதநாடன்**

ஒதுக்கீடி னால்தரமே குறைந்து போமாம்!
உயர்சாதிக் காரரெலாம் புலம்பு கின்றார்!
புதுக்கருத்து! சூழ்ச்சியிதில் உளதச் சூதைப்
புரிந்துகொள்ளும் பக்குவம்நம் மக்கட் கில்லை!
ஒதுக்கீடே இல்லையெனில் என்னாம்? எங்கும்
உயர்சாதி யார்தாமே நிறைந்தி ருப்பார்!
ஒதுக்கியவர் மேற்சாதிக் காரர்! அஞ்சி
ஒதுங்கியவர் அனைவருங்கீழ்ச் சாதியானார்!

ஒதுக்கீடு வந்திருந்தால் எல்லோ ருக்கும்
உரிமையுள சமவாய்ப்புக் கிடைத்தி ருக்கும்!
பதுக்கியது தவறென்று தெரிந்தி ருந்தும்
பாசாங்கு செய்கின்றார் தரம்போ மென்று!
மதுக்குடியர் போல்மயங்கிக் கிடக்கின் றார்நம்
மக்களெலாம் விழிப்புணர்வு பெற்று விட்டால்
ஒதுக்கீட்டை மூன்றுவிழுக் காடுள் ளோர்க்கும்
உவந்தளிப்பார் அதையேற்றுக் கொண்டு உதட்டைப்
பிதுக்குவதைக் கண்டுகளிப் பார்எம் மக்கள்!
பிறகுவிகி தம்வருமே ஒதுக்கீட் டுக்கு!

இப்பெருங்கேட் டைச்செய்வோர் யாரென் றாலோ
எப்போதும் ஆதிக்கம் செலுத்து கின்ற
முப்புரிநூ லார்தாமே! எதிலும் எங்கும்
முந்திப்போய் இடம்பிடித்துக் கொள்ளும் கூட்டம்!
துப்புரவாய் எங்குமிலா தகற்றிக் குப்பைத்
தொட்டியிலே இடவேண்டும்! இட்டால் மீண்டும்
எப்படியும் வரப்பார்ப்பார்! அறிவில் லாமல்
ஏமாந்து போனதெலாம் அந்தக் காலம்!

தரந்தாழ்ந்து போய்விடுமாம் ஒதுக்கீட் டாலே!
தகுதிதிற மைபேசி ஏய்ப்போர் சொல்வார்!
கரவாகத் தமக்குரிமை யில்லா வற்றைக்
காலமெலாம் துய்த்துவரும் வன்க ணாளர்
இரவலராய் நமையெண்ணிக் கொண்டு சொல்வார்
இடவொதுக்கீ டுயர்கல்விக் கில்லை யென்று!
தரந்தாழ்ந்து போகவிட மாட்டோம் என்பார்!
தடுத்திவரை யெதிர்கொள்ள யாரும் இல்லை!

உயர்கல்வி ஆசானாய் தகுதி யில்லார்
ஒதுக்கீடு வழியாக இடம்பெற் றாரேல்
உயர்கல்வித் தரங்குறைந்து தாழும் என்றே
ஒதுக்கீட்டை யேஒழிக்கச் சட்டம் ஒன்றை
உயர்சாதிச் சார்பான நடுவண் ஆட்சி
உருவாக்கப் போகிறது! திரைக்குப் பின்னால்
செயல்படுவோர் பலருள்ளார்! பார்ப்பார் ஆட்சி!
தேராது தேர்ந்துள்ளோம்! முறியடிப்போம் வாரீர். •

(அய்.அய்.டி., அய்.அய்.எம். ஆசிரியர் நியமனத்தில்
இடஒதுக்கீடு தரமுடியாது என மத்திய அரசு
கொண்டுவர உள்ள சட்டம் குறித்த பாடல்)

# தமிழகத்தில் அரசுத் தொடக்கக் கல்வி பாழாகிவிட்டது. அது ஏன்?

- சோ.க. அறிவுடைநம்பி

இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் சிலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை என்னவோ அதுதான். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மாவட்டக் கழகம் என்ற அமைப்பின் கீழ்ப் பள்ளிக் கல்வி நிருவாகம் இயங்கியது. அப்போது ஒரு வட்டத்தில் இரண்டொரு உயர்நிலைப் பள்ளிகள், எங்கோ ஒருசில முகாமையான ஊர்களில் மட்டும் தொடக்கப் பள்ளிகள் இருக்கும். நகரங்களில் சில பள்ளிகள் இருக்கலாம். ஆனால் அதில் படிப்பவர்கள் பெரும்பாலும் மேட்டுக்குடி, நடுத்தரக் குடும்பங்களின் பிள்ளைகளே ஆவர். அங்கு கல்வியின் தரமும் நன்றாக இருந்தது.

கல்வி வள்ளல் காமராசர் ஆட்சியில் சிற்றூர்கள் வரை ஏராளமான தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இவைகளை நிர்வாகம் செய்யவும் சிற்றூர்கள் முன்னேற்றம் கருதியும் உள்ளாட்சித் துறை உருவாக்கப்பட்டு சிற்றூராட்சி, பேரூராட்சி இவைகள் பல அடங்கிய பகுதிகளை மேலாண்மை செய்ய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டன. இதில் ஓர் ஒன்றியப் பகுதியில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் அமர்த்தல், மாறுதல் செய்தல் முதலியன நடைபெற்றன. பள்ளிகள் மேற்பார்வை செய்யக் கல்வித்துறையின் மூலம் ஒருவரும், ஒன்றியத்தின்மூலம் ஒருவரும் இருப்பர். பள்ளி நிர்வாகம் செம்மையாக நடைபெற்றது. கல்வியின் தரமும் நன்றாக இருந்தது. ஓர் ஊரில் உள்ள பொருள்வளம் உடையவர்களின் குழந்தைகள், ஏழைக் குழந்தைகள் அனைவரும் அங்குதான் படித்தனர். ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அந்தக் காலத்தில் எட்டாம் வகுப்பு முடித்தவர்களுக்குக் கடைசியில் இ.எசு.எல்.சி. என்று ஒரு பொதுத் தேர்வு நடத்துவார்கள். அதில் தேறியவர்கள் இரு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்று இளநிலை ஆசிரியர்களாகப் பணியேற்றனர். ஆங்கிலம் கட்டாயம் இல்லை. இவர்களுள், பள்ளியிறுதி வகுப்பு முடித்தவர்கள் அதே கால அளவு ஆசிரியர் பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர்களாகப் பணியேற்றனர்.

1960களுக்குப்பின் ஒன்றிய நிர்வாகத்தில் தொடக்கக் கல்வி செம்மையான முறையில் வழங்கப்பட்டது. ஊதியம் மிகக் குறைவு. இளநிலை ஆசிரயர்க்கு உரு.65, இடைநிலை ஆசிரியர்க்கு உரு. 90 வழங்கப்பட்டது. பணி நல்ல முறையில் நடைபெற்றது. யாரும் பணியைப் புறக்கணிப்பதில்லை.

அப்போது மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. அதையும் ஆசிரியர்கள்தான் கவனிக்கவேண்டும். அதற்கு நன்கொடை வேறு தண்டல் செய்யவேண்டும். இவற்றைக் கவனித்துக் கொண்டும் கல்வித்தரம் நன்றாக இருந்தது. தொடக்கப் பள்ளிகளில் ஓராசிரியர் பள்ளிகள்தான் அதிகம். தரம் குறையவில்லை. இதில் படித்துத்தான் பலர் பெரிய பொறுப்புகளுக்கும், அறிவியல் அறிஞர்களாகவும், உயர் அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள், கல்வியாளர்களாகவும் வந்தனர். இந்த நிலை கிட்டத்தட்ட 1970வரை நீடித்தது. பின்னர் மதிய உணவுத் திட்டத்திற்கு மானியம் ஊராட்சி, பேரூராட்சித் தலைவர்கள்மூலம் வழங்கும் முறை வந்தது.

இந்த நிலையில் 1970க்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு ஆசிரியர்களே கருவியாகப் பயன்படுத்தப்பட்டனர். இது ஒரு பெரும் சிக்கலை உருவாக்கியது. இதில் கொடுமை என்ன வென்றால் அவர் பாடம் நடத்துகிறாரோ இல்லையோ, ஆனால் குடும்பக்கட்டுப்பாட்டிற்குக் குறிப்பிட்ட எண்ணிக்கை காட்டவில்லையானால் ஊதியம் பெறமுடியாத நிலைமை உருவாகும் அளவிற்குப் போய்விட்டது. இது ஆசிரியர் களிடம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது.

அரசுத் தொடக்கப் பள்ளிகளின் கல்வித்தரம் பாழாக அறுவைக்கு ஆள் பிடிக்கும் பணி ஒரு காரணமாக அமைந்தது. எனவே ஆசிரியர்கள் போராட்டத்திற்கு அணிய மாயினர். அனைத்துத் தொடக்கநிலை ஆசிரியர்களும் முழு மனத்துடன் களமிறங்கினர். அமைதியாக நடைபெற்ற தொடக்கக் கல்வி ஆசிரியர்களை போராட்டக் களமிறக்கியது இந்தக் கட்டாயக் கருத்தடை ஆள்பிடிக்கும் வேலைதான். இதற்கு அரசு ஆணை எதுவும் இல்லை. ஆனால் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் இதை ஆசிரியர்கள்மீது திணித்தது. போராட்டம் தொடங்கிய காரணத்தால் அந்தக் கட்டாயம் தவிர்க்கப்பட்டது. ஆசிரியர்கள் அதிலிருந்து விடுபட்டனர்.

அடுத்து மதிய உணவுத் திட்டம் பற்றிய சிக்கல் எழுந்தது. சிறிய தொகையை வைத்துச் சோறுபோட வேண்டும். நன்கொடை வாங்கவேண்டும். ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலம் வழங்கப்படவேண்டிய மானியத்தொகை சரியாகக் கொடுப்பதில்லை. ஆனால் அதற்கு ஆசிரியர்கள் கணக் கெழுதியாக வேண்டும். இதற்குப் பொய் கணக்குத்தான் எழுதவேண்டும். இது பெரும் சிக்கலாக உருவாகவே முதலில் போராடி வெற்றிகண்ட துணிவு மேலும் போராடத் தூண்டியது. அப்போதும் மதிய உணவு வேலைகளைச் செய்ய முடியாது என்று போராட்டம் தொடங்கினர். ஆட்சி யாளர்கள் ஆசிரியர்களைப் பகைத்துக் கொள்ள விரும்ப

வில்லை. எனவே மதிய உணவுப் பொறுப்புகளிலிருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்த வெற்றி ஆசிரியர்களிடம் ஒருவிதப் பொறுப்பற்ற தனத்தை உருவாக்கியது.

இது முடிந்தவுடன் பேராயக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஊராட்சி ஒன்றிய அளவில் மாறுதல், புதிய ஆசிரியர்கள் அமர்வு ஆகியனவற்றைக் கவனிக்க ஒரு குழு இருந்தது. அதன்மூலம்தான் இவை நடைபெற்றன. ஆனால் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அது கலைக்கப்பட்டு, பொறுப்பில் இருப்பவர்களின் விருப்பு வெறுப்புக்கேற்பவும், பணத்தின் புழக்க அடிப்படையிலும் இவை நடைபெறலாயின. அதுமட்டு மல்லாது, அப் பகுதியில் உள்ள ஆளுங் கட்சிக்காரர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய உறுப்பினர்களின் விருப்பப்படி ஆசிரியர்கள் பந்தாடப்படும் நிலை தோன்றியது. இதுவும் ஆசிரியர்களைப் பெரிதும் பாதித்தது.

எனவே முன்பு போராடி வெற்றி கண்ட ஆசிரியர்கள் இப்போதும் போராட்டம் தொடங்கினர். ஆசிரியர்கள் ஒன்றிய நிர்வாகத்திலிருந்து விடுவித்துக் கல்வித் துறையின்கீழ் கொண்டுவரவேண்டும் என்று போராட்டம் நடத்தினர். அரசு அதற்கும் பணிந்து கல்வித் துறையின்கீழ் கொண்டுவந்தது.

இந்தப் போராட்டங்கள் பல ஆண்டுகள் நடைபெற்றன. இந்தக் காலக்கட்டத்தில் ஆசிரியர்களின் முகாமையான பணி போராட்டத் திட்டம் வகுத்தல், போராட்டம் நடத்துதல் பற்றியதாகவே இருந்தது. போதிய நிர்வாகக் கட்டுக்கோப்பும் இல்லை. கல்வித்துறை அதிகாரிகள் என்றோ ஒருநாள் ஆய்வுக்கு வருவார்கள். ஆசிரியர்களும் அவர்களைப் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. இப்போது உள்ளாட்சி நிர்வாகத்தால் அவர்களின் முறையான தவறுகளைக்கூடக் கண்டிக்க இயலவில்லை. கல்வியின் தரம் குறைந்தது. பிள்ளைகள் நன்கு படிக்கவேண்டும் என்று எண்ணிய பெற்றோர்கள் அரசுப் பள்ளிகளின்மீது நம்பிக்கை இழந்தனர்.

அதனால் உள்ளூரில் பள்ளி இருந்தாலும், வெளியூரில் இருந்த தனியார் பள்ளிகளை நாடினர். அதே நேரம் ஆங்கில வழிக் கல்வி கற்றால் அனைவரும் மருத்துவர், பொறியாளர் ஆகி வெளிநாடுகளுக்குச் சென்று இலக்கக் கணக்கில் பொருள் ஈட்டலாம். உயர் பதவிகளைப் பெறலாம். ஆங்கிலம் படித்தவன்தான் படித்த அறிவாளி என்ற சிறப்பைப் பெற முடியும் என்ற போலித்தனம் உருவாக்கப்பட்டது. இதற்கும் ஆட்சியிலிருப்பவர்கள் பணம் பெற்றுக்கொண்டு ஏராளமான ஆங்கிலவழித் தனியார் பள்ளிகள் தொடங்க அனுமதி கொடுத்து கல்வி ஒரு வணிகமாகும் கேட்டை அறிந்தே செய்தனர்.

வெள்ளையன் இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தும் அவன் வெளியேறும்போது 1947ஆம் ஆண்டில் சென்னையில் இரண்டு ஆங்கில வழிப் பள்ளிகள்தான் இருந்தன. ஆனால் 1977ஆம் ஆண்டில் - முப்பதாண்டுகளில் 28 பள்ளிகள் அதிகமாயின. 1987ஆம் ஆண்டில் அடுத்த பத்தாண்டுக் காலத்தில் 200 பள்ளிகளாக இது உயர்ந்தது. ஆனால் 2000ஆம் ஆண்டில் 2000 பள்ளிகளாக உயர்ந்து விட்டன. 13 ஆண்டுகளில் புதிதாக 1800 பள்ளிகள் ஆங்கிலவழி பள்ளிகள் தோன்றிவிட்டன.

இவை யார் காலத்தில் தோன்றின? தமிழைச் சொல்லியே ஆட்சிக் கட்டில் ஏறிய திராவிடக் கட்சிகளின் ஆட்சிக் காலத்தில்தான். இந்த நிலை ஏற்படக் காரணம், அரசுத் தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம்கெட்டுப் போனதுதான். அதற்குக் காரணம் நிர்வாகச் சீர்கேடு மற்றும் போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் அமர்த்தப்படாமை. இந்நிலையில் ஆசிரியர்களின் பொறுப்பற்றத்தனம் அதிகமாயிற்று. அவர்கள் ஆசிரியப் பணியை ஏதோ ஒரு துணைத் தொழிலாக எண்ணினர். இதற்குக் காரணம் எளிய குடியினர் கூடத் தங்கள் பிள்ளைகளைப் போலித் தனத்திற்கு அடிமையாகி இருக்கும் சிறிய அளவிலான பொருளையும் ஆங்கிலக் கல்வி வணிகர்களுக்குக் கொடுக்க முன்வந்தது.

அதே நிலை இன்று ஆங்கிலத்தின் பேரைச் சொல்லி, வெளிநாட்டில் வேலை, பொறியாளர், மருத்துவர், உயர் தொழில்கள், இலக்கக் கணக்கான ஊதியம் என்றும், வெகு மக்களை ஏமாற்றி ஆங்கிலக் கல்வி நிலையங்கள் என்ற பெயரில் பொருள் கொள்ளையடிக்கின்றனர். இந்தச் சிந்தனையற்ற மக்கள் அதை நம்புகின்றனர். யாரோ சிலருக்கு வேலை கிடைப்பது உண்மைதான். மற்றவர்கள் நிலை? பரிசுச் சீட்டு விற்ற காலத்தில் ஒருவனுக்கு இலக்கம் உருவா பரிசு விழுந்ததைப் பத்திரிகைகள் விளம்பரப்படுத்தியதைக் கண்டு இலக்கக் கணக்கானோர் பெரும்பொருளை இழந்தார்கள் அல்லவா? அதுபோன்றுதான் இன்றைய ஆங்கிலவழிக் கல்வி நிலை. இது தமிழினக் காவலர்கள் ஆட்சியில் நடைபெறும் கொடுமை.

**சற்று விளக்கம் தெரிந்த பெற்றோர்கள் போலியான ஆங்கில மோகத்தை நம்பி தனியார் பள்ளிக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பிவிட்டனர். 2000ஆம் ஆண்டில் 2000 ஆங்கில வழிப் பள்ளிகள். ஆனால் இன்று எத்தனை என்று தெரியவில்லை. தனியார் பள்ளிகள் பெருகப் பெருக அரசு தொடக்கப்பள்ளிகள் மூடுவிழா கண்டு வருகின்றன. ஆசிரியர்களின் 96% விழுக்காட்டினரின் பிள்ளைகள் அவர்கள் பணியாற்றும் பள்ளிகளில் படிப்பதில்லை. காரணம் அவர்கள் கற்றுக் கொடுக்கும் கல்வியின் தரம் எப்படி என்பது அவர்களுக்குத் தெரியும்.**

எனவே தங்கள் பிள்ளைகள் பின்தங்கிவிடக் கூடாது என்பதற்காகத் தனியார் பள்ளிகளுக்கு அனுப்பி விடுகின்றனர். இன்றைய நிலையில் அரசு தொடக்கப் பள்ளிக்கு வருபவர்கள் மிகவும் பின்தங்கிய ஏழை எளியவர்களின் பிள்ளைகள்தான். அவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகள் பள்ளியில் படிக்கிறார்களா? பள்ளியில் ஒழுங்காகச் சொல்லிக் கொடுக்கிறார்களா? என்பது

பற்றியெல்லாம் அறியார். பள்ளிக்குப் போனால் படித்து விடுவார்கள் என்று நம்பும் பிள்ளைப் பூச்சிகள். அவர்கள் பிள்ளைகள் கல்வியில் சற்றுப் பின்தங்கித்தான் இருப்பர்.

இன்னொரு கேடு ஆசிரியர்ளுக்குப் பயிற்சி கொடுக் கிறோம் என்று கூறிக்கொண்டு, ஆண்டு முழுவதும் பயிற்சி என்ற பெயரில் ஆசிரியர்களின் பள்ளிப் பணி பாதிக்கும்படியாக நாள்களை வீணாக்குவது. இது மிகப் பெரிய கேடு.

இவர்களுக்குக் கல்வியில் ஆர்வமும் இல்லை. ஆர்வத்தை உண்டாக்கும் சூழலும் இல்லை. இதுபோன்ற பள்ளிகளில் மாணாக்கர்களைத் தேர்ச்சி செய்தாக வேண்டுமே? அதற்கு ஒரு வழி வைத்திருக்கிறார்கள். தொடக்கப்பள்ளி மாணவர்கள் எல்லோர்க்கும் தேர்ச்சி தரவேண்டும் என்று அரசே கூறிவிட்டது. தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலோ, தேர்விற்கு வரும் கேள்விகளை முன்கூட்டியே சொல்லி அதற்குரிய பதில்களை நன்கு படித்துக் கொள்ளுமாறு சொல்லி விடுவது. அப்படிச் செய்தால்தான் குறைந்த அளவு மதிப்பெண்ணாவது வரும். அவர்களை அடுத்த வகுப்புகளுக்குக் கடத்த முடியும். தமிழ்நாட்டில் சிற்றூர்ப் புறங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் தொடக்கக் கல்வி நிலை இவ்வாறுதான் உள்ளது. கல்விக்காக இத்தனை ஆயிரம் கோடி செலவு செய்கிறோம் என்று அரசு பெருமையாகச் சொல்லிக் கொள்கிறது. ஆனால் பயனைப் பற்றிக் கவலை இல்லை. இதே நிலை நீடித்தால் அரசு தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் சிற்றூர்ப் புறங்களில் மூடவேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்போது இந்த ஏழை எளியவர்கள் எழுதப் படிக்கக்கூடக் கல்விபெறும் நிலை தடைபட்டுப் போகலாம்.

அரசுத் தொடக்கப் பள்ளிகளின் கல்வி பாழாவதற்கு அரசின் தவறான கொள்கைகள்தான் காரணம். இன்றைய நிலையில் இந்த நாட்டில் எந்த அரசும் நாட்டு மக்கள் கல்வி, பொருளாதாரம் நமது சூழலுக்கேற்ற அறிவியல் வளர்ச்சி மூலம் அதற்கான கல்வியை வழங்கி முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் கிடையாது. மக்களை ஏமாற்றப் பல பிச்சைக்காரத் திட்டங்களைச் சொல்லி மக்களை மயக்கி வாக்குகளைப் பெற்றுத் தங்களின் அதிகாரத்தை நிலைப் படுத்திக்கொள்ள வேண்டும். அதன்மூலம் அதிகாரம் பெற்ற ஆரவார வாழ்க்கை அதைப் பயன்படுத்திப் பணத்தைக் குவிக்கவேண்டும் என்பதுதானே ஒழிய, நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ அவர்களுக்குச் சிறிதும் கவலை கிடையாது. எந்தத் திட்டமும் வாக்குச்சீட்டை அடிப்படையாகக் கொண்டதுதான்.

**ஒருநாட்டின் வளர்ச்சிக்குஅடிப்படையாய் இருப்பது கல்வி. பல்துறை அறிஞர்களையும், அறிவியலாளர்களை யும் உருவாக்குவதற்கு அடிப்படையாய் இருப்பது தொடக்கக் கல்வி. ஆனால் நமது தொடக்கக் கல்வி இத்தகைய பாழான நிலையில் இருக்கிறது. ஆங்கிலக் கல்வி பயில்வோர் இங்கிருந்துகொண்டு வெளிநாட்டுக் கனவுகளுடன் வளர்பவர்கள். இவர்களால் இந்நாட்டிற்குப் பயன் இல்லை. இவர்கள் முடத்தெங்கு போன்றவர்கள். இவைகளுக் கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருப்பது, சொந்த வளங்களை வளர்க்க, சொந்த மொழியில் சிறந்த அறிவியலை வளர்க்கச் சிறிதும் எண்ணாத ஆட்சி முறை.**

நாட்டின் அனைத்து நிலைகளிலும் தமிழ் கட்டாய மாக்கப்படவேண்டும். தொடக்க நிலையில், நிர்வாகமும் செம்மைப்படுத்தப்படவேண்டும். ஒன்றிய அளவில் கல்விக் குழு அரசியல் சார்பற்ற முறையில் அறிஞர்கள், நேர்மையான பொதுநோக்குடையவர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். பொறுப்பற்ற ஆசிரியர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படவேண்டும். தேர்வு நடத்தும் முறை கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும். பள்ளிகளில் ஒழுங்கு முறை கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

அரசின் கல்விக் கொள்கையில் இத்தகைய மாற்றங்கள் செயல்படுத்தப்படல் வேண்டும். இல்லாவிடில் தொடக்கக் கல்வி மேலும் பாழாகும் என்பது திண்ணம். ●



## மொழிப்போர் ஈகியர் நாள்

1938இல் முதல் மொழிப்போரில் உயிர்நீத்த நடராசன், தாளமுத்து ஆகியோரின் நினைவிடத்தில் (மூலக் கொத்தளம் இடுகாட்டில்) 25.1.2009 அன்று காலை 10 மணிக்கு தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் ஊர்வலமாகச் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. வாலாசா வல்வன் வரவேற்புரை ஆற்றினார். புலவர் கி.த. பச்சையப்பன், இராசேந்திர சோழன், வண்ணை நக்கீரன், வழக்குரைஞர்கள பாவேந்தன், புகழேந்தி, வடிவு உள்ளிட்டோர் உரையாற்றினர்.

# தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும்

## ஈழ வான்படையின் தற்கொலைத் தாக்குதல் வீரர் இறுதி வேண்டுகோள்

**கொழும்பு, பிப். 23.** கொழும்பு நகரில் விமானம் மூலம் பறந்து சென்று தற்கொலைத் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலி ரூபன், தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து இருக்கின்றார்.

**கடைசிக் கடிதம்**

நேற்று முன்தினம் இலங்கை தலைநகர் கொழும்புமீது விடுதலைப்புலிகளின் 2 விமானங்கள் பறந்து சென்று தற்கொலைத் தாக்குதல் நடத்தின அல்லவா?

இதில் விடுதலைப் புலிகளின் விமானப் படையைச் சேர்ந்த கேனல் ரூபன், கேனல் சிரித்திரன் ஆகியோர் வீர மரணம் அடைந்தனர்.

இவர்களில் ரூபன், தற்கொலைத் தாக்குதலுக்குப் புறப்படும் முன் கடைசியாகத் தமிழக மக்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் கடிதம் எழுதி இருந்தார்.

தமிழக மக்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:

**முத்துக்குமார் இட்ட தீ**


எனது அன்பிற்கும், பெரு மதிப்பிற்கும் உரிய தமிழக மக்களே! மற்றும் புலம்பெயர் மக்களே! மாவீரர்கள் மாவீரர்ளாகப் போகின்ற நாங்கள் உங்களுக்குத் தலை வணங்குகின்றோம். நீங்கள் எழுச்சிகொண்டு உங்களது உறவுகளாகிய எமது மக்களின் அழிவைக் கண்டு நடத்தும் போராட்டங்களைக் கேட்டு மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் அடைகின்றார்கள்.

'மாவீரன்' முத்துக்குமார் இட்ட தீ இன்று அய்.நா. வாசலில்கூடப் பரவியிருக்கின்றது. இப்பொழுதுதான் தமிழரின் பிரச்சினை உலகத்தின் காதுகளில் விழத் தொடங்கியுள்ளது. எனவே எமது தமிழினத்தின் விடிவிற்கு நீங்கள் செய்யும் தொடர்ச்சியான போராட்டங்கள் பலம் சேர்க்கும்.

**ஒன்றுசேர்ந்து போராடவேண்டும்**

தமிழகத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும். அப்போதுதான் மத்திய அரசின் - உலகத்தின் - அய்.நா.வின் காதுகளில் விழும்.

மனம் தளரவிடாதீர்கள். தொடர்ச்சியாகப் போராடுங்கள் தமிழ் மக்களுக்கு விடிவு வரும்.



ரூபன்



சிரித்திரன்

நீங்கள் செய்த உதவிகளால்தான் எமது போராட்டம் வளர்ச்சியடைந்து நின்றது. அதனைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள். விடுதலைப் புலிகள் வேறு, மக்கள் வேறல்ல. இது மக்கள் போராட்டம் என்று உலகத்திற்கு எடுத்துக் கூறுங்கள்.

தினம் தினம் உங்களது உறவுகள் இங்கே கொல்லப் படுகின்றார்கள். அதிலும் கொடுமை இறந்தவரைக்கூட எடுத்து அடகங் செய்யமுடியவில்லை. மருந்தில்லை. உண வில்லை. உடையில்லை. உறையுளில்லை.

**கொடிய நோய்கள்**

எவ்வளவு கொடுமையான சிங்கள இராணுவ அரசு செய்கின்றது. தமிழரை வவுனியா திறந்த சிறைச்சாலைக்கு வரவழைத்துத் தமிழினத்தை அழித்து சிங்கள இனத்தை உருவாக்கப்போகின்றது. வன்னியிலே இருந்து உலக நிறுவனங்களையும், கடைசியாக செஞ்சிலுவைச் சங்கத்தையும் வெளியேற்றி எமது மக்களின் அவலம் வெளியே தெரியாவண்ணம் மூடிமறைக்க முயல்கின்றனர்.

விரைவிலே எமது மக்களிற்குக் கொடிய நோய்கள் பரவப் போகின்றது. இவற்றை நீங்கள் உலகத்திற்குத் தொடர்ச்சியாகப் போராடி எடுத்துக் கூறுங்கள். கேளுங்கள் தரப்படும். இல்லாவிட்டால் தட்டுங்கள் திறக்கப்படும்.

உலகத்தில் வாழ்ந்த யூத இன மக்கள் எல்லோரும் சேர்ந்து தங்களுக்கென்று இஸ்ரவேல் என்றொரு நாட்டை உருவாக்கியதுபோல் நீங்கள் எல்லோரும் சேர்ந்து தமிழீழத்தை அமைக்க, உருவாக்கத் தயாராகுங்கள்.

எமது மாவீரர்களின் கனவை நனவாக்குங்கள்.

இவ்வாறு ரூபன் எழுதியுள்ளார்.

**வன்னி மக்களுக்கு ...**

அதேபோன்று வன்னி மக்களுக்கும் ரூபன் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் விவரம் வறுமாறு :

போராளிகள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப் படுகின்றார்கள். யார் உருவாக்கியது? சிங்கள தேசம் எமக்குரியதை தந்திருந்தால் எமது தேசியத் தலைவர் ஆயுதமேந்த தேவை ஏற்பட்டிருக்காது.

இராணுவம் இடம் தெரியாம்ல போய்விடும்

நாம் விரும்பியோ, விரும்பாமலோ எம்மைப் போராட சிங்களதேசம் பணித்துவிட்டது. 30 வருடங்களாகப் போராடி உங்களது இறுதி இலட்சியமாம் தமிழீழத்தை அடையும் நேரம் வந்திருக்கும்வேளை, நீங்கள் போராட்டத்தை விடப்போகின்றீர்களா?

உங்கள் விடிவிற்காக நீங்கள்தான் போராடவேண்டும். நீங்கள் போராடாவிட்டால் உங்களுக்காக யார் போராடுவது? வன்னியில் இருக்கும் 2,50,000 பேரில் 50,000 பேர் போராட வலுவில்லாமலா இருக்கிறீர்கள்? சிந்தித்துப் பாருங்கள் 50,000 இளைஞர், யுவதிகள் போராட்டத்தில் இணைந்து போராடினால் சிங்கள இராணுவம் வந்த இடம் தெரியாம்ல பறந்திடும்.

**போராடுங்கள்**

அன்புக்குரிய தம்பி, தங்கை, அக்கா, அண்ணா உறவுகளே! போராட்டத்திற்கு வயதெல்லை கிடையாது. வயது பார்த்தா இராணுவம் உங்களைக் கொல்கின்றது. 1990ஆம் ஆண்டு 14 வயதில் நான் போராடப் புறப்பட்டேன். காரணம் இடம்பயர்வு பாடசாலை இல்லை. நாம் நிம்மதியாக வாழ எமக்கென்று ஒரு தேசம் வேண்டுமென்பதால். நீங்களும் அதேபோல்தான் நினைப்பீர்கள்.

உங்களது வலியை நேரில் தினம் தினம் கண்டு மனம் வெதும்பிக் குமுறுவதுபோல் இன்னொன்றையும் நினைத்து குமுறுகிறது. நீங்கள் தாங்குகின்ற வலியை உங்களது வயதில் நான் தாங்கவில்லை. அப்படியிருந்தும் என்னைப் போராட உந்தியது. ஆனால் நீங்கள் எவ்வளவோ வலியை ஏற்படுத்திய சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போராட ஏன் இன்னும் கிளர்ந்தெழாமல் இருக்கின்றீர்கள் என்பதை நினைக்க நினைக்க மனம் வெதும்புகின்றது.

சிங்கள இராணுவம் ஏற்படுத்திய வலி காணாதா? இன்னும் வலியை ஏற்படுத்தினால்தான் நீங்கள் போராடுவீர்களா?

**சிங்கள மக்கள் எதிரி அல்ல**

எமக்கும், சிங்கள இராணுவத்திற்கும்தான் யுத்தம், சிங்கள மக்களுக்கல்ல. ஆனால் இராணுவமோ எமது மக்களைக் குண்டுவீசிக் கொல்கின்றது. எமக்கும் சிங்கள மக்களைக் கொல்ல முடியும். சிங்கள மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் தலைவரைச் சந்தித்து குண்டு போடப்போகும்பொழுது திரும்பத் திரும்ப வலியுறுத்துவது மக்கள் மீதோ, மருத்துவ மனைகள் மீதோ தவறியும் குண்டு போடாதீர்கள் என்று, ஆனால் சிங்கள வான் கழுகுகள் எமது மக்களையும், மருத்துவ மனைகளையும் தேடித் தேடிக் குண்டு போடுகின்றது.

நாம் சிங்கள தேச மக்களுக்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றோம். தமிழினத்தை அழித்துவிட்டு நீங்கள் நிம்மதியாக வாழலாம் என்று கனவு காணாதீர்கள். எமது தலைவிதியை நாமே தீர்மானித்து உங்களுடன் ஒற்றுமையாக வாழத்தான் நாங்கள் விரும்புகின்றோம். இதைத்தான் நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். நாம் எமது மண்ணில் சுதந்தரமாக வாழத்தான் ஆசைப்படுகின்றோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் ரூபன் எழுதி இருக்கிறார்.

(நன்றி : தினத்தந்தி, 23.2.2009) •

**காஞ்சி மா.பெ.பொ.க. தோழர்**

**சேகர் மறைவுற்றார்**

காஞ்சி நகரத்தில் மா.பெ.பொ.க.வின் தீவிர ஆதரவாளராகச் செயல்பட்டுவந்த தோழர் சேகர் உடல்நலக் குறைவால் 7.02.2009 அன்று மறைந்தார். காஞ்சி மா.பெ.பொ.க. தோழர்கள் அரங்க. சானகிராமன், சி. நடராசன், மு. செயப்பிரகாசு, மா. கோதண்டபாணி, ஆ. சோதி, கா. பொன்னப்பன், இரமேசு, தீ. கோபால கிருட்டிணன், சா. கிருட்டிணன் ஆகியோர் சேகர் இல்லத்திற்குச் சென்று அவருடைய குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறினர். இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டனர்.

- செய்தி : மு. செயப்பிரகாசு

**குறும்படங்களுக்கான தமிழ் ஸ்டுடியோ.காம்**

**(www.thamizhstudio.com)**

**இணையதளம் அறிமுகம்**

தமிழில் ஒரு மாற்று ஊடகம் அமைக்கும் முயற்சி யில் தொடங்கப்பட்டதாகும். புதிய சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்து தொடர்ந்து செயல்படுகிறது. புதிதாகக் குறும்படத் துறையில் நுழைய விரும்புவோர்க்கு முழுமையான புரிதலை அளிக்கிறது. இளம் எழுத்தாளர் களை ஊக்குவிக்கும் தன்மையில் நல்ல பல செய்திகளும் அடங்கியுள்ளது. தொடர்பு கொள்ளுங்கள்.

# கோடீசுவர அரசியல்வாதிகள்!

- செம்பை சிதம்பரனார்

இந்தியாவில் அதிக அளவு வருமான வரி செலுத்தும் அரசியல் தலைவர் என்ற உயர்ந்த இடத்தை உத்தரப் பிரதேச முதல்வரும், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயாவதி அவர்கள் பிடித்துள்ளார். பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின்தலைவி எனக் கூறிக் கொள்ளும் மாயாவதிதான் மிகப்பெரிய பணக்கார அரசியல் வாதி என்ற செய்தியை அறிந்தபோது சற்று அதிர்ச்சிதான் வருகிறது. அவரிடம் உள்ள பணம் முழுவதுமே அவரது நண்பர்கள் பரிசாக அளித்த பணம்தான் எனக் கூறியுள்ளார். கோடிக்கணக்கில் வருமான வரி செலுத்தும் அளவிற்கு அன்பளிப்பாகவும், பரிசாகவும் ஒருவருக்குப் பணம் வருகிறது என்றால் நாம் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது.

பல செல்வந்தர்களும், தொழில் அதிபர்களும், பதவிக்காக அவ்வப்போது அரசியல்வாதிகளும் தங்களது காரியங்களைச் சாதிக்கவே ஒருவருக்குப் பரிசுகளும், அன்பளிப்புகளும் கொடுப்பது வழக்கம். எந்த வாரிசும் இல்லாத மாயாவதிக்கு இவ்வளவு பணம் தேவையா என்பதும் ஒரு கேள்வியே! ஆனாலும் வருமானத்தை மூடி மறைக்காமல் கணக்குக் காட்டி உரிய வரி செலுத்தியதற்காக வாவது அவரைப் பாராட்டியே ஆகவேண்டும்.

மாயாவதியைவிட எத்தனையோ பணக்கார அரசியல் தலைவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனல் அவர்கள் எல்லோரும் உண்மையான வருமான வரியைச் செலுத்திய வர்களா (அ) செலுத்துகிறார்களா என்றால், அது அவர்களின் மனச்சாட்சிக்கே வெளிச்சம். பண்ணை வீடு, சொகுசு பங்களா, புத்தம் புதிய மாடல்களில் விதவிதமான கார்கள், ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஓய்வெடுக்க எஸ்டேட்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பெட்ரோல் பங்க் உரிமம் என்று இன்னும் எத்தனையோ சகல வசதிகளுடன் இருப்போர்தான் நம் ஏழை மக்களின் இன்றைய அரசியல் தலைவர்கள். மக்களை நன்கு ஏமாற்றத் தெரிந்த இவர்களுக்கு வேசம் போடுவது என்பது ஒரு கைவந்த கலை. விவசாயிகளைப் பார்த்தால் அவர்களைப் போலவே தலையில் துண்டு கட்டிக்கொள்வார்கள்; ரம்ஜான் நோன்பு வந்தால் தலையில் குல்லா அணிந்துகொண்டு கஞ்சி குடிப்பார்கள். இதனைப் பார்த்துப் புல்லரித்துப் போன மக்கள் கண்ணை மூடிக்கொண்டு விட்டில் பூச்சிகள்போல வாக்களித்து விடுகிறார்கள். அதோடு அவர்கள் பணி முடிந்துவிடும்.

அதன்பிறகு அரசியல்வாதிகள் கோடிகோடியாக வருமான வரி செலுத்தும் அளவிற்குப் பணம் சம்பாதித்துக் கொண்டே இருப்பார்கள். ஏழை மக்கள் வாழ்வதற்கே வருமானம் இல்லாமல் கடனில் உழன்று தற்கொலையும் செய்துகொள்கிறார்கள். அரசியல்வாதிகள் ஒருமுறை ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துவிட்டாலே போதும்; அவர்களது ஏழு தலைமுறைகளும் செல்வாக்காக இருக்கும் அளவிற்குக் கணக்கில் காட்டியும், காட்டாமலும் வருமானம் தேடிக் கொள்வார்கள். அதுவும் ஆட்சி அமைக்கப் போதிய பெரும்பான்மை கிடைக்காத நெருக்கடி நேரங்களில் உதிரிக் கட்சிகளுக்கும், சாதிக் கட்சிகளுக்கும், அந்தந்தத் தலைவர் களுக்கும் ஏக மதிப்பு உண்டாகிவிடும். பேரம் படியாதபோது அவர்கள் கட்சி மாறி விடுவதும் உண்டு. தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யும் போது கம்யுனிஸ்டு வேட்பாளர் களைத் தவிரப் பெரும்பாலான கட்சி வேட்பாளர்களின் சொத்து மதிப்பு கோடிகளில்தான் இருக்கும். இவர்களது சொந்தப் பணத்திலிருந்து சல்லிக்காசு கூடப் பொதுப் பயன்பாட்டிற்கும், பொதுமக்களுக்கும் கொடுக்க மாட்டார்கள்.

இவர்களை எல்லாம் பார்க்கும்போது பி. கக்கன், கு.காமராசர், ப. ஜீவா போன்ற உன்னதமான தலைவர்கள்தான் நினைவிற்கு வருகிறார்கள். சாகும் தறுவாயில் உரிய மருத்துவம் செய்யக்கூட இயலாத நிலையில் இருந்தவர்தான் கக்கன் அவர்கள். தன்னுடைய வீட்டிற்கு, தனக்குத் தெரியாமலே தன்னுடைய வயதான தாய்க்காக நகராட்சி ஒரு குடிநீர்க் குழாய் போட்டதற்கே வன்மையாகக் கண்டித்து அப்புறப் படுத்தியவர்தான் பெருந்தலைவர் காமராசர். மாற்றுத் துணி இல்லாமல் துவைத்த துணி காயும்வரை காத்திருந்து பின்னர் அணிந்து கொண்டு பொதுக் கூட்டங்களுக்குச் சென்றவர்தான் ஜீவா.

இவர்கள் எல்லாம் மக்களுக்காக வாழ்ந்தவர்கள். இன்றைய அரசியல்வாதிகள் மக்களைச் சுரண்டி வாழ்கின்றார்கள்.

திருந்துவார்களா? மக்களும் - அரசியல்வாதிகளும்...?

•

## நீதிக் கட்சியின் வரலாறும் அவ் ஆட்சியின் அருஞ்செயல்களும்

வேலூரில் 21.02.2009 அன்று மாலை மேற்படி தலைப்பில் வாலாசா வல்லவன் அவர்கள் கருத்துரை ஆற்றினார். நிகழ்ச்சிக்கு பொறிஞர் கோ. சத்தியநாராயணன் தலைமையேற்றார். க. முகிலன் அறிமுக உரை நிகழ்த்தினார். மா.பெ.பொ.க. வேலூர் நகரச் செயலாளர் மோ.சி. சங்கர் வரவேற்புரையும், மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டத் துணைச் செயலாளர் லோ. இரத்தினகுமார் நன்றியுரையும் கூறினர்.

# ஈழத் தமிழர் தோழமைக் குரல் சார்பில் புது தில்லியில் ஆர்ப்பாட்டம் - பேரணி, மறியல்






ஈழத் தமிழர் தோழமைக் குரல் சார்பில் கீழ்க்காணும் நான்கு கோரிக்கைகளை வற்புறுத்தி இந்திய அரசுக்கு நெருக்குதல் தர 15.2.2009 ஞாயிறு காலை எழுத்தாளர் பா. செயப்பிரகாசம் ஒருங்கிணைக்க - தோழர். தியாகு தலைமையில் 200 தோழர்கள் சென்னை எழும்பூர் தொடர்வண்டி நிலையத்திலிருந்து புதுதில்லி நோக்கிப் புறப்பட்டனர். எழும்பூரில் அவர்களைத் தோழர் வே. ஆமைமுத்து, திரைப்படி நடிகர்கள் மன்சூர் அலிகான், இரமேஷ் கண்ணா உள்ளிட்டோர் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

17.02.2009 செவ்வாய் காலை 10 மணியளவில் புதுதில்லி மண்டி ஹாலில் இருந்து பேரணி புறப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து சென்ற தோழர்களுடன், புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர்கள் தோழர் ஆ. கலையரசன் தலைமையில் பங்கேற்றனர். மற்றும் பல்வேறு மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த ஆர்வலர்களும் ஊர்வலத்தில் உடன் வந்தனர். பேராசிரியர் சரசுவதி ஊர்வலத்தினரையும், ஊர்வல முழக்கங்களையும் நெறிப்படுத்தினார்.

இந்திய அரசே ...

.. இலங்கை அரசு நடத்தும் இனப் படுகொலைக்குத் துணைபோகாதே

.. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கு

.. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு

.. தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்புக் கொடு, கொல்லப்பட்ட தமிழக மீனவர்களுக்காக இலங்கை அரசின்மீது நடவடிக்கை எடு

என்ற முதன்மை முழக்கங்களைத் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழிகளிலும் எழுப்பியவண்ணம் புதுதில்லியில் மக்கள் நெருக்கம் மிகுந்த சாலைகள் வழியாக தோழர்கள் விண்ணதிர முழங்கி வீறுநடை போட்டனர். ஊர்வலத்தில் ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொள்ளாச்சி கிருட்டிணன், சிவகாசி இரவிச்சந்திரன் ஆகியோரும் உடன் வந்தனர். தில்லிப் பாராளுமன்றம் நோக்கி மறியல் செய்யப்போன தோழர்களை அங்கே பெருவாரியாகக் குவிக்கப்பட்டிருந்த காவல் துறையினர் பெரும் தடுப்புகளை ஏற்படுத்தி நுழைவாயிலேயே அடைத்து நின்றனர். நீண்ட நேரம் ஒலி முழக்கங்களை எழுப்பியும் அவர்கள் தளைப்படுத்த மறுத்துவிட்டனர்.

பின்னர் மாலை 5 மணிவரை போராட்டக் குழுவினர் அங்கேயே அமர்ந்து தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கிருட்டிணன், சிப்பிப்பாறை இரவிச்சந்திரன், பேராசிரியர் மருதமுத்து, பா. செயப்பிரகாசம், ஆ. கலையரசன், பேராசிரியர் சரசுவதி ஆகியோர் உரையாற்றினர். கவிஞர் தமிழேந்தி எழுச்சிக் கவிதை ஒன்றைப் படித்தார். மதுரையைச் சேர்ந்த ‘மையம்’ வீதி நாடகக் குழுவினர் ஈழ விடுதலை தொடர்பான எழுச்சிமிக்கப் பாடல்களையும், நாடகங்களையும் நடத்திக் காட்டினர். நிறைவாகத் தோழர் தியாகு நீண்ட விளக்கவுரை ஆற்றினார். இத்துடன் முதல் நாள் போராட்டம் முடிவுக்கு வந்தது. மறுநாளும் (18.2.2009 புதன்) தொடர்ந்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகியவை நடத்தப்பட்டன. இனவெறி பிடித்த இலங்கை அரசுக்கு எல்லா வகையிலும் உதவி வரும் இந்திய அரசு எதையும் கண்டு கொள்ளவில்லை. போராட்டக் குழுவினர் இந்திய அரசினர்க்கு தமிழக மக்களின் கடும் எதிர்ப்பை புதுதில்லியில் பதிவு செய்துவிட்டு 19.02.2009 வியாழன் காலை சென்னைக்குப் புறப்பட்டனர். இப்போராட்டக் குழுவில் மா.பெ.பொ.க. சார்பில் சி. பெரியசாமி, தமிழேந்தி, புதுதில்லி ஆ. கலையரசன் ஆகியோர் பங்கேற்றனர். •

## பெரியார் ஈ.வெ.ராமசாமி - நாகம்மை
### கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு தாம்பரம் நகரத்தின் சார்பாக நிதி அளித்தவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆல்மைட்டி அசோசியேட்ஸ், தாம்பரம் | 50,000/- |
| 2. | குபேரா ஜெய்சங்கர், தாம்பரம் | 1,00,000/- |
| 3. | சென்டிரிங் இரா.ப. கோவிந்தன், தாம்பரம் | 1,00,000/- |
| 4. | மா. சுப்பிரமணி - கஸ்தூரி, தாம்பரம | 1,00,000/- |
| 5. | ஆர்.ரவி - காஞ்சனா, தாம்பரம் | 50,000/- |
| 6. | தாயகம் சிட்பண்ட் பி. லிட்., தாம்பரம் | 50,000/- |
| 7. | திருமதி. தமிழ்ச்செல்வி பிரித்விகுமார், தாம்பரம் | 50,000/- |
| 8. | து. மணிவண்ணன் (மூலமாக), கிழக்கு தாம்பரம் | 25,000/- |
| 9. | ஆதிமாறன், தாம்பரம் | 10,000/- |
| 10. | கே. பாலாஜி, கவுரிவாக்கம் | 10,000/- |
| 11. | கிரவுன் கன்ஸ்ட்ரக்சன், மேடவாக்கம் | 10,000/- |
| 12. | ஸ்ரீலிங்கம் பில்டர்ஸ் & பிராபர்ட்டி டெவலப்பர்ஸ், பெருங்களத்தூர் | 10,000/- |
| 13. | என். மோகன், கிழக்கு தாம்பரம் | 10,000/- |
| 14. | திருமதி. லட்சுமி சீனிவாசன், செங்கல்பட்டு | 10,000/- |
| 15. | டி. கோகுலன், பதுவஞ்சேரி | 10,000/- |
| 16. | பொன். இராமச்சந்திரன், பம்மல் | 10,000/- |
| 17. | இனியவன், காந்தளகம், தாம்பரம் | 5,000/- |
| 18. | ஆர்.எஸ். இராசேந்திரகுராம், தாம்பரம் | 5,000/- |
| 19. | கே. ஏகாம்பரம், தாம்பரம் | 5,000/- |
| 20. | காரை எஸ். செல்வராஜ் | 5,000/- |
| 21. | மு. சம்பத், ஊ.ம. தலைவர், பெருமாட்டுநல்லூர் | 5,000/- |
| 22. | இலவக்குமார், கிழக்கு தாம்பரம் | 2,000/- |
| 23. | அறிவகம் சுரேஷ்குமார் | 2,000/- |
| 24. | தி.இரா. இரத்தினசாமி, தலைவர் தாம்பரம் மாவட்ட திராவிட கழகம், சேலையூர் | 1,000/- |
| 25. | என். பாபு, தாம்பரம் | 1,000/- |
| 26. | பி. ஸ்ரீதர், தாம்பரம் | 1,000/- |
| 27. | ஏ. முருகேசன் | 1,000/- |
| 28. | கி. கரிபால்டி, தாம்பரம் | 1,000/- |
| 29. | க. உமாபதி, தாம்பரம் | 1,000/- |
| 30. | து. மேகநாதன், தாம்பரம் | 1,000/- |
| 31. | கே.ஆர். தாமோதரன் | 1,000/- |

## திருத்தங்கள்

2009 பிப்பிரவரி இதழில், அட்டை 3ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள **தமிழீழ முத்து** என்னும் கவிதை, தமிழேந்தி எழுதியது. **தலைவன்** என்னும் கவிதை, அறிவுமதி எழுதியது. இவை, பெயர் மாறி வெளியிடப்பட்டுள்ளன. தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர் குழு

# பகைக் கனவுகள் தகரும் ...

**- கவியன்பன்**

தமிழனே! தமிழனே! தமிழகத் தமிழனே!
தமிழினம் மாய்வதைக் காணடா - நம்
தமிழகம் இருப்பதும் வீணடா - அந்த
உமியினம் சிங்களம் புலியினம் அழிப்பதை
பார்க்கிறாய் தமிழனும் நீயா? - இல்லை
பதவிக்குக் கால்தூக்கும் நாயா?

காட்டிலும் மேட்டிலும் பதுங்கு குழியிலும்
கலங்கியே வாழ்கிறார் நித்தமே - அட
சாவுக்குக் கொடுக்கிறார் முத்தமே - தமிழ்
நாட்டிலும் ஏட்டிலும் பேசினாய் எழுதினாய்
கிழித்தது என்னடா மூடா - நீ என்ன
நக்கியே அசைபோடும் மாடா?

வீசிடும் குண்டுகள் வெடித்திடும் துப்பாக்கி
வீணர்கள் நித்தமும் தாக்கவோ - நம்
விடலைகள் நெருப்பினில் பூக்கவோ - மனம்
கூசிடும் கொலைவெறி கொளுத்திடும்தீப்பொறி
கொட்டத்தை அடக்கடா எழுந்து - நீ
கொதித்தெழுந் தால்தீக் கொழுந்து

சிங்களன் தமிழனை தூசென எண்ணியே
சிற்றெறும் பாய்நமை வதைக்கிறான் - ஈழத்
தீவெலாம் தனதெனக் கதைக்கிறான் - அட
செங்களம் ஆடவும் சேதுவை மாற்றவும்
வெங்கனல் ஏந்துவோம் கண்ணிலே - ஈழ
வெற்றியை நாட்டுவோம் மண்ணிலே.

கிளிநொச்சி போனாலும் புலிநக்கி வாழாது
முல்லைத்தீவு வீழினும் எழுகுவோம் - இனியும்
முன்னேற்றம் நிற்காது தொடருவோம் - அட
கிளியான பெண்கூட்டம் புலியாக நிதம்மாறி
கிழக்கினை நோக்கியே நகரும் - பகைக்
கூட்டத்தின் கனவுகள் தகரும்! •

## பெரியார் பெருந்தொண்டர் திருவண்ணாமலை வையாபுரி மறைந்தார்

முதுபெரும் பெரியார் பெருந்தொணடர் திருவண்ணாமலை வையாபுரி (வயது 87) அவர்கள் 16.2.2009 அன்று மறைவுற்றார். அவரை இழந்து வாடும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு மா.பெ.பொ.க. தம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துகொள்கிறது.

# எதிரிகளிடமிருந்து கற்போம்

- அ, தட்சிணாமூர்த்தி

அமெரிக்காவினால் இந்தியாவிற்கு எந்தப் பயனும் இல்லாவிட்டாலும், இந்திய ஆளும் வர்க்கங்களும் அவர்களுக்கு ஆலோசனைகள் சொல்லும் அதிகார வர்க்கங்களும் அமெரிக்காவிற்கு எப்பொழுதும் ஜே போட்டுக் கொண்டுதான் உள்ளன. ஏனெனில், உலக மக்களைச் சுரண்டும் பணக்காரர்களுக்கு அந்நாடு புகலிடமாக உள்ளது. இந்தியப் பணக்காரர்களின் பிள்ளைகளில் பெரும் பாலானோர் அங்குதான் படிக்கின்றனர் - வேலைகளைச் செய்கின்றனர் - வசிக்கின்றனர். இந்திய ஏழைமக்கள் கொடுக்கும் வரிப்பணத்தில் உயர் கல்வி படிப்போரில் பெரும் பாலானோர் அங்குப்போய்த்தான் பணி செய்கின்றனர். ஏனெனில், அங்குதான் கூலி அதிகமாகக் கொடுக்கின்றனர். ஏழை வாங்கினால் கூலி, படித்தவன் வாங்கினால் ஊதியம்.

இப்பொழுது அந்தக் கூலிக்கும் காய்ச்சல் வந்துவிட்டது! அதாவது, உடல் நலமில்லை! அங்கு செல்வோர்க்கெல்லாம் தேசப்பற்று தேவையில்லையாம்! இந்தியாவில் இப்போது மூலைக்கு மூலை தேசப்பற்று நாறிக் கொண்டுள்ளது! இங்கே தேசப்பற்றைப் பற்றி அதிகமாகப் பேசுபவர்கள் எல்லாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளல்லர்! 'ஏண்டா அயோக்கியத்தனம் செய்கின்றாய்' என்று கேட்டால், கேட்பவனுக்கு 'தேசப் பற்று' இல்லையாம்! அமெரிக்காவுக்கு இப்பொழுது காய்ச்சல் வந்துவிட்டதால், பெரிய பெரிய தனியார் நிறுவனங் களெல்லாம் - வங்கிகள் எல்லாம் மஞ்சள் கடுதாசிகளைக் கொடுக்கத் தொடங்கிவிட்டன. வாங்கிய கடனை எந்த அமெரிக்கனும் செலுத்தத் தயாராக இல்லை! திருப்பிச் செலுத்த அவனால் முடியவும் இல்லை.

அமெரிக்க வேளாண்துறை உணவுப் பாதுகாப்புத் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அமெரிக்கா வில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதற்குமுன் 6 இலட்சத்து 91 ஆயிரம் குழந்தைகள் பட்டினியால் வாடுவதாக 2007ஆம் ஆண்டு வெளியான செய்திகளில் குறிப்பிட்டிருந்தனர். பின்னர் இது 8 இலட்சமாக உயர்ந்தது! அதன்பின்னர் பட்டினி நிலைமை படிப்படியாக வளர்ந்து 3 கோடியே 55 இலட்சம் என்ற அளவிற்கு உயர்ந்தது. அமெரிக்காவின் மக்கள்தொகை 30 கோடிதான். அதில் 10 விழுக்காட்டினர் பல்வேறு நாடுகளிலிருந்து குடியேறியவர்கள்.

பங்குச் சந்தை என்பது குதிரைப் பந்தயச் சூதாட்டம் போன்றதே. "ஊரான் ஊரான் தோட்டத்திலே... ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்கா... காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி காயிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்" என்றொரு நாட்டுப்பாடல் தமிழகத்தில் புழக்கத்தில் உண்டு. அதே வேலையத்தான் இப்பொழுது 'பங்கு' என்ற போர்வையில் செய்யப்படுகிறது. இதில் முதலீடு செய்தவர்களில் பெரும் பாலானோர் பணத்தை இழந்து ஓட்டாண்டிகளாகி விட்டனர்.

இங்கும், அங்கும் இலட்சங்களைக் கொடுத்த மாணவர்கள் படித்து முடிப்பதற்கு முன்பே அவர்களின் கனவில் தெரிந்த நிறுவனங்களெல்லாம் காணாமல் போய்க்கொண்டுள்ளன. பொறியியல் கல்லூரிகளுக்கு நேரிடையாகச் சென்று தகவல் தொழில்நுட்பத் துறை மாணவர்களை வலைவீசிப் பிடித்தவர்களெல்லாம் வலைகளைத் தூக்கிப் பரணைகளில் போட்டுவிட்டனர். மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தவர்கள் கூட அது வேண்டாமென்று பொறியியல் படிப்பைத் தேர்ந் தெடுத்தனர். இப்பொழுது செய்வதறியாது திகைக்கின்றனர். தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியா சீனாவை விஞ்சி விட்டதாகப் பெருமைப்பட்டனர். ஊழியர்களுக்கு அளவிற்கு அதிகமாக ஊதியம் கொடுத்தனர். இன்று ஆட்குறைப்புச் செய்யத் தொடங்கிவிட்டனர்.

இப்பொழுது மஞ்சள் கடுதாசி நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு நிதியுதவியைச் செய்கின்றது. அந்த நிதி பொது மக்களின் வரிப் பணமாகும். அப்படியானால் முதலாளித்துவம் தோற்றுவிட்டதையும், அதுவே சிறந்த தத்துவம் என்று சொன்ன தவறையும் முதலாளித்துவ அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். ஒரு பொருளை கார்ல் மார்க்சு 'பொருள் வடிவத்திலுள்ள உழைப்பு' என்றார். அப்பொருள் மனிதனால் ஆக்கப்பட்டது. இப்பொழுது மனித உழைப்பைக் கணினிகள் செய்யத் தொடங்கிவிட்டன. அந்தக் கணினியும் மனித உழைப்பால் உருவானதுதான். இது மிகவும் ஆபத்தானது. அறிவு வளர்ச்சி என்று சொல்லி மனித ஆற்றலைக் கேவலப்படுத்துகின்றனர். இந்த நவீன உயர் தொழில்நுட்ப முதலாளித்துவம் ஊழல்களுக்கும் - சுரண்டல்களுக்கும் வழி வகுக்கின்றது.

அறிவு வளர்ச்சியின் பயன்கள் அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்துகொடுப்பதாக இருக்க வேண்டும். மனித ஆற்றலை முடக்குவதாகவும் இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பறிப்பதாகவும் உள்ள கணினிகளை வேலையில்லாத இளைஞர்கள் அடித்து நொறுக்கித் தெருவில் வீச வேண்டும். சில தவிர்க்க இயலாத வேலைகளுக்கு மட்டும் அதுவும் சில துறைகளில் மட்டும் கணினியைப் பயன்படுத்தினால் போதும்.

தற்கால இளைஞர்கள் சாதிக் கட்சிகளில் இணைந்து விட்டனர். கிரிக்கெட், இரசிகர்களாகி வாழ்க்கையை வீணாக்குகின்றனர். கடைசியில் பிழைக்க வசதியில்லாமல் கொலை, கொள்ளை, கடத்தல்களில் ஈடுபடுகின்றனர். •

## ஈழத் தமிழருக்காகச் சிறைசென்றவர் மாரடைப்பால் மறைவுற்றார்




சென்னை பம்மல் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் நா.வை. சொக்கலிங்கம். இவர் "**யாதும் ஊரே**" என்ற மாத இதழின் ஆசிரியராக இருந்து வருகிறார். இவரின் மகன் திருவள்ளுவர் (எ) அறிவழகன் (41). இவர், ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவந்தார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப்படை, ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்ததைக் கண்டிக்கும் வகையில் இளைஞர்கள் சிலர், சென்னை கத்திப்பாராவில் உள்ள நேரு சிலையைத் தகர்க்க முயன்றனர். இதில் கைது செய்யப்பட்டவர்களில் அறிவழகன், குணத்தொகையன், ஈகவரசன், தமிழ் முகிலன், பொழிலன், இளங்கோ உள்ளிட்டோரும் அடங்குவர்.

அதன்பின்னரும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவந்த அறிவழகன், இப்போது இலங்கையில் நாள்தோறும் நடக்கும் போர்க் கொடுமையால் ஈழத் தமிழர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டுவருவதை நினைத்து நினைத்துப் புலம்பிக்கொண்டே இருந்தார். இந்த நிலையில் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் இவர் 7.02.2009 அன்று மறைவுற்றார்.

பழ. நெடுமாறன், கோ. சாமிதுரை, தியாகு, உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன், விடுதலை க. இராசேந்திரன், சங்கமித்ரா, ஓவியா, ஜா. பூபாலன், சு. சுரேசுகுமார், சீராளன், கவிஞர் தமிழ்பாபு, எஸ்.ஆர். இராசா, எம்.எஸ்ரா, மீ.அ. வைத்தியலிங்கம் (மு.ச.ம.உ.), வே. கருணாநிதி, வன்னி அரசு, குணத்தொகை, புலவர் த. சுந்தரராசன், பெருங் கவிக்கோ வா.மு. சேதுராமன் முதலானோர் இரங்கல் ஊர்வலத்தில் பங்கேற்றனர். வே. ஆனைமுத்து, குபேரா செய சங்கர் 9.02.09 காலையில் நேரில் சென்று ஆறுதல் கூறினர்.

## ஆனைமுத்துவின் அணுக்கத்தோழர் தொண்டர் மு. இராமச்சந்திரன் மறைவுற்றார்



முந்தைய தென்னார்க்காடு மாவட்டத்தில் பொதுத் தொண்டில் தன் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டவர் குப்பங்குழி முத்துக் குமரன். இவரின் புகழ் அப்போதைய திருச்சி மாவட்டத்திலும் பரவியிருந்தது. நாட்டு உரிமைப் போராட்டத்தில் தொடங்கி, நடப்பு நிலைவரை கடலூர் மாவட்ட வரலாற்றில் இவரின் பணிகளை யாரும் பிரித்துப் பார்க்க முடியாதபடி இவரின் குடும்பம் "**தொண்டர் குடும்பம்**" என்ற முகவரியையும் முத்திரையையும் பெற்றுள்ளது.

இவரின் இணையற்ற திருமகன் இராமச்சந்திரன் சேவையில் தந்தையை மிஞ்சியவர். சிதம்பரம் வட்டம் புளியங்குடியிலும், பூந்தோட்டத்திலும் தந்தை பெரியாரைப் பார்த்ததும் அவரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அறிஞர் ஆனைமுத்து அவர்களின் அன்புக்குரிய தோழராகி துவளாமல் தொண்டாற்றினார். தோழர் வே. ஆனைமுத்து காட்டு மன்னைக்கு வந்தால், இவரைக் கட்டாயம் சந்திப்பார்.

பல்துறை வித்தகரும் - பாமரரின் பற்றாளருமான தொண்டர் மு. இராமச்சந்திரன் தன் 91ஆவது அகவையில் 7.02.2009 (சனி) இரவு அவரது இல்லத்தில் மறைவுற்றார். உடனடியாக வே. ஆனைமுத்து தொலைபேசி வாயிலாக இரங்கல் தெரிவித்தார்; 24.2.2009 காலை நேரில் சென்று குடும்பத்தினர்க்கு பண்ருட்டி பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் தி.க. வேல்முருகன் கட்சியினரோடு நேரில் வந்து ஆறுதல் கூறினார். தொண்டரின் மக்கள் இராசா ராமன், முத்துக் குமரன், இமயவரம்பன் மற்றும் அனை வர்க்கும் ஆறுதல் கூறினர். அனைத்துத் தரப்பினரின் அருமை நாயகனான தொண்டரின் தொண்டினை அவரது மக்கள் தொடருவதே தந்தைக் காற்றும் இரங்கலும் - நன்றியுமாகும்.

- செய்தி : சலுப்பை கி. பாஷ்யம்

# பன்னாட்டு அரசீர் ...

- பொறிஞர் அகன்

தூக்கிலிடு; தூக்கிலிடு; பக்சேயைத் தூக்கிலிடு!
தூக்கிலிடு துணைபோகும் வஞ்சகரைத் தூக்கிலிடு!

எந்தமிழர் இனத்தைக் கொன்றழிக் கின்றான்;
பெண்டிரைச் சிதைத்துக் குலைத்தழிக் கின்றான்;
சின்னஞ் சிறாரைத் தீய்த்தழிக் கின்றான்;
புன்மைக் கொடூரன் சிங்களக் கயவன் - தூக்கிலிடு ...

தமிழினம் அழித்திட வெறிகொண் டலையும்
திமிரன் பார்ப்பனன், சிங்களன் இணைந்து
சமரினைத் தொடுத்து வேதியல் நஞ்சுப்
பாச்பரக் குண்டுகள் பொழிகின் றானே! - தூக்கிலிடு ...

இந்திய இழவுப் பார்ப்பன ஆட்சி
எந்தமிழ் இனப்பகை என்பதைக் காட்டி
சிங்கள நரிக்குப் போர்க்கலன் தந்து
எங்கள் தமிழினம் அழிக்கின் றானே! - தூக்கிலிடு ...

குர்துஇன மக்களைக் கொன்றழித் ததனால்
சதாமைத் தூக்கில் கொன்றதை முறையெனும்
அமெரிக்க, ஆங்கில, பன்னாட்டு அரசீர்!
புஷ்ஷினுங் கொடியவன் சிங்களக் கேடனே - தூக்கிலிடு ...

புலிப்படை மறவரே எம்மினக் காவல்!
புலியினர் அமைத்துள ஈழத்தை ஏற்பீர்!
தமிழினம் குலைக்கும் போரினைத் தடுப்பீர்!
நிமிர்வாய் இரங்குவீர்! எம்துயர் களைவீர்! - தூக்கிலிடு •

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

**புருசோத்தமன் - ராதா**

2.02.2009 காலை 9 மணிக்கு சிறுகாவேரிப் பாக்கம் கிராமம் ஸ்ரீ சத்ய நாராயணா திருமண மண்டபத்தில் ஆர். புருசோத்தமன் கே.இ. இராதா ஆகியோரின் வாழ்க்கைத் ஒப்பந்தவிழா, மா.பெ.பொ.க. சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையில் நடைபெற்றது.

திருமணத்திற்கு சி.வி.எம்.ஏ. சேகர், பி.எம். குமார், அரங்க. சானகிராமன், புஞ்சை வில்லவன், டி.பி. முருகேசன், கே.முனுசாமி, சி. நடராசன், நாத்திகம் நாகராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆர். நரசிம்மன் நன்றியுரை ஆற்றினார்.

**கவுதமன் - சீதாலட்சுமி**

8.02.2009 அன்று வாழப்பாடி சேசன்சாவடியில் உள்ள வசந்தமகால் திருமண மண்டபத்தில், சேலம் மாவட்டம் அ. வாழப்பாடி வி. சுகுமார் - வ. அமிர்தம் இணையரின் மகன் கவுதமன், சேலம் மாவட்டம், புள்ளா கவுண்டன்பட்டி எஸ்.ஆறுமுகம் - சந்தான லட்சுமி இணையரின் மகள் சீதாலட்சுமி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெற்றது.

**பண்பொழில் பல்லவன் - விஜீலா**

23.02.2009 அன்று மாலை சென்னை வடபழனி கிரீன் பார்க் ஓட்டலில், சென்னை கே.எஸ். முத்துசாமி இ.ஆ.ப. - மு. மருதம் இணையரின் மகன் பொறிஞர். பண்பொழில் பல்லவன், வேலூர் டி. செல்வராசு - செ. அமுதா இணையரின் மகள் பொறிஞர். விஜீலா ஆகியோர் திருமண வரவேற்புவிழா நடைபெற்றது.

**இராசா ஆனந்த் - சாமுண்டீசுவரி**

15.02.2009 அன்று காலை திருச்சி சிதம்பரம் மகாலில், கீழப் பழுவூர் செ. நாராயணன் - தமிழரசி இணையரின் மகன் இராசா ஆனந்த், திருவெறும்பூர், எ. சக்திவேல் - மணிமேகலை இணையரின் மகள் அம்மு (எ) சாமுண்டீசுவரி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெற்றது.

**சஞ்சய் சம்பத் - தீபலட்சுமி**

மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் ஈ.வெ.கி.ச. இளங்கோவன் - வரலட்சுமி இணையரின் மகன் சஞ்சய் சம்பத், இராணிப்பேட்டை ஜி. இராதாகிருஷ்ணன் - ஜெகதா இணையரின் மகள் தீபலட்சுமி ஆகியோரின் திருமண வரவேற்புவிழா, 4.2.2009 அன்று சென்னை எழும்பூர் இராணி மெய்யம்மை திருமண அரங்கில் இனிதே நடைபெற்றது. வே. ஆனைமுத்து தம் தோழர்களுடன் பங்கேற்றார்.

## மணமகள் தேவை



| | | |
|---|---|---|
| பெயர் | : | **கோ. சித்தார்த்தன்** |
| பிறந்த தேதி | : | 30. 5. 1972 |
| கல்வி | : | AMIE |
| தொழில் | : | உதவிப் பொறியாளர்<br>நெய்வேலி நிலக்கரிக் கழகம்<br>(மத்திய அரசு நிறுவனம்) |
| மாத வருவாய் | : | உரு. 25,000/- |
| உயரம், நிறம் | : | 168 செ.மீ. - சிவப்பு |
| சாதி | : | தந்தை - நத்தமன் உடையார்<br>தாயார் - வன்னியர் |
| கைப்பேசி | : | 94437 87303 |

**நூல் அறிமுகம்**

## வருமுன் காப்போம் - கருவறையிலிருந்தே...

**- மருத்துவர் க. கோபால்**

தரமான மருத்துவ நூல்கள தமிழில் மிகவும் அரிதாகவே வெளிவருகின்றன. அப்படி வெளிவரும் நூல்களிலும் நல்ல மொழிநடை இருப்பதில்லை. ஆயின் அரும்பாவூர் மருத்துவர் கோபால் வழங்கியுள்ள இந்த நூல் தமிழுக்கு ஓர் அருங்கொடையாகும். செழுமையான தனித்தமிழ் நடையில் திருக்குறள் கருத்துகளை நூல் முழுவதும் பெய்து உடலோம்பலுக்கு ஒரு வழிகாட்டி ஏடாக இஃது அமைந்துள்ளது. நோய்த்தடுப்பு, நலவாழ்வு, நலப் பகை, உறுப்புக்கொடை என நான்கு பெரும் பிரிவுகளாக நூலைப் பகுத்து அரிய படங்கள், அறிவியல் விளக்கங் களுடன் திறம்படச் செதுக்கியுள்ளார். சிறந்த மருத்துவ நூலை இயல்பான இலக்கியத் தமிழில் படித்த மகிழ்ச்சி நெஞ்சம் முழுவதும் நிரம்பி வழிகிறது. விலை ரூ. 140/-

நூல் பெற : தமிழ்மண் பதிப்பகம், 2. சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17.

## ஈழத்தில் போர் நிறுத்தம் செய்ய ...

### வேலூரில் உண்ணாநோன்பு




ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை இனவெறி அரசின் போரை நிறுத்தக்கோரி தோழர். தொல். திருமாவளவன், 15.1.2009 அன்று முதல் மறைமலை நகரில் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போது, அதற்கு வலிமையூட்ட 17.1.2009 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யினரும், மற்ற இயக்கத் தோழர்களும் ஒருநாள் உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் தோழர் சா. குப்பன் இந்திய அரசைக் கண்டித்து உரையாற்றினார். அன்று மாலை மா.பெ.பொ.க. வேலூர் தோழர்கள் எட்டுப் பேர் மறைமலை நகர் சென்று தோழர். திருமாவளவன் அவர்களைச் சந்தித்து தம் ஆதரவைத் தெரிவித்தனர்.

### காஞ்சியில் பொதுவேலைநிறுத்தம்

காஞ்சியில் 4.2.2009 புதன்கிழமை ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், ஈழத்தில் நடைபெறும் தமிழ் இனப் படுகொலையையும், போரையும் தடுத்து நிறுத்த இந்திய அரசு தலையிட்டுத் தடுக்கக் கோரிப் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது.

பொது வேலை நிறுத்தம் அமைதியான முறையில் நடைபெற ஈழத் தமிழர் பாதுகாப்புஇயக்கம் காந்தி சாலை தேரடி அருகில், ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒலி முழக்கம் கொடுத்தபோது காவல்துறையினர் சுற்றிவளைத்து பா.ம.க, ம.தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள், மக்கள் மன்றம், மா.பெ.பொ.க, தமிழக இளைஞர் முன்னணி ஆகிய அமைப்பினரைப் பொது இடத்தில் ஒன்று கூடியதற்காக 72 தோழர்களை சுமார் பத்து மணியளவில் கைது செய்தனர். ஏ.கே.ஜி. திருமண மண்டபத்தில் வைத்திருந்து மாலை ஆறு மணிக்கு விடுவித்தனர். •

## தன்மான இயக்க மூத்த தோழர் செந்தலை ச. நடராசன் மறைவுற்றார்



புலவர் செந்தலை ந. கவுதமனின் தந்தையாரும், சுயமரியாதை இயக்க மாக இருந்த 1944ஆம் ஆண்டி லிருந்து தன்மான இயக்கச் செயல் வீரராகவும் தஞ்சை மாவட்டம் செந்தலை திராவிடர் கழகத் தலைவராகவும் இருந்தவரான - தோழர் ச. நடராசன் தம் 86ஆம் வயதில் கோவை - சூலூரில் தம் மகன் இல்லத்தில் 7.2.2009ஆம் நாள் இயற்கை எய்தினார். அவர் கண்கள் மருத்துவ மனைக்குத் தானமாக வழங்கப்பட்டன.

இரங்கல் நிகழ்ச்சியில் கோவை மு. இராமநாதன், கு.வெ.கி. ஆசான் முதலியோர் உரையாற்றினர். சூலூரில் நடந்த இரங்கல் நிகழ்ச்சியிலும் படத்திறப்பு நிகழ்ச்சியிலும் கோவை மாவட்ட முற்போக்கு இயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

தமிழகக் கால்நடைத் துறை அமைச்சர் பொங்கலூர் நா. பழநிச்சாமி, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் முதலியோர் நேரில் வந்தும், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தொலைபேசியிலும் இரங்கல் தெரிவித்தனர்.

மறைந்த தோழர் ச. நடராசன் நினைவாக "சிந்தனை யாளன்" வளர்ச்சி நிதியாக ஆயிரம் உருபா தோழர் வே. ஆனைமுத்துவிடம் 20.2.2009இல் குடும்பத்தினர் நேரில் வழங்கினர்.

திராவிடர் கழகக் கொடி போர்த்தப்பட்டு எந்த மதச் சடங்கும் இன்றி நடராசன் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

- செய்தி : க. தேவராசு, சூலூர். •

## அண்ணா நூற்றாண்டுவிழா - கலைஞர் விருது வழங்கும்விழா

சென்னை செம்மொழித் தமிழ்ப் பேரவையின் சார்பில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டுவிழா - கலைஞர் விருது வழங்கும் விழா மாம்பலம் ஆ. சந்திரசேகர் திருமண மண்டபத்தில் 24.02.2009 அன்று மாலை நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு முன்னாள் மேயர் சா. கணேசன் தலைமை ஏற்றார். முன்னாள் ச.ம.உ. ஜெ. அன்பழகன் வரவேற்புரை ஆற்றினார். முகம் மாத இதழின் ஆசிரியர் முகம் மாமணி அவர்களுக்கு செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி அவர்கள் செம்மொழித் தமிழ்க் கலைஞர் விருதும், பொற்கிழியும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆய்வுரை நிகழ்த்தினார். தஞ்சை கூத்தரசன், சி.நா. சண்முக சுந்தரம் வாழ்த்துரை வழங்கினர்.

## முறம்பு பாவாணர் கோட்டத்தில் பாவாணர் பிறந்தநாள் விழா




மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு நாட்டிலேயே முதன்முதலாய் முழு உருவச் சிலையும் கோட்டமும் அமைத்த முறம்பு மண்ணில் 8.02.2009 ஞாயிறன்று பாவாணர் பிறந்தநாள விழா எழுச்சியோடு நடைபெற்றது. காலை 9 மணியளவில் தொடங்கிய பேரணியை முனைவர் அரணமுறுவல் தலைமை ஏற்று வழிநடத்தினார். 10 மணியளவில் ஆசிலாபரம் விக்னேசு திருமண அரங்கில் தொடங்கிய விழாவில் ஊர்ப் பொது மக்களுடன் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்த தனித்தமிழ் அனபர்களும் பாவாணர் பற்றாளர்களும் பங்கேற்றனர்.

தங்கவயல் கி. வெற்றிச் செல்வன் கொடியேற்றினார். பாவலர் ம. முத்தரசு கண் காட்சியைத் தொடங்கி வைத்தார். விழாவிற்குத் தாமரை பெருஞ்சித்திரனார் தலைமை ஏற்றார். வெற்றிக்குமாரன் வரவேற்க, அ. இளங்கண்ணன் தொடக்க உரையாற்றனார். ஆய்வுக்களம், உணர்ச்சிப் பாக்களம், பாராட்டுக் களம், பட்டிமணடபக் களம், விருதுக் களம் என நாள் முழுவதும் நடந்த பல்வேறு அரங்குகளில் பங்கேற்றுப் புலவர் இறைக் குருவனார், சாத்தூர் சேகரன், பேராசிரியர் அறிவரசன், சுபாசு சந்திரபோசு, தமிழேந்தி உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். தமிழ்த் தொண்டர் நாயகம் விருதுபெற்ற புலவர் ஆ. நெடுஞ்சேரலாதன், தமிழர் நாள்காட்டி வெளியிட்ட சிவகாசி சிவநாதபாபு உள்ளிட்டோர் விழாவில் பாராட்டப்பட்டனர்.

பாவாணர் அறக்கட்டளைக்கு ஓரிலக்க ரூபாய் வழங்கிய இரா. ஆறுமுகச்சாமிப் பாண்டியன், குடும்பத் தினர்க்கு விருது வழங்கப்பட்டது. கடலூர் கதிர் முத்தையன் அவர்களுக்குப் பாவாணர் கொள்கைப் பரப்புநர் விருது வழங்கிப் பேராசிரியர் கு. அரசேந்திரன் நிறைவுரை ஆற்றினார். புலவர் ஆ. நெடுஞ்சேரலாதன் விழாவை முன்னின்று நடந்த, இல. நிலவழகன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா ...

### ஆ. அருள்மொழிச் செல்வன் - சோ. சங்கீதா



மா.பெ.பொ.க. சேலம் மாவட்டச் செயலாளர் செ. ஆனையப்பன் - பூங்கோதை இணையரின் மகன் ஆ. அருள்மொழிச்செல்வன், ஓமலூர் சோமு - பூபதி இணையரின் மகள் சோ. சங்கீதா இவர்களின் வாழ்க்கை ஒப்பந்தவிழா 22.2.2009 அன்று சேலம் வன்னியகுல சத்திரியர் திருமண மண்டபத்தில் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. சேலம் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் ப.மு. சாந்தானந்தம், சேலம் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் நரசிங்கபுரம் ச. சக்கர வர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தோழர்கள் எம்.இராஜு, சங்கமித்ரா, பா. மோகன், ஆ. முத்தமிழ்ச் செல்வன், பொறிஞர் கு. வெங்கடேசன், சி.இரா. சபாநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மியான்மர் (பர்மா), யாங்கோனில் தமிழர் அறநெறிக் கழகத்தின் முப்பதாம் ஆண்டு முப்பெருவிழா

பர்மா, யாங்கோனில் 15.02.2009 அன்று தமிழர் அறநெறிக் கழகம் எடுத்த அறிவுலக மேதை அறிஞர் அண்ணா நூற்றாண்டுவிழா!, கல்வியைச் சமுதாயம் கண்டு கொள்ளாதபோது கண்டெடுத்த குழந்தைகள் விழா!, மியான்மர் பொன்னேட்டில் தமிழுக்கு வரலாறு எழுதும் நல்விழா! என முப்பெரு விழா நடைபெற்றது.

தொடராக முப்பது ஆண்டுகள் தமிழுக்கு சிறப்புடன் தொண்டாற்றிவரும் அறநெறிக் கழகத்தின் தலைவர் கோ. கலைச்செல்வன் தலைமையில் தமிழ்நெஞ்சன் நா.க. இராசேந்திரன் விழாவினைத் தொடக்கி வைத்தார். தாய்மொழியாம் தமிழைத் துறக்காத கோவை காமாட்சிபுரி சித்தர்பீட ஞானகுரு சிவலிங்கேசுவர சுவாமிகள் அறிவுரை வழங்கினார். விழாக்குழுத் தலைவர் எல்.ஆர்.ஜி. இளங்கோவன் ஒருங்கிணைந்து விழாவினை சிறப்புரச் செய்தார்.



# ஆசிரியருக்கு மடல்கள்...

### தமிழனின் வீரம்

இந்த ஆண்டு சல்லிக்கட்டு என்ற அய்ந்தறிவு காளைகளோடு, ஆறறிவு காளைகள் மல்லுக்கு நின்று மாண்டுபோகும் அவலம் நீங்க உச்சநீதிமன்றம் தடை விதித்தது மிகச் சரியே!

கேட்டால் தமிழர் வீரம் என்கின்றனர். ஈழத்தில் வெந்தழியும் அப்பாவி தமிழ் மக்களின் நிலைகுறித்துப் பேசினால் அது உள்நாட்டுப் பிரச்சினை என்போர் இதனை வீரம் என்கின்றனர். உயர் கல்வியில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு தேவையில்லை என உச்சநீதி மன்றம் கூறிய போது கண்டிக்கத் தவறிய மறத் தமிழன் சல்லிக்கட்டிலேதான் தன் வீரம் வெளிப்படும் என்பது மடமையிலும் மடமை!

- **வ. வெங்கடேசன்**, காஞ்சிபுரம்.

### வன்மையாகக் கண்டிக்கிறேன்

வணக்கம். மா.பெ.பொ.க.வின் 2009ஆம் ஆண்டைய வேலைத் திட்டமாக இந்தியாவிலும், தமிழகத்திலும் பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசுக் கட்சியை ஒழிப்பதை முதன்மைப் பணியாகக் கொள்ளவேண்டும் என்று அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். தமிழகக் காங்கிரசுக் கட்சியினர் அன்றும், இன்றும் தமிழுக்கும், தமிழ்த்தேசிய இனத்திற்கும் விரும்பத் தக்கவர்களாக நடந்துகொண்டதே இல்லை. இன்றைய ஈழவிடுதலை ஆதரவுப் போராட்டங்களுக்கு எதிரிகளாகப், பயனில் சொல் பாராட்டும் பதடிகளாக காங்கிரசார் செயல்படுவது வருத்தமாக இருக்கிறது.

ஈராக் நாட்டின்மீது அமெரிக்கா படையெடுத்துப் பேரழிவை உண்டாக்கியதுபோல் இந்தியப் பேரரசு சிங்கள இனவெறி அரசுமூலம் தமிழ் ஈழத்தில் மிகப்பெரிய பேரழிவை உண்டாக்கி வருவதை உலகத் தமிழர்கள் உணர்ந்து போராடுகின்றனர். ஆனால், தமிழகத்தில் மொழிப்பற்றோ, இனப்பற்றோ இல்லாத மூடர்கள் ஒன்றுபட்ட இலங்கை என்றும், அதற்குள் தீர்வு காணவேண்டும் என்றும் கருங்காலிக் கட்சிகளும் கயவர்களும் வஞ்சகச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்திய அரசே போரை நிறுத்து! ஈழ மக்களைக் காப்பாற்று! என்று கடந்த நான்கு மாதங்களாக நடத்தப்பட்டப் போராட்டங்கள் பயனற்றுப் போய்விட்டன. மீண்டும் செக்கு மாடென சில கட்சிகள் இலங்கைத் (ஈழத்) தமிழர் பாதுகாப்பு இயக்கம் என்பதும், அமைதியாக உண்ணாநிலைப் போராட்டம் என்பதும், போராட்ட உணர்வை மழுங்கடித்துத் தங்கள் இயலாமையை வெளிப்படுத்தும் போலித்தனங்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புடன்,

- **இர. அரங்கநாடன்**

### கியூப நாடாவது ஈழப் போராட்டத்தை ஆதரிக்கக் கூடாதா?

பிப்பிரவரி சிந்தனையாளனில் பிடல் காஸ்ட்ரோ பற்றி இரண்டு கட்டுரைகள் வந்துள்ளன. அவற்றைப் பற்றி என் கருத்துகள்.

உலக நாடுகள் அவை கூறினாலும் - நான் தமிழர்களைக் கொல்வதை நிறுத்தமாட்டேன் எனக் கொக்கரிக்கிறார் இராசபக்சே. இன்று ஒவ்வொரு நாளும் வான் வழியில் பாசுபரசு குண்டுகள் போட்டுக் கொத்து கொத்தாய் ஈழத் தமிழர் கொல்லப்படுகின்றனர்.

உலகில் எல்லா நாடுகளுக்கும் இது தெரியும். தமிழகத்தில் நாள்தோறும் ஆர்ப்பாட்டம், உண்ணாநோன்பு, பலர் தீக்குளிப்பு என நடந்து வருகின்றன.

இந்திய அரசுதான் போரை நடத்துகின்றது என்பது வெளிப்படை. பிடல் சில நாடுகளுக்கு இராணுவ உதவி செய்தார் என்பது தங்கள் இதழிலும் உள்ளது. ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாய் நடந்துவரும் ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி இன்றுவரை பிடல் கருத்துத் தெரிவிக்கவில்லை. அவர் அமெரிக்காவை எதிர்த்து அந்த நாட்டுக்கு அருகிலேயே ஆட்சி புரிந்து வருகிறார். அத்தகைய பிடல் இந்தியாவை எதிர்த்து ஈழத்துக்கு ஆதவாய்க் குரல் கொடுக்கக் கூடாதா? (யாசர் அராபத் ஈழ விடுதலைப் போர் வென்றாகவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.) மாந்த நேயத்துடன் போரை நிறுத்து! மக்களைக் கொல்லுவதை நிறுத்து! என்றாவது பிடல் கூறியிருக்கலாம்.

- **தமிழ்ச்சேரன்**, வேலூர்.

### முத்துக்குமாருக்கு வீர வணக்கம்

பிப்பிரவரி மாத இதழில் சிங்கள அரசுக்கு இராணுவ உதவிகள் செய்து வருவதை விளக்கும் படங்களை வெளி யிட்டமை சிறப்பு. ஆசிரிய உரை, ஈழத் தமிழர்கள் கொல்லப் படுவதற்கு உதவிடும் இந்திய அரசினர்க்கு எதிர்ப்புத் தெரிவித்து வீர மரணம் அடைந்த வீரத் தமிழன் முத்துக் குமாருக்கு எங்களது வீரவணக்கம், வாழ்க தமிழ்!

- தமிழ்முழக்கம்,

**அ. காஜாமைதீன்**

## குடிஅரசு ஏட்டுக்கு முதல் மதிப்புரை

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. இது பிரதி ஞாயிற்றுக் கிழமைதோறும் ஈரோடினின்று வெளிவந்துலவுகிறது. இது தனது பெயருக்கேற்ப அன்னிய ஆட்சியின் அடிமைத் தனத்திலிருந்து நம் தேய மக்கள் விடுதலை பெற்று சுதந்திர வீரர்களாய் தேச முன்னேற்றத்தையே தன்னேற்றமாகக் கொண்டுழைக்குமென்பதை நாம் ஈண்டு விரித்து எழுதவேண்டியதில்லையென நினைக்கின்றோம்.

இதன் ஆசிரியர்கள் ஸ்ரீமான்களான ஈ.வெ.இராமசாமி நாயக்கர், வா.மு.தங்கப்பெருமாள் பிள்ளை இவ்விரு தேசபக்த சிரோன்மணிகளை தமிழ் உலகு நன்றாயறியும். இவ்விரு உத்தமர்களும் காங்கிரசு நிர்மாண திட்டங்களைப் பூர்த்தி செய்ய கடந்த மூன்றாண்டாக, தமிழ்நாட்டில் இடைவிடாமல் விடாமுயற்சியுடன் தொண்டாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஊர் ஊராயும், வீடு வீடாயும் சென்று காங்கிரசு நன்னோக்கங்கள் பரவிப் பலனுறப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அவ்வறிஞர்கள், பத்திரிகை மூலமாயும் தங்கள் தொண்டையாற்ற முன் வந்திருப்பதற்குப் பெரிதும் பாராட்டுகிறோம். இப்பத்திரிகையின் முதல் பிரதி கிடைக்கப் பெற்றோம். இதில் பல அருமையான வியாசங்களும் அபிப்பிராயங்களும் குறிப்புகளும் அமைந்துள்ளன. ஏழை முதல் தனவந்தர்கள்வரை எல்லோரும் எளிதில் வாங்கி வாசிக்க வேண்டுமென்று பரோபகார சிந்தனையுடன் இதன் சந்தாவை மிகவும் சொற்பமாக வருடத்திற்கு ரூபாய் மூன்று என ஏற்படுத்தியிருக்கிறார்கள். உயர்ந்த நோக்கமும், பரந்த எண்ணமும் கொண்டு தேச விடுதலையை நாடி சலியாது உழைக்கும் அரிய மேதாவிகளால் நடத்தப்பெறும் இப்பத்திரிகையைத் தமிழ் நாட்டினர் யாவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

**(- நாடார்குலமித்திரன், 1925 சித்திரை 29)**

## ஓர் இலக்கம் நிதியளிப்பு



தாம்பரம் சென்ட்ரிங் இரா.ப. கோவிந்தன் குடும்பத்தினர் பெரியார் ஈ.வெ.ராமசாமி - நாகம்மை அறக்கட்டளைக்கு ஓர் இலக்கம் நிதி வழங்குகிறார்.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மார்ச்சு 2009

| | | | ரூ. |
|---|---|---|---|
| அட்லாண்டிக் **இரா. குப்புசாமி** | கரூர். | ... | 1000 |
| புலவர். **துரை. பச்சைமுத்து** | நல்லானபாளையம் | ... | 1000 |
| புலவர் **ப. இராமராசு** | ஒகளூர் | ... | 1000 |
| **தயாளசாமி** | திருச்சி | ... | 1000 |
| மரு. **சா.மா. அன்புமணி** | களமருதூர் | ... | 1000 |
| கவிஞர் **தமிழேந்தி** | அரக்கோணம் | ... | 500 |
| **ச. சம்பந்த சிவக்குமார்** | காஞ்சி | ... | 500 |
| நாளை விடியும் **இர. அரசெழிலன்** | | ... | 500 |
| **அ. இராமலிங்கம்** | விருத்தாசலம | ... | 500 |
| **மணிமுத்து, விசுவநாதன்** | பொள்ளாச்சி | ... | 400 |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | ... | 300 |
| **வீரமணி கலையரசி** | கிருட்டிணகிரி | ... | 200 |
| பேராசிரியர் **ச.பொ.சீனிவாசன்** | திருவனந்தபுரம் | ... | 200 |
| **பாண்டிச்செல்வன்** தம் பிள்ளைகள் பிறந்தநாள் மகிழ்வாக | | ... | 200 |
| முனைவர் **அ.ஆறுமுகம்** | திருமழபாடி | ... | 100 |
| **சீ.இலக்கியா-சீ.அகிலா** | சென்னை | ... | 100 |
| **சி.வெற்றிச்செல்வன்** | செங்கம் | ... | 100 |
| திருமதி **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | ... | 100 |
| **பா.வை.அருண்மொழி** | சென்னை | ... | 100 |
| **அ.செல்வராணி** | சென்னை | ... | 100 |
| சென்ட்ரிங் **இரா.ப.கோவிந்தன்** தாம்பரம் | | ... | 100 |
| **மா.சுப்பிரமணி-கஸ்தூரி** | தாம்பரம் | ... | 100 |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | ... | 100 |
| பாவலர் **சி. தமிழ்மணி** | அரியலூர் | ... | 100 |
| **தி.இர. விசயன்** | திருக்கோவிலூர் | ... | 100 |
| **சு. லோகநாதன்** | காஞ்சிபுரம் | ... | 100 |
| **அ. செங்கொடி** | அரியலூர் | ... | 100 |
| **சி. வெற்றிச்செல்வன்** | செங்கம் | ... | 100 |
| **த. தியாகராசன்** | அரியலூர் | ... | 100 |
| **க. அறிவொளி** | சென்னை | ... | 50 |
| **வ. வேம்பையன்** | மறைமலைநகர் | ... | 50 |
| **வி.நடராசன்** | கீழ்ப்பென்னாத்தூர் | ... | 50 |
| **ஓர் அன்பர்** | சென்னை | ... | 50 |
| பொறிஞர். **இரா. அசோகன்** | முருக்கன்குடி | ... | 50 |
| **இ. கபிலன்** | திருவேட்களம் | ... | 50 |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்சு 2009

| | | | |
|---|---|---|---|
| **தி. துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | ... | 1000 |
| **புலவர் இரா. கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | ... | 100 |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | ... | 50 |
| **ப.ம. அதியமான்** | திட்டக்குடி | ... | 50 |
| **ப.ம. மதிஒளி** | திட்டக்குடி | ... | 50 |
| **நாத்திகன் சாமி** | அம்மையார் குப்பம் | ... | 50 |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | ... | 50 |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | ... | 50 |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | ... | 50 |
| **பொ. சுப்பிரமணி** | கீழ்ப்பென்னாத்தூர் | ... | 50 |
| **கோ. கோதண்டராமன்** | கீழ்ப்பென்னாத்தூர் | ... | 50 |
| **அ. பெரியசாமி** | சென்னை | ... | 50 |
| **சி. பெரியசாமி** மா.பெ.பொ.க. சென்னை மா. செயலாளர் | | ... | 200 |


இதழில் கதைகள், கட்டுரைகள் மற்ற செய்திகள் அனைத்தும் ஆசிரியர் குழுவின் முடிவிற்கு உட்பட்டது.
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே. ஆனைமுத்து - 19. முருகப்பாதெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 600 005.
அச்சிட்டோர்: பெரியார் - அச்சிடுவோர், வெளியிடுவோர் குழுமம். சென்னை-600 005. ☎ 044 - 2852 2862. கைபேசி: 94448 04980

## சம உரிமைக் காவலர்கள்


மார்க்சு



லெனின்


சிங்காரவேலர்


பெரியார்

## சமூக நீதிக் காவலர்கள்


புலே


பெரியார்


அம்பேத்கர்


லோகியா

### கொள்கை முழக்கம்

- அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! — *மார்க்சு, எங்கெல்சு*
- ஒடுக்கப்பட்ட தேசிய இனமக்களே ஒன்று சேருங்கள்! — *இலெனின்*
- ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே ஒன்று சேருங்கள்! — *பெரியார் ஈ.வெ.இரா.*

### மார்ச்சு 2009இல் நலம் சேர்த்தோருக்கு

## நன்றி! நன்றி! நன்றி!

சிந்தனையாளன் மாத இதழுக்கு உருவா 1,000 செலுத்தி வாழ்நாள் உறுப்பினராகத் தங்களை இணைத்துக் கொண்டோர்,

1. **சு. இராமசாமி சுகந்தி**, கோவை
2. **மு. கோவிந்தசாமி**, பொன்பரப்பி குடிகாடு
3. நடிகர் **மன்சூர் அலிகான்**, நுங்கம்பாக்கம், சென்னை.
4. **க. தங்கராசு**, மகேந்திரகிரி
5. **தென்னமநாடு இராமசாமி - மாரியம்மாள் அறக்கட்டளை**, தஞ்சாவூர்

## முழுநேரப் பணியாளர் தேவை

**சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சிந்தனையாளன் (மாத ஏடு) அலுவலகத்துக்கு, முழுநேரப் பணியாளர்தேவை.**

1. பட்டம்பெற்ற ஆடவரோ, மகளிரோ விண்ணபிக்கலாம்.
2. பெரியாரிய - அம்பேத்கரியப் பற்றாளராக இருத்தல் வேண்டும்.
3. சென்னை மாநகரைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.
4. மகளிர் திருமணம் ஆனவராக இருத்தல் முதன்மையானது.

**31.03.2009க்குள் விண்ணப்பிக்கவேண்டும்**

**தகுதிக்கு ஏற்ற ஊதியம் அளிக்கப்படும்.**

***விண்ணப்பிக்க முகவரி :***

ஆசிரியர் - "**சிந்தனையாளன்**" மாத இதழ்
19. முருகப்பாதெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி : 044 2852 2862.

# உள்ளே ...


தலையங்கம்

**அனைத்து நாடுகள் குற்றவியல் நீதிமன்றத்தில் முறையீடு செய்வோம்!**
– வே. ஆனைமுத்து

கட்டுரைகள்

**ஈழ விடுதலைச் சிக்கல் பற்றிய மா.பெ.பொ.க.வின் நிலைப்பாட்டை எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள்!**
– வே. ஆனைமுத்து

**வைரத்தைப் பட்டை தீட்டிவிட்டால் கண்ணாடியின் கதி என்னாவது?**
– இராமியா

**இடதுசாரி இயக்கங்களும் சாதிகள் ஒழிப்பும்**
– மழவன்

**உயிர்கள் படைக்கப்பட்டவையா? படிநிலை வளர்ச்சியில் பரிணமித்தவையா?**
– க. முகிலன்

**பாவிகளும் அப்பாவிகளும் ... ?**
– வழிப்போக்கன்

**தேசிய இனங்களின் விடுதலை**
– வடக்கு மாங்குடி பா. மோகன்

**என்னைச் சுட்டது "தீண்டாமை" - தொட்டது "வகுப்புரிமை"**
– வே. ஆனைமுத்து

**தமிழகத்தில் அரசுத் தொடக்கக் கல்வி பாழாகிவிட்டது. அது ஏன்?**
– சோ.க. அறிவுடைநம்பி

**கோடீசுவர அரசியல்வாதிகள்!**
– செம்பை சிதம்பரனார்

**எதிரிகளிடமிருந்து கற்போம்**
– அ, தட்சிணாமூர்த்தி

கவிதைகள்

**தமிழ்ப்படை ஆளும்!**
– தமிழேந்தி

**விடுதலைக்குக் குரல் கொடுப்போம்!**
– பாவலர் வையவன்

**ஒதுக்கீடு உயர்கல்வியில் இல்லையாம்!**
– குளமுற்றத்து மருதநாடன்

**பகைக் கனவுகள் தகரும் ...**
– கவியன்பன்

# விடுதலைக்குக் குரல் கொடுப்போம்!

நெருப்புக்குப் பிறந்தவர்கள்
தமிழர்கள்

கடலில் முத்துக் குளிக்கும்
தூத்துக்குடித் தமிழன்தான்
உடலில் தீக் குளித்து
உலுக்கிவிட்டான் உலகத்தை.

பதவியைத் துறக்காமல்
பலவிளக்கம் பேசியிங்கு
சுதப்பிடும் தலைவர்களின்
சூரத் தனம் பிடிக்காமல்...
உயிரைத் துறந்திங்கு
உயர்ந்துவிட்டான் முத்துக்குமரன்.
தொடர்கிறது பட்டியல்
எரிகின்றார் எம்தமிழர்.

மொழிப்போர் ஆயினும்
இனப்போர் ஆயினும்
உடனே தீப்பற்றி
எரிகின்றார் தமிழர்கள்

தீமேல் நீரூற்றி
அணைக்கின்றார் தலைவர்கள்

தில்லியுடன் ஒரு கையும்
ஈழத்துடன் ஒரு கையும்
ஒரே நேரத்தில் குலுக்குகின்றார்
குடும்பத்துடன் தலைவரிங்கே

தனி ஈழமே தீர்வு என
தளராமல் போராடுகின்றார்
தமிழீழ விடுதலைப் புலிகள்

இங்கோ
ஈழத் தமிழர்கள் என்றுகூடஅல்ல
இலங்கைத் தமிழர்கள் என்றுதான்
புலம்பித் திரிகின்றார்
இந்திய விடுதலைப் போலிகள்

இந்திய இறையாண்மைக்கும்
இலங்கை இறையாண்மைக்கும்
குந்தகம் இல்லாத உங்கள்
குரல்களின் கூப்பாடு ...

புலிகளுக்கு ஆறுதலாயிருக்கலாம்
ஆனால் ஆதரவாயிருக்காது.

ஆதரவு என்றாகிவிட்டால்
விடுதலைக்குக் குரல்கொடுங்கள்
தமிழீழ விடிவுக்கு வழி கொடுங்கள்.

பொங்கும் தமிழர்களின் நரம்புகளில்
இன்னும் மிச்சமிருக்கிறது வீரம்.
உடலின் குருதிக் குழாய்களில்
ஓடுகிறது தீப்பிழம்பு.

கொழுந்து விட்டெரியும் அத் தீயில்
கொழும்பும் எரியும் ஓர்நாள்.

சூழ்ச்சியாய்த் தமிழரைக் கொல்லும்
சோனியா முண்டமே!

உன் முக்காடுக்குள் மறைந்திருக்கும்
மூர்க்கத்தனம் விளங்கிவிட்டது.

காங்கிரசுக் கட்சிக்கோ
அதைக்
கூட்டணியில் சேர்த்துக்கொள்ளும் கட்சிகளுக்கோ
வாக்களிக்கப் போவதில்லை – என
தெருவெங்கும் பேசிக்கொள்கிறார்கள்

நீ
இராசபக்சேயைவிடக்
கோடிமடங்குக் கொடுமையானவள்
உன்னைவிடக் கொடுமையானவள்
எங்கள் ஊர் பாப்பாத்தி

தமிழினப் பகைவர்களாகிய
நீங்கள் இருவரும்
கூட்டணி சேர்ந்தாலும்
வியப்பதற்கொன்றுமில்லை

வா!
அதற்காகத்தான் பந்தி பரிமாறி
பாய் விரித்திருக்கிறாள்,
அம்மா!

நாங்கள்
எதற்கும் அஞ்சமாட்டோம்.

நெருப்புக்குப் பிறந்தவர்கள்
தமிழர்கள்

**இனி ...**
**தமிழீழச் சிக்கலும்**
**தமிழினச் சிக்கலும்**
**தலைவர்களின் கைகளில் இல்லை**
**அது..**
**தமிழர்களின் கைகளில் உள்ள ...**

**- பாவலர் வையவன்**